GOKULAM

கோகுலம்

டிசம்பர் '95 ரூ. 5.00





JOIN THE DIAMOND BOOK CLUB
AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________

____

POST OFFICE ______ PIN CODE ______

I am sending Rs. 10/- by M.O./ enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________


Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

INDIA'S LARGEST SELLING COMICS – DIAMOND COMICS

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). **Hyderabad** : • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore** : Sapna Book Stall, Gandhi Nagar • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut** : Remami Agencies P.O. Arakinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut





கோகுலம்

டிசம்பர் 1995

மலர் : 13 இதழ் : 11

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும். - பாரதியார்.



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். அரையாண்டுத் தேர்வுகளுக்கு படிக்க ஆரம்பித்து விட்டிருப்பீர்களே? கோகுலம் வாசகர்களான உங்களுக்கு, திட்டமிட்டுப் படிக்க வேண்டும் என்று தனியாக அறிவுரை கூற வேண்டிய அவசியமே இல்லையே. அன்று நடக்கும் பாடங்களை உடனுக்குடன் அன்றே படிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கோகுலத்தில் வந்துள்ள எத்தனையோ கதைகள் நாடகங்களை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.


இந்த மாதம் கிறிஸ்துமஸ் பண்டிகை வரும் மாதமாயிற்றே. கிறிஸ்துமஸின் சிறப்பை விளக்கும் பகுதிகள் இந்த இதழில் வெளியாகின்றன. புவனா தேடிய புதையலில் புதிய திருப்பம் வரப் போகிறது. 'சாட் பீட் கீத்', இரண்டாவது வெற்றியைக் காண்கிறார்கள்.

கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்தி, காசு கொடுத்து வாங்க வையுங்கள். கிறிஸ்துமஸ் கொண்டாடும் வாசகர்கள் அனைவருக்கும் மனமார்ந்த கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்.

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



கோகுலம்

1995 டிசம்பர்

இந்த இதழில்


கூந்தலழகி (படக்கதை) பக்கம் - 33






பூனை மூஞ்சுறைத் தின்னுமா? பக்கம்— 7

குமாரும் குட்டியானையும் – பக்கம் – 71





காட்டில் கிறிஸ்துமஸ் - பக்கம் - 12



என்னாண்ணே உடற்பயிற்சி செய்கிறீர்கள்!

என் உடம்பு ரொம்ப குண்டா இருக்குதுன்னு எல்லாம் கேலி பண்றாங்க!

— எம். கே. வேங்கவேல்



இவ்வளவு நல்ல திறமை இருந்தும் ஏண்டா உன்னைப் பெட்ரோல் பாங்கு வேலைக்கு வேண்டாம்னு சொல்லிட்டாங்க?

நான் ஒரு அறிவுச் 'சுடர்'னு யாரோ சொன்னதை வைச்சி முன் எச்சரிக்கை நடவடிக்கையா வேண்டாம்னுட்டாங்களாம்!

— ஆர். சண்முகசுந்தரம்

''ஓடும்போது கால்ல கனுக்கு விழுந்துடிச்சிடா.''

''எங்கேடா விழுந்திச்சு...? வா... தேடிப்பார்க்கலாம்!''

— சீர்காழி விரேவதி.





கிறிஸ்துமஸ் துளிகள்



• டிசம்பர் 25-ஆம் நாளை உலக மெங்கும் உள்ள கிறிஸ்துவப் பெருமக்கள், ஏகபிரான் அவதரித்த நாளாகக் கொண்டாடுகிறார்கள்.

• விழாக் கொண்டாட்டங்களில் குழந்தகளை மிகவும் கவர்பவை சேன்டா கிளஸ் என்ற கிறிஸ்மஸ் தாத்தாவின் பெயரால் அளிக்கப் படும் பரிசுகள், பரிசுப் பொருள்களைத் தாங்கிய அழகு மிக்க கிறிஸ் மஸ் மரம், கிறிஸ்மஸ் கேக். கிறிஸ்மஸ் தாத்தா, இரவில் கண்ணுக்குப் புலப்படாமல் வந்து தங்கள் பூட்ஸ் சாக்ஸில் பரிசுப் பொருள்களை நிரப்பி விட்டுப் போவார் என்ற நம்பிக்கை.

• உச்சியில் ஜொலிக்கும் நட்சத்திரம் ஒளிர, வண்ண பல்புகள், குண்டுகள், பளபளக்கும் ஜிகினாப் பூக்கள், தோரணங்களால் கிறிஸ் மரம் அலங்கரிக்கப்படுகிறது. வீட்டில் உள்ளவர்களுக்கும், சுற்றத்தாருக் கும் உரிய பரிசுப் பொருள்கள் இதில் தொங்க விடப்படுகின்றன. பல குடும்பங்கள் கூடி இதை ஒரே இடத்தில் கொண்டாடும் வழக்கம் அதிகரித்து வருகிறது.


• கனடாவில் உள்ள பிரஞ்சுப் பகுதியில், இந்த விழாவின் போது பூனைகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. அவைகளுக்குப் பிடித்தமான உணவு வகைகள் நிறையத் தரப்பட்டு, அவை 'மியாவ்' சத்தம் எழுப்பாமல் பார்த்துக் கொள்ளப்படுகின்றன. கிறிஸ்மஸ் விழா வின் போது பூனை மியாவ் சத்தமிட்டுக் கத்தினால் வீட்டுக்கு அப சகுனம் என்ற நம்பிக்கையே காரணம்.


• நெதர்லாந்தில் உடை, அலங்காரம் கேக் என்று எல்லாவற்றை யுமே தூய வெள்ளை வண்ணத்தில் செய்கிறார்கள். புதுப்பனியின் வெண்மை நிறமும் இதோடு சேர்ந்து கொள்கிறது.

• வாழ்த்து அட்டை அனுப்பும் வழக்கம் இங்கிலாந்தில் தொடங்கப் பட்டது. முதல் அட்டை 1843 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்டது.

• கிறிஸ்மஸ் கரால் எனப்படும் வாழ்த்துப் பாடல்களைப் பாடிக் கொண்டு வரும் வழக்கமும் இங்கிலாந்தில்தான் தொடங்கப்பட்டது.

• கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள், பரிசளிப்பு எல்லாமே ஜனவரி





6 ஆம் தேதிவரை கொண்டாடப்படுகின்றன.

• கிறிஸ்மஸுக்கு அடுத்த நாள், செயின்ட் ஜோசப்புக்கு உரிய நாளாகக் கொண்டாடப்படுகிறது. இதை இங்கிலாந்தில் 'பாக்ஸிங்டே' என்கிறார்கள். காரணம், தொழிலாளர்களுக்கான பரிசுப் பொருள்களை பெட்டியில் வைத்து அன்று வழங்கி வந்ததே!

• ஸ்காண்டிநேவியாவில் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூட கிறிஸ்மஸ் விருந்து வைக்கிறார்கள்.

• ஜெர்மெனியில் செயின்ட் நிக்கலோன் (வேடமணிந்தவர்) டிசம்பர் 5- ஆம் நாள் ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டுக் கொண்டு போகிறார். நல்ல குழந்தைகளுக்கு மட்டுமே பரிசு தரப்படுகிறது.

• இத்தாலியில் குழந்தைகளுக்கான பரிசுகள் LA-BEFANA என்ற கோரமான கிழவி (வேடமணிந்தவள்) யால் தரப்படுகின்றன!

• மெக்ஸிகோவில் குழந்தைகளுக்கான பரிசுப் பொருள்கள் பானைகளில் போட்டு வீட்டில் அல்லது தோட்டத்தில் உயரே தொங்கவிடப் படுகின்றன. கண்களைக் கட்டிக் கொண்டு குச்சியால் அடித்தது உடைத்து அவைகளைக் குழந்தைகள் எடுத்துக் கொள்வார்கள்!


• எந்த நாட்டில் கொண்டாடப்பட்டாலும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சியளிப்பதே முக்கிய நோக்கமாகக் கொண்டாடப்படுகிறதை.

• பெத்லஹேமில், உலகெங்கும் இருந்து வரும் பாதிரியார், மதகுருமார்களைக் கொண்ட ஊர்வலம் ஒன்று கிறிஸ்துவின் பெருமை கூறும் பாடல்களை இசைத்து எல்லாத் தெருக்களிலும் வலம் வரும்.

• கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கத்தை ஜெர்மெனியில் செயின்ட் ஃபோனிபேஸ் (680-753) ஆரம்பித்து வைத்தார். இதை மார்டின் லூதரே தொடங்கி வைத்ததாகக் கூறுவதும் உண்டு. இந்த வழக்கத்தை இங்கிலாந்தில் தொடங்கி வைத்த பெருமை ஆல்பர்ட் இளவரசருக்கு உரியது. இவர் விக்டோரியா மகாராணியாரின் கணவர்!

• கிறிஸ்துவின் பிறந்த நாள் சரியாகத் தெரியாததால், விரும்பியபடி பலரும் கொண்டாடி வந்ததால் ஏற்பட்ட குழப்பத்தைத் தீர்க்க (440 ஆவது) போப்பாண்டவர் முடிவு செய்தார். கிறிஸ்து பிறந்த நாள் டிசம்பர் 25 என்று இவர்தான் அறிவித்தார். இதன்படி 354 ஆம் ஆண்டு முதல் கிறிஸ்மஸ் டிசம்பர் 25 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. இருப்பினும் கான்ஸ்டான்டி நோபிளைச் சேர்ந்தவர்கள் ஜனவரி 6 ஆம் நாளன்றுதான் இன்னமும் கிறிஸ்மஸை கொண்டாடுகிறார்கள்.





பிறந்தநாள் பரிசாகக் கோகுலமா?



முத்துவின் வீட்டுக் கூடம் நண்பர்களால் நிரம்பி வழிந்தது. பிறந்தநாள் கொண்டாட்டம்தான்.

"இந்த ஆண்டு முத்து நமக்கு இனிப்பு எதுவும் தரலையே!" என்று ஏமாற்றத்துடன் கண்ணனிடம் மெல்லிய குரலில் முறையிட்டாள் சுதா.

"போன ஆண்டு கூட ஜாங்கிரி, மிக்சர் காப்பி தந்தானே?" என்றான் பாபு.

"அதுக்கு முந்தின ஆண்டு ஐஸ்க்ரீம்" என்றாள் துளசி.

ஸ்வீட்டை எதிர்பார்த்திருந்த நண்பர்களிடம் முத்து வந்தான். அவன் கையில் ஏதோ புத்தகக் கட்டு. அதிலிருந்து ஆளுக்கு ஒரு புத்தகத்தை எடுத்துத் தந்தான் முத்து. கண்ணனுக்கும், சுதாவுக்கும், பாபுவுக்கும் துளசிக்கும் கூட ஒன்றைத் தந்தான். வாங்கிப் பார்த்தனர். அவர்கள் முகம் மகிழ்ச்சியாலும் வியப்பாலும் விரிந்தது. காரணம், அவை அந்த மாதத்திற்கான புதிய கோகுலம் இதழ்! "முத்துவின் பிறந்த நாள் அன்பளிப்பு!" என்று அச்சடித்து அட்டையின் தலைப்பில் ஒட்டப்பட்டு இருந்தது.

"என்ன எல்லோரும் திகைக்கிறீர்கள்? ஸ்வீட்டும், மிக்சரும், ஐஸ்கிரீமும் தின்று முடிக்கும்வரைதான் மகிழ்ச்சியைத் தரும். ஆனால், இந்த கோகுலம் இதழ் எத்தனை ஆண்டுகள் ஆனாலும், எத்தனை பேர், எத்தனை முறை படித்தாலும் புதிய மகிழ்ச்சியைத் தரக்கூடியது," என்றான் முத்து.

"அருமையான ஏற்பாடு முத்து. உன் பிறந்த நாள் அன்பளிப்பு என்றும் அழியாத பரிசு. இன்னும் இரண்டு மாதம் கழித்து என்னுடைய பிறந்தநாளுக்கும் இதேபோல் பண்ணப் போகிறேன்," என்றாள் துளசி.

"குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்பே கோகுலம் அலுவலகத்துக்கு எழுதி, உரிய தொகையையும் முன்னதாகவே அனுப்பி வைக்க வேண்டும். குறைந்தது 50 பிரதிகளுக்காவது ஆர்டர் தரவேண்டும். நான் அறுபது பிரதிகளுக்கு ஆர்டர் கொடுத்து, முந்நூறு ரூபாய் பணத்தை முன்னதாகவே அனுப்பி வைத்தேன்."

"எங்க தாத்தாவுக்கு அறுபதாம் கல்யாணம் வரப்போகிறது. அதன் நினைவாக அனாதை இல்லங்களுக்கு ஏதாவது பண்ண ஆசைப்படுகிறார். அதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கா?" என்று கேட்டான் கண்ணன். "இருக்கே. பத்து அனாதை இல்லங்களுக்கோ, மருத்துவமனைகளுக்கோ, பள்ளிகளுக்கோ உங்க தாத்தாவை ஆண்டுச் சந்தா (ரூ. 600/-) கட்டச் சொல்லு. ஒவ்வொரு பிரதியிலும் இது உங்க தாத்தாவின் அறுபதாம் கல்யாண அன்பளிப்பு என்று அச்சடித்து நேரடியாக அவர்களுக்கே கோகுலத்தை ஓர் ஆண்டு அனுப்பி வைப்பார்கள். குறைந்தது பத்து சந்தாவாவது எடுத்துக் கொள்ள வேண்டும். பணத்தை டிராப்ட் மூலமோ, இல்லை மணியார்டராகவோ **பரதன் பப்ளிகேஷன்ஸ், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 97** என்ற பெயருக்கு அனுப்பி வைக்கலாம்" என்றான் முத்து.

"நான் அப்படித்தான் பண்ணப் போறேன்" என்றான் பாபு.

"எங்க அக்காவுக்குத் திருமணமாகப் போகிறது. அதை முன்னிட்டு பத்து ஆரம்பப் பள்ளிகளுக்குச் சந்தா கட்டச் சொல்லப் போகிறேன்" என்றான் பாபு.


"நானும்தான்" என்றான் பிரகாஷ்.


நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

விவரங்களுக்கு :

சர்க்குலேஷன் மானேஜர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97

என்ற முகவரிக்கு எழுதுங்கள்.





அம்மா பாபுவைத் தட்டி எழுப்பினாள்.

"பாபு, நேத்து வைச்ச பொறில எலி விழுந்திட்டது. சீக்கிரம் எழுந்து கொண்டு போய் கண்ணன் வீட்டுப் பூனையிடம் விட்டு விட்டுவா."

பாபுவின் வீட்டில் பயங்கரமான எலித் தொல்லை. அளவுக்கு மீறிப் பொறுக்க முடியாமல் போகும்போது பாபு மசால் வடையோ, இல்லை வெங்காய பொக்டாவோ வாங்கிக் கொண்டு வந்து, பொறியில் வைப்பான். ஒன்றோ இரண்டோ எலி சிக்கிக் கொள்ளும். அதற்குப் பிறகு ஒருவாரம் வரை எலித் தொந்தரவு இருக்காது. விழுந்த எலியைக் கூண்டோடு பாபு தூக்கிக் கொண்டு போவான். தெரு

பூனை மீன்றைத் தின்னுமா?

வில் உள்ள குழந்தைகள் எல்லாம் கையில் கல்லோடு கூச்சலிட்டுக் கொண்டு பின்னால் ஓடி வருவார்கள். பெரிய பிள்ளையார் ஊர்வலம் மாதிரிப் போவார்கள்.

பக்கத்துத் தெரு கண்ணன் வீட்டில் ஏராளமாகப் பூனைகள் இருக்கும். எலிப் பொறியைப் பார்த்ததும் பூனைகள் வந்து விடும். நடுத் தெருவில் கூண்டை வைத்து பாபு திறந்து விடுவான். அதுவரை கூண்டைவிட்டு வெளியே வரத் துடிக்கும் எலிகள், பூனையைக் கண்டதும், வெளியே வராது கூண்டுக்குள்ளேயே ஒண்டிக் கொள்ளும். கூண்டைத் தலை கீழாகக் கவிழ்த்துத் தட்டி, எலியை வெளியே வரவழைப்பார்கள். வெளியே வந்ததும் காத்திருக்கும் பூனைகள் பாய்ந்து கௌவிக் கொண்டு போய்விடும். அப்படிப் பூனைகள் தவறிவிட்டால், சுற்றி இருக்கும் வாண்டுகள், கல்லால் அடித்துத் துரத்துவார்கள். இதற்குத் தப்பிய எலிகளே கிடையாது!

பாபு, கையில் கூண்டைப் பிடித்துக் கொண்டு நண்பர்களுக்குக் குரல் கொடுத்தான். ஒரு சில நிமிடங்களுக்குள் தெருவில் உள்ள அத்தனை வாண்டுகளும் கையில் கல்லோடு திரண்டு விட்டார்கள். "ஹாய்

ரேவதி

ஹூய்" கத்தல் சத்தம் காதைப் பிளந்தது.

"எப்படிப் பல்லைப் பல்லைக் காட்டி, கம்பியைக் கடிக்குது பார்டா!"

"என்னமோ விச்சம் வருதுடா!" என்று மூக்கைப் பொத்திக் கொண்டான் ஒரு வாண்டு.

ஊர்வலம் புறப்பட்டது. கண்ணனின் வீடு நெருங்கி விட்டது. சாதரணமாக, எலிக் கூண்டைக் கண்டதுமே ஓடி வரும் கண்ணன் வீட்டுப் பூனைகள், வீட்டு வாசலுக்கு வந்த பிறகும்கூட வெளியே தலை காட்டவில்லை! ஓடி வந்த இரண்டொரு பூனைக் குட்டிகளும் திரும்பி ஓடியே போய் விட்டன!

"கண்ணா, என்னடா ஆச்சு உன் பூனைகளுக்கு!"

"அதான் எனக்கும் புரியலே" என்ற கண்ணன், "இருங்கடா, குண்டுப் பூனையை நானே இங்கே தூக்கிக்கிட்டு வரேன்" என்று உள்ளே ஓடினான். அவன் வெளியே வந்த போது, குண்டுப்பூனை அவன் இடுப்பில் இருந்தது. கூண்டைப் பார்த்துமே, குண்டுப்பூனை திமிறி ஓடிவிட முயன்றது. கண்ணன் அதை விடா மல், தெருவில் தரையில் கீழே அமுக்கி உட்கார வைத்தான். பாபு, கூண்டைத் திறக்க முயன்றான். குண்டுப் பூனை கோபமாகக் கத்தி கண்ணனின் கைகளைப் பிராண்ட அவன் கையை விட்டான். பூனை ஓடியே போய் விட்டது!



"பெருமாள் கோவில் தெருவில, ரவி வீட்டில் பூனை வளர்க்கறாங் கடா. அங்க போய்ப் பார்க்கலாம்" என்றான் ஒரு வாண்டு.

படை திரும்பி நடை போட்டது. ரவியின் வீட்டிலும் இதே நிலை தான். கூண்டுக்கு அருகே பலவந்தமாகக் கொண்டு வரப்பட்ட தும், பூனை ரவியைப் பிராண்டிவிட்டு ஓடி விட்டது!

"என்னடா இது! பூனைகள் மிரளும் எலி யாக இது இருக்கு!"

"சரி, வெளியே விரட்டு. கல்லாலயே அடிச்சு முடிச்சுடலாம்."

வாண்டுகள் கல் லோடு, கையை உயர்த் தித் தயாராக இருக்க, பாபு கூண்டை நடுத் தெருவில் வைத்துத் திறக்க முயன்றான்.

எதிர் வீட்டில் இருந்து வெளியே வந்த ஒரு கண்ணாடிக் காரார், "இரு தம்பி இரு" என்று கூறிக் கொண்டே பாபுவைத் தடுத்தார்.


"பாபு, இவர் எங்க பெரியப்பா. பம்பாயில் கல்லூரியில் விலங்கியல் பேராசிரியராக இருக்கிறார்" என்று நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி னான் பாலு.

"என்ன பண்ணப் போறே தம்பி?"

"இந்த எலியைப் பார்த்ததும் எல்லாப் பூனைகளும் ஓடுது சார். அதனால இதை வெளியே விட்டு, கல்லால அடிச்சுக் கொல்லப் போறோம்."

"இது கொடுமை இல்லையா?"

"என்ன சார் இது! ஒரு எலி, ஓர் ஆண்டுக்கு பத்து மனிதர்கள் சாப்பிடும் உணவை பதினைந்தே நாளில் சாப்பிட்டு, பயிர்களுக்கும் சேதம் விளைவிக்கிறதாம்! இந்தி யாவில் எலித் தொகை, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இரட் டிப்பாகுதாம்! இவை பிளேக் நோயை வேறு பரப்புதாம்! இவை களை அடிக்காமல் கொஞ்சவா



கொஞ்சுவார்கள்? என்ன சார், விலங்கியல் பேராசிரிராக இருந்தும் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள்!" என்றான் பாபு.

"தம்பி, விலங்கியல் பேராசிரியராக இருப்பதால்தான் கேட்கிறேன்."

பாபுவும் நண்பர்களும் வியப்புடன் அவரைப் பார்த்தனர்.

"என்ன தம்பி பார்க்கறே? உன்னுடைய எலிக் கூண்டுக்குள் சிக்கியிருப்பது நீ எண்ணிக் கொண்டிருப்பது போல் எலியே அல்ல. மூஞ்சூறு."

பாபு கூண்டை உயரே தூக்கிப் பிடித்துப் பார்க்க, மற்ற நண்பர்களும் பார்த்தனர்.

"எலிக்குக் காதுகள் இருபக்கமும் வெளியே துருத்திக் கொண்டிருக்கும்; கூர் மூஞ்சி இருக்காது; உடம்பு சாம்பல் நிறமாக இருக்காது; கண்கள் துருத்திக் கொண்டிருக்கும்;கால்கள் உடலைப் போல் கறுப்பாக இருக்கும்; துருவும் பற்கள் இருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இந்த வீச்சம் எலிகளுக்கு இருக்காது."

எல்லோரும் கவனமாகப் பார்த்தனர்.

"ஆமாம்! காதுகள் வட்டமாக உடம்போடு ஒட்டி இருக்கு! கண்கள் கூட வட்டமாக அமுக்கினது மாதிரி இருக்கு!முகம் கீழ் உதட்டுக்கு முன்னால் நீண்டு இருக்கு. கால்கள் வெளிர் சிவப்பா இருக்கு. உடம்பு குண்டா இல்லே, நீண்ட மாதிரி இருக்கு! என்னமா வீச்சம் அடிக்குது!"

"சார், இது எலி இல்லேன்னு தெரியுது! ஆனால் பார்க்க எலி மாதிரியே இருக்கே?"

"எலிக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்கறதை நீங்களே பார்த்துத் தெரிஞ்சுக்கிட்டீங்களே! அப்புறம் என்ன சந்தேகம்?"

"பூனை இதைப் பிடிக்காததற்கு என்ன காரணம்?"

"இந்த வீச்சம்தான். அதனால்தான் இதற்குப் பகைவர்கள் கிடையாது. இந்த வீச்சத்தைப் பார்த்தாலே எல்லாம் விலகி ஓடிவிடும். சில பூனைகளும் நாய்களும் இதை விடாமல் துரத்தும். இதுவும் கொஞ்சம் வேடிக்கைகாட்டி, ஓடி விளையாடி விட்டு, வீச்சத்தை வீசும். அவ்வளவுதான். எல்லாம் விலகி ஓடியே விடும்."

"இந்த வீச்சம் எப்படி வருகிறது சார்?"

"இவைகளின் உடலில் உள்ள சுரப்பிகளில் இருந்து வருது. குடும்பம் நடத்தும் போது அதிகம் வரும்."

"இது மனிதனுக்கு நல்லது பண்ணக் கூடிய இனமா?"

"கண்டிப்பாக பாபு. எலியைப் போல் இது உணவை வீணாக்காது. தன் பசிக்கு வேறு இரை கிடைக்கா விட்டால்தான் இது தான்ய வகைகளில் கை வைக்கும். அப்படியே சாப்பிட்டாலும் தன் எடையளவு தானியங்களையே உண்ணும். எலியைப் போல் சேதப்படுத்தாது. இதற்குப் பிடித்தமான இரை என்ன தெரியுமா? கரப்பான் பூச்சிகள், எலிக் குஞ்சுகள், புழு பூச்சிகள்தான். இது போகும் இடமெல்லாம் வீச்சத்தைப் பரப்புவதால், நம் வெறுப்



அறிவியல் உண்மைகள் :

● மூஞ்சுறு பூச்சி தின்னும் இன்செக்டிவரா (Insectivora) பிரிவைச் சேர்ந்தவை.

● இதற்கும் எலிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. கண், காது, வால், முகம், பல், பழக்கம், இரை எல்லாவற்றிலும் இது எலியில் இருந்து வேறுபட்டது. பார்ப்பதற்கு எலி மாதிரி இருப்பதால் குழப்பம். இரண்டையும் உற்று நோக்கினால் வித்தியாசத்தை நாமே கண்டுகொள்ளலாம்.

● இது அருவருப்பான வீச்சத்தை வீசும். இதுதான் இதற்குப் பாதுகாப்பு. பருந்துகள் மட்டுமே இதற்குப் பகைவர்கள்.

● குட்டி போட்டுப் பாலூட்டும். மனிதனுக்குத் தீங்கு செய்யும் கரப்பான், கொசு முட்டை, எலிக் குஞ்சுகள் இதற்கு உணவு. தானியங்களையும் தின்னும். ஆனால் தன் எடைக்குச் சரியான அளவே உண்ணும். எலியைப் போல் சேதப்படுத்தாது.

● உலக பிளேக் கமிஷன், இதைக் கொண்டு உலக முழுவதும் பிளேக் எலிகளே இல்லாது ஒழிக்கத் திட்டமிட்டு வருகிறது

புக்கு இது ஆளாகியிருக்கிறது. இந்த வீச்சத்தால் இது தொடும் அல்லது முகரும் எதுவும் வீணாகிவிட்ட மாதிரியும், இது நோய்களைப் பரப்புகிறது என்றும் நமக்கு ஒரு தப்பான எண்ணம் விழுந்துவிட்டது. உண்மையில் இது எலிக் குஞ்சுகளையும், ஏன் எலிகளையும் கூட பிடித்துத் தின்று விடுகிறது. பிளேக் நோயை அழிக்க இந்த மூஞ்சுறுகளைப் பயன்படுத்தலாமா என்று ஆராய்ச்சி கூட நடந்து வருகிறது. இதைச் செய்ய முடியும் என்றும் சர்வதேச பிளேக் கமிஷன் சுட்டிக்காட்டியிருக்கிறது.''

"எங்க வீட்டு சாக்கடைக்குள் நிறைய எலிக் குடும்பம் இருக்கு. நீங்க சொல்லுவதையெல்லாம் பார்த்தால் அவை எல்லாமே மூஞ்சுறு என்று தோன்றுகிறது. மாலையில், இருட்டும் நேரத்தில் ஒன்றின் வாலை ஒன்று பிடித்துக் கொண்டு கிச்சு கிச்சுவென்று சத்தம் எழுப்பியபடி சுவர் ஓரமாக வீட்டுக்குள் வரும். பூனை அதைப் பார்த்தாலே ஓடிவிடும்'' என்றான் பாபுவின் நண்பன் பூபதி.

"கண்டிப்பா அது மூஞ்சுறுதான். குட்டிகள் ஒற்றுமையா இருக்கும். அம்மா பின்னாடி, ஒன்றின் வாலை ஒன்று கௌவிக் கொண்டு ரயில் பெட்டி மாதிரி வரும். வரும்போதே ஒரு அருவருப்பான வீச்சம் வரும். இவை காட்டில் கூட வாழும். ஆனால் வாழும் இடம் சொதசொதப்பான ஈரமுடையதாக இருக்க வேண்டும். ஒரே ஈட்டில் இரண்டு, மூன்று குட்டி போடும்.''

"சார், பிள்ளையாருக்கு வாகனமாக இருப்பது மூஞ்சுறா இல்லை எலியா?''

பிள்ளையாருக்கு வாகனம் மூஞ்சுறுதான். சந்தேகமே இல்லை. முகம் சிறுத்தது என்பது இதற்குப் பொருள். ஆனாலும் பெரும்பாலானவர்கள் எலிக்கும் மூஞ்சுறுக்கும் உள்ள வேறுபாட்டை அறியாமல், எலிதான் மூஞ்சுறு என்கிறார்கள். பிள்ளையார் பொம்மைகளில்கூட மூஞ்சுறைப் போடாமல் எலிகளைப் போட்டு விடுகிறார்கள்!''

''சார், இந்த எலியை, இல்லே இல்லே மூஞ்சுறை என்ன பண்றது?'' என்று கேட்டான் பாபு.


''அடிக்காதீங்க. எங்கேயாவது சாக்கடைப் பக்கம் திறந்து விட்டுவிடுங்கள். மூஞ்சுறு மனிதனின் பகைவன் அல்ல.''

"ஹோய்!' என்று எடுத்த கல்லை வீசியெறிந்த வாண்டுகள் கூண்டுடன் ஓடினர்!

"உங்க வீட்டு நாய் என்னைக் கண்டால் வாலாட்டுது!"

''அது அப்படித்தான், நாயைக் கண்டால் வாலாட்டும்!"

— பொன் குமார்




முற்றிலும் வித்தியாசமாக
புத்தம் புதிய அமைப்பில்
டிசம்பர் இதழ்...
விற்பனைக்குத் தயார்!
மேகலா
காமிக்ஸ்
நெறிகெட்டுப் போகும் மனித குலத்தை
மேலும் அழிவுப் பாதைக்கு இழுப்பது
அறிவியலா அல்லது நாசகாரர்களா ?
நொறுக்க வருகிறார்
அறிவுலகின்
புதினக் கதாநாயகன்
மைகேல்
கியான்
பூலோக
நரகம்
தமிழில் இதுவரை எவரும் தராத சித்திரக்கதை!
வித்தியாசமான கற்பனையா?
இல்லை ; நாளைக்கு நடக்க
இருக்கிற விஞ்ஞான நிஜம்!
நவம்பர் இதழ்
மேகலா காமிக்ஸ்
வாங்கி விட்டீர்களா?
மனிதக்குண்டு
ரூ. 5
சித்திரக்கதை
★ பரபரப்பு ★ அதிரடி ★ விறுவிறுப்பு
மேகலா காமிக்ஸ் 96, காம்தார் நகர், சென்னை - 600 034.



காட்டில் கிறிஸ்துமஸ்!

காட்டில் சிங்கராஜாவின் சபை கூடியிருந்தது. சிங்கராஜா கால் மேல் கால் போட்டுக் கொண்டு கம்பீரமாக அமர்ந்திருந்தார். அமைச்சர் நரியாரும் மற்ற பிரதானிகளும் அவரவர் ஆசனங்களில் உட்கார்ந்து இருந்தனர்.

"அரசே, யானையார் உங்களிடம் ஏதோ முறையிட வந்திருக்கிறார்" என்று அமைச்சர் நரியார் கூறியதும், அதற்கு அனுமதி வழங்கியதற்கு அடையாளமாக சிங்கராஜா தலையசைத்தார்.

அசைந்தாடி வந்த யானையார் துதிக்கையை உயர்த்திப் பிளிறி, தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

"யானையாரே, என்ன செய்தி?" என்று கேட்டார் சிங்கராஜா.

"மகாராஜா, எங்கள் இனத்தாரைப் பிடிப்பதற்காகச் சில பொல்லாத மனிதர்கள் காட்டில் பல இடங்களில் குழி தோண்டியிருந்தார்கள். அதில் என் பையன் சிக்கிக் கொண்டான். அவர்களில் ஒருவன், தான் வந்த காரோடு என்னிடம் அகப்பட்டுக் கொண்டான். இருந்தாலும் வேட்டைத் துப்பாக்கியைக் காட்டி என்னிடமிருந்து தப்பி விட்டான். அவன் போகும் போது சும்மா போகவில்லை. என் குட்டியையும் தூக்கிக் கொண்டு போய்விட்டான்" என்று அழுது கண்ணீர் விட்டார் யானையார்.

யானையாருக்கு ஏற்பட்ட சோகத்தைக் கண்டு சபையினர் கலங்கினர். யாராலும் தேறுதல் கூற முடியவில்லை.

யானையாரே தொடர்ந்து பேசினார்.

"அவன் ஏறிவந்த காரை நான் நசுக்கி அப்பளமாக்கி விட்டேன். அதில் இதெல்லாம் இருந்தன."

தான் துதிக்கையில் சுமந்து வந்ததை சிங்கராஜாவின் முன்னால் பரப்பினார் யானையார்.

அதில் புகைப்படம் எடுக்கும் காமிரா, ஒரு மௌத் ஆர்கன், ஒரு கிடார், பிரேம் போடப்பட்ட ஒரு வண்ணப்படம் எல்லாம் இருந்தன.

"இம்மாதிரிக் கிடைக்கும் பொருள்கள் எல்லாம் அரசாங்கத்துக்கே சொந்தம் என்று நீங்கள் உத்தரவு போட்டிருப்பதை நான் மறக்கவில்லை. அதனால், கொண்டு வந்திருக்கிறேன். இவற்றை என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவு பண்ண வேண்டும்."

"யானையாரே, உங்களுக்கு ஏற்பட்ட சோகத்தைக் கூட மறந்து, அரசாணையை நினைவில் வைத்துக் கொண்டு இவைகளைச் சேர்ப்பித்துள்ள உங்கள் கடமை உணர்வைப் பாராட்டுகிறேன். இவைகளில் உங்களுக்கு ஏதாவது தேவை என்று நீங்கள் ஆசைப்பட்டால் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார் சிங்கராஜா.

"என் குழந்தையையே பிடித்துக் கொண்டு போய்விட்ட பிறகு எனக்கு என்ன ஆசை இருக்கும் மகாராஜா?" என்று துக்கம் தாங்காமல் கூறினார் யானையார்.

சிங்கராஜா, கண்ணாடி பிரேம் போட்ட அந்த வண்ணப்படத்தை எடுத்துப் பார்த்தார். குழந்தை ஏசுவைக் கையில் வைத்துக் கொண்டு, மேரி மாதா அருள் புரியும் கோலத்தில் படம் இருந்தது.

"அட, மேரி மாதா படம்!" என்றார்



குரங்கார். அவர் சிறிது காலம் நகரத்தில் இருந்தவர்.
வியப்புடன் குரங்காரைப் பார்த்தார் சிங்கராஜா. மேரியின் பெருமைகளையும், கிறிஸ்து பெருமானின் அருள்நெறிகளையும் குரங்கார் விளக்கினார். கொல்லும் குணம் கொண்ட கொடிய காட்டு விலங்குகளுக்கு அவை பெரிய அதிசயமாகத் தோன்றின.


"ஏசுவுடன் கூடிய மேரிமாதாவின் திருவுருவப் படம் நமக்குக் கிடைத்திருப்பது நல்ல சகுனமாக எனக்குத் தோன்றுகிறது. ஏசுவின் பிறந்த நாளாகிய கிறிஸ்துமஸ் அடுத்த வாரம் வரப் போகிறது என்கிறீர்களே...? அதை நம் காட்டில் கொண்டாடலாமே?" என்றார் சிங்கராஜா.

"காட்டில் கிறிஸ்துமஸா?" என்று திகைப்புடன் கேட்டார் அமைச்சர் நரியார்.

"ஏன்? கொண்டாடக் கூடாதா? நம் காட்டில் பொங்கலையும் தீபாவளியையும் கூட நாம் கொண்டாடியிருக்கிறோமே? அவைகளைக் கொண்டாடும் போது, ஏன் கிறிஸ்துமஸைக் கொண்டாடக் கூடாது?" என்றார் சிங்கராஜா.

"உங்கள் கேள்வி நியாயமானதே. ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று அறிவுரை கூறிய ஏசு பிரானின் அன்பு உள்ளத்திற்கு நாம் செலுத்தும் பாராட்டாக இது இருக்கட்டும்" என்றார் நரியார்.

கிறிஸ்துமஸைக் கொண்டாட எல்லா ஏற்பாடுகளும் மளமளவென்று நடந்தன. குரங்கார் ஏற்கெனவே நாட்டில் சில காலம் மனிதர்களுடன் இருந்தவர். அதனால் அவருக்குக்



கிறிஸ்துமஸை எப்படிக் கொண்டாட வேண்டும் என்பது தெரிந்திருந்தது. அதனால் அவரது ஆலோசனைகளின் படியே எல்லா ஏற்பாடுகளும் செய்யப் பட்டன.

ஒட்டகச்சிவிங்கிகள் அணிஅணியாகப் பிரிந்து வண்ணத் தோரணங்களைக் கட்டின. தூக்கணாங்குருவிகள் பந்தல் போட்டு வண்ண ரசகுண்டுகளைத் தொங்க விட்டன. யானைகள் வாழை மரங்களைக் கொண்டு வந்து கட்டின. குயில்கள் ஒன்றுகூடிப் புதிய கிறிஸ்துமஸ் பாடல்களை எழுதி, மெட்டமைத்துப் பாடின. மயில்கள் அந்தப் பாடல்களுக்கு ஏற்ப ஆடிப் பழகின.

தேனீக்களும் குளவிகளும், பறவை களின் ஒத்துழைப்புடன் மாட்டுக் கொட்டி லில் ஏசுபிரான் பிறப்பதையும், தேவ தூதர்கள் வந்து வணங்கிச் செல்வதையும் அழகிய பொம்மைக் காட்சியாகச் செய்து வைத்தன. இரவில் மாட்டு வண்டி கட்டிக் கொண்டு கிடார், மௌத் ஆர்கன் இசை முழங்க கிறிஸ்துமஸ் வரப் போவதை பாடல்களாகப் பாடி, காட்டை வலம் வந்தன மிருகங்களும் பறவைகளும்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று வெட்டுவதற் காக மிகப் பெரிய அழகான கேக் ஒன்று குரங்காரின் மேற்பார்வையில் செய்யப் பட்டது. கிறிஸ்துமஸ் அன்று, கூட்டுப் பிரார்த்தனை முடிந்ததும், சிங்கராஜாவே கேக்கை வெட்டி எல்லா மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் தரவேண்டும் என்பது தான் திட்டம்.

கிறிஸ்துமஸ் அன்று. அழகாகப் போடப்பட்டிருந்த மிகப் பெரிய பந்தலில் எல்லா மிருகங்களும் பறவைகளும் திட்ட மிட்டபடி கூடின. உள்ளம் உருகப் பிரார்த்தனை செய்தன. ஆனால், கிறிஸ்து மஸைக் கொண்டாடக் காரணமாக இருந்த யானையாரை மட்டும் அங்கே காணவில்லை!

"யானையாரைக் காணவில்லையே!" என்று அமைச்சர் நரியாரிடம் கேட்டார் சிங்கராஜா.

"எனக்கும் கவலையாகத்தான் இருக் கிறது மகாராஜா. காலையில் கூடப் பார்த் தேன். பிரார்த்தனையில் கலந்து கொள்ள வும் சிங்கராஜா கேக் வெட்டுவதைப் பார்க்கவும் நான் கண்டிப்பாக வருவேன் என்று கூறினாரே! என்னமோ காணவில் லையே!" என்றார் நரியார்.

நேரம் நெருங்கியது. சிங்கராஜா, தவிப்பு நிறைந்தவராக வேறு வழியில்லாது கேக்கை வெட்டக் கத்தியை எடுத்தார். அதே சமயத்தில் –

ஏதோ சலசலப்பு! ஆம், யானையாரே தான். துதிக்கையில் ஒரு மனிதனைச் சுற்றித் தூக்கிக் கொண்டு பிரார்த்தனைக் கூடத்திற்குள் நுழைந்தார். சுழற்றித் தூக்கி வந்த மனிதனைச் சிங்கராஜாவின் முன்னால் இறக்கி விட்டார்.

"என்னை ஒன்றும் செய்து விடாதீர் கள்" என்று நடுங்கினான் அந்த மனிதன்.

"என் குட்டியைப் பிடித்துக் கொண்டு துப்பாக்கியை வெடித்துக் காட்டி என் னைப் பயப்படுத்தி விட்டுப் போனான் என்று கூறினேனே, அந்த மனிதன் இவன் தான். மேரி ஏசு படம், இவனது பிறந்த நாளன்று, இவன் தாத்தா பரிசளித்ததாம். அதனால் அதைத் திரும்ப எடுத்துச் செல்ல இவன் மறுபடி வந்திருக்கிறான்.



"புலியார் ஏன் கோபமாக இருக்கிறார்?"


"அவரோட படத்தை எடுத்துட்டு, 'தேவாங்கு' படத்தை போஸ்ட் கார்டுல போட ஆரம்பிச்சுட்டாங் களாம்!"

- கி. சிவா

"உன் பையனை வேலைக்குச் சேர்த்திருக்கியாமே, என்ன வேலை?"

"'ரோடு ரோலர்' ஓட்டுகிற வேலை!"

– கி. சிவா



என்னிடம் சிக்கிக் கொண்டான். அப்பொழுதும் கூட இவன் துப்பாக்கியால் என்னைச் சுட்டு விட முயன்றான். நான்தான் அதைத் தட்டி விட்டு அருவியில் விழ வைத்தேன். எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில் இவனைக் காலில் போட்டு மிதித்து விடலாமா என்று கூட எண்ணினேன்" – யானையார் நிறுத்தி விட்டு அழுதார். பிறகு அவரே தொடர்ந்தார்.

"ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று வன்முறையை விலக்கச் சொல்லி அன்பு நெறியைப் போதித்த கிறிஸ்துபிரானின் பிறந்த நாளைக் கொடிய விலங்குகளாகிய நாம் கொண்டாடுகிறோம். அவருக்குப் பெருமையளிக்கும் விதத்தில், இந்த கிறிஸ்துமஸ் திருநாளன்றாவது வன்முறையில் ஈடுபடாமல் இருப்போம் என்று நீங்கள் வேண்டுகோள் விடுத்தது என் நினைவுக்கு வந்தது. அதனால், என் ஆத்திரத்தையும், கோபத்தையும் அடக்கிக் கொண்டு, குட்டியை என்னிடமிருந்து பிரித்துச் சென்றுவிட்ட இந்தக் கொடியவனுக்கு எந்தவிதமான சிறு தீங்கும் கூட இழைக்காமல் இங்கு கொண்டு வந்து விட்டேன்," என்று தேம்பினார் யானையார்.

அந்த மனிதன் இன்னும் நடுங்கிக் கொண்டுதான் இருந்தான்.

"யானையாரே, போதித்தவர்களுக்கு விழா எடுத்து, போதனைகளை மறந்து விடும் காலம் இது. அடித்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டு என்று ஏசுபிரான் கூறியதை, நீங்கள் நடத்திக் காட்டியிருக்கிறீர்கள். இந்தக் கிறிஸ்துமஸ் கேக்கை வெட்டி விழாவைக் கொண்டாடுவதற்கு முற்றிலும் தகுதியானவர் நீங்களே" என்று மனம் கசியக் கூறிய சிங்கராஜா, யானையாரிடம் கத்தியைக் கொடுத்துக் கேக்கை வெட்டச் சொன்னார்.

மணிகள் ஒலித்தன. புல்புல்தாராவும், கிடாரும், மௌத் ஆர்கனும் இசை பொழிந்தன. யானையார், கத்தியை எடுத்துக் கேக்கை வெட்டினார். முதல் துண்டை யாருக்குத் தருவது?

"மகாராஜாவே, நீங்களே இதைப் பெற்றுக் கொள்ள முற்றிலும் தகுதியானவர்" என்று சிங்கராஜாவிடம் வெட்டப்பட்ட முதல் துண்டு கேக்கைப் பணிவுடன் நீட்டினார் யானையார்.

"இல்லை யானையாரே. போதனைகளைக் காற்றில் பறக்கவிட்டு விழாக் கொண்டாடும் மனிதர்களுக்குத்தான் இது மிக மிக அவசியம். இதைத் தின்ற பிறகாவது இவன் மாற வேண்டும் என்று ஏசுவை வேண்டுவோம்" என்று கூறிய சிங்கராஜா, கேக் துண்டை, நடுநடுங்கிக் கொண்டிருந்த அந்த மனிதனின் வாயில் ஊட்டினார். விலங்குகள் எல்லாம் கை தட்டின.

"நான் மாறிவிட்டேன். பணத்துக்காக இனி விலங்குகளைப் பிடிக்க மாட்டேன். சர்க்கஸுக்கு விற்கத்தான் யானைக் குட்டியைப் பிடித்தேன். இன்னும் அதை அனுப்பவில்லை. என் தோட்டத்தில்தான் இருக்கிறது. அதைத் திருப்பிக் கொண்டு வந்து விட்டு விடுகிறேன்" என்று கண்ணீர் விட்டான் அந்த மனிதன்.

"ஏசு மேரி படத்தை விழா முடிந்ததும் நாளைக்குத் தந்து விடுகிறோம்" என்றார் சிங்கராஜா.

"வேண்டாம் சிங்கராஜா. அது என்னிடம் இருப்பதை விட இங்கு இருப்பதே பொருத்தமாக இருக்கும்" என்றான் அந்த மனிதன் விம்மியபடி!

அவன் ஏன் விம்மி அழுகிறான் என்பது உங்களுக்குப் புரிகிறதா?



❖ "ஹைடர்ஜுக்கு பூமிக்கு வந்த கதை" எங்களுக்கு விஞ்ஞான அறிவை வளர்ப்பதாக அமைந்தது.

-திருக்கண்ணங்குடி சரவணகுமரன், தேவனாங்குறிச்சி பா. வடிவேல், விருத்தாசலம் இரா. பிரசன்ன குமார், பொட்டலூரணி க. சங்கரநாராயணின் நண்பர்கள், பொட்டலூரணி க. இசக்கிமுத்து.

❖ ஒருகிரஹத்தில் இருந்து பறக்கும் தட்டில் புறப்பட்ட ஜக்கு வெறும் ½லட்சம் ஆண்டில் பூமிக்கு வந்து விட்டதாகக் கூறுகிறான். தட்டின் வேகம் 44 மில்லியன் மடங்கு அதிகம் என்று அர்த்தமாகிறது! இது இயற்கையையே மிஞ்சிய விஷயமாகத் தெரிகிறதே!

-கோணபட்டு அருள் பாரதி.

❖ ஹைடர் ஜக்கு படக்கதையில் அவனுக்கு மின்சாரம் தான் சாப்பாடு. ஆனால் எதிரிகள் அவனை துரத்தி வந்தபோது விண்வெளியில் எங்கே மின்சாரம் அவனுக்கு கிடைத்தது?

- திருச்சி ஜேஸம். தீபக்.

ஹைடர் ஜக்குவின் (Galaxy) (பால்வெளி) பயணம் அறிவியல் ஜாலம் நிறைந்த கற்பனையே. (ஆசிரியர்)

❖ மதிஒளி சரஸ்வதியின் 'புவனா தேடிய புதையல்' தொடர்கதை அருமை. ம.செ. அவர்களின் படங்கள் பேசின.

அருண்பிரகாஷ், கபிஸ்தலம் கேஸ்பாபு.

❖ வால் முளைக்காத வாண்டுகளான 'சாட், பிட், கித்' அருமை.

- சின்னசேலம் இரா.பிரசன்னகுமார், பிரபாகர்.

❖ கால்குலேட்டர் பற்றிய விடுகதைகளை வாசகர்கள் எழுதி தான் நிரப்பி விட்டார்கள். சிறப்பாயிருந்தது.

- பவித்திரமாணிக்கம் டி. முருகேசன், விருத்தாசலம் வி. பிரபாகர்.

❖ "ஒரே நாளில் முடியுமா?" கதை என் பழக்கத்தை திருத்தியது. இதிலிருந்து சோமுவை மட்டுமல்ல என்னையும் தான் திருத்தியது. படைத்தளித் தவர்களுக்கு எனது பாராட்டுகள்.

- துத்திப்பட்டு இரா. ஜெயகாந்தன்.

❖ ஆழியின் வெட்டுக்கிளி பற்றிய செய்திகள் எங்களது பொது அறிவுக்கு விருந்தாய்

வண்ணத்தில் வெளியிடுங்கள்!

அமைந்தது. ஆழியின் 'கட்டுரையை' வண்ணத்தில் வெளியிடுங்கள். பைண்டிங் செய்து வைக்க வசதியாக இடப்பக்கம் வெளியிடுங்கள்.

- கபிஸ்தலம் வினோதப்ரியன்

❖ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா பெருமையைக் குறிக்கும் பகுதியும், நேருஜியின் கட்டுரையும் தேனில் நனைந்த பலாச்சுளையாக இருந்தன.

- விருத்தாசலம் இரா. பிரசன்ன குமார், வி. பிரபாகர், திண்டுக்கல் மு. ராஜா, சிதம்பரம் பா. அகமதுபாஷா.

❖ "யானை கொடுத்த பூச்செண்டு" கட்டுரை மிகவும் அருமை. குழந்தைகள் வரைகின்ற ஓவியத்தில் கூட வன்முறையை விரும்பாமல் பூச்செண்டாக மாற்றி, அச்சிறுவனின் மனதில் எளிதில் பதியும் வண்ணம் அறிவுரையை எடுத்துரைத்த நேரு மாமாவின் திறமையும், குழந்தைகளிடத்தில் அவர் கொண்டிருந்த பாசமும் அவருடைய உயர்ந்த பண்புகளை பறை சாட்டுகின்றன. மேலும், குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களைப் பற்றிய கட்டுரையில் குழந்தைகளை எங்ஙனம் வளர்க்க வேண்டும் என்று அவர் எடுத்துக் கூறியிருந்த பாங்கு மிகவும் அருமை சார். குழந்தைகளைப் பற்றியும், அவர்களை நடைமுறைப் படுத்தி வளர்க்கும் பாங்கினையும் அவர் கூறியுள்ள விதம் மிகவும் அருமை.

- செம்பனார்கோயில் ஜெ.ஜம்மு.

❖ "கவிதா வீராசுவாமி" எழுதிய "என்னப்பா பயன்?" கதை மிகவும் கவர்ந்து விட்டது. கோவிந்தன் போல எத்தனையோ சிறுவர்கள் படிப்பின் மீது அக்கறையின்றி, அறியாமல் படித்தென்ன பயன் எனக் கூறி தம் வாழ்க்கையை அழித்துக் கொள்கிறார்கள். அவர்கள் அனைவரும் இக்கதையின் மூலம் படிப்பின் அவசியத்தை அறிந்திருப்பார்கள் என நம்புகிறேன்.

- கோயமுத்தூர் பக்தவத்சலம்


❖ பெற்றோர் மீது எக்காரணம் கொண்டும் காழ்ப் புணர்ச்சி கூடாது என்பதை 'வரவே கூடாது' சிறுகதை மூலம் அறிந்து கொண்டேன். எழுதிய அன்பருக்கு எனது நன்றி..!

-தேவனாங்குறிச்சி பா.வடிவேல்

❖ "யானை கொடுத்த பூச்செண்டு' கதை மிகவும் சிறப்பாக இருந்தது. வன்முறையை விரும்பாத நேரு மீண்டும் பிறந்தால் இப்போது உலகில் நடக்கும் வன்முறையை கண்டு கண்ணீர் சிந்துவார்.

-திருவண்ணூர் அ.க. சிவமுருகன்

சாட் பீட் கீத்!



பூபு வீட்டுக் கார்

வெள்ளி வீட்டு வைரத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்ததற்காக ஆசிரியர் உட்பட எல்லோரும் சாட் பீட்கீத்தைப் பாராட்டியதை பூபதி அவ்வளவாக ரசிக்க வில்லை. அவன் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப் பதையோ, பெருமைப்படுவதையோ சகித்துக் கொள்ள முடியாதவன். ஆனால், மற்ற விஷயங்களில் தங்கமான வன்.

இடைவேளையின் போது, மைதானத்தில், ஆலமர மேடையில் நண்பர்கள் எல்லோரும் டிபன் பாக்கடன் கூடிய போது, பூபதி பீட்டரை வம்புக்கு இழுத்தான்.

"என்னவோ பெரிய ஷெர்லக் ஹோம்ஸ் மாதிரி, துப்பறியும் சாம்பு மாதிரி உங்க மூன்று பேரையும் எல் லோரும் ஆளுக்கு ஆள் கொண்டாடறாங்களே!"

"அதுக்கு நாங்க என்ன பண்றது பூபதி? பாராட் டறது அவங்க குணம். நாங்க போய் வீடு வீடா இதைச் சொல்லலையே?" என்று பணிவாகப் பதிலளித்தான் பீட்டர்.

"எங்க வீட்டுக்கு நாலாவது வீட்டுல, ஒரு கார் திருட்டு நடந்திருக்கு. அதை உங்களால கண்டுபிடிக்க முடியுமா?"

"இதை நாங்கள் சவாலாக எடுத்துக் கொள்ளவில்லை. எங்களால் இயன்றவரை முயன்று பார்க் கிறோம்" என்றாள் கீதா.

சாதிக், பீட்டர், கீதாவைத் தானே அழைத்துக் கொண்டு போனான் பூபதி. அதுவும் புதிதாக உருவாகி யிருந்த குடியிருப்புப் பகுதிதான்.

மூவரையும் வீட்டுக்காரருக்கு அறிமுகப்படுத்தி னான்.

"அட நீங்கதானா அந்த சாட்பீட்கீத்! செய்தித் தாளில் படித்தேன். ரொம்ப மகிழ்ச்சி" என்று அவர் களை வரவேற்றார் மதிவாணன். அவர்தான் அந்த வீட்டுக்காரர். காப்பி வந்தது.

மதிவாணன் விளக்கினார்.

"தம்பி, என்னிடம் ஃபியட் வெள்ளைக் கார் இருக்கு. மிகவும் ராசி யான கார். அதிகமாக வெளி யில்-கூட எடுக்க மாட்டேன். ஓட்டா விட்டால் பழுதாகி விடுமே என்பதற்காக எடுப் பேன். நானேதான் ஓட்டு

சின்னபாபு

வேன். சொந்தக் குழந்தை மாதிரி வைத்துக் காப்பாற்றி வருகிறேன். அலுவலகம் போக 'கைனடிக் ஹோண்டா' பைக் வைத்திருக்கிறேன். ஏதாவது முககியமான காரியம், நல்ல காரியம் என்றால்தான் பியட்டை எடுப்பேன்."

எல்லோரும் மதிவாணன் தொடர்வதை ஆவலுடன் பார்த்தனர்.

"போன வாரம் நான் பத்து நாள் ஊரில் இல்லை. மனைவியைக் கூட்டிக் கொண்டு பம்பாய் போயிருந்தேன். பதினைந்து நாள் தங்கும்படி இருந்தது. ஒரு திருமணம். புதுமனை புகுவிழா, ஆண்டு நிறைவு என்று எல்லாம் அடுத்தடுத்து இருந்ததால் தங்கி விட்டேன்."

கண்ணாடி அணிந்த ஒரு இளைஞன் உள்ளே வந்தான்.

"இவன்தான் பிரபு. என்னுடைய ஒரே மகன். இங்கேதான் கல்லூரியில் படிக்கிறான்" என்று மகனை அறிமுகப்படுத்திய மதிவாணன், சாட்பீட்கித்தையும், பூபதியையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

"வணக்கம் அண்ணா" - நால்வரும் வணங்கினர். பதிலுக்கு வணக்கம் சொன்ன பிரபு காலியாக இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான்.

"போலீசில் தெரிவிக்க அவசியம் இல்லைன்னு சொன்னீங்க. அப்ப இவங்களை எதுக்கு வரவழைச்சிருக்கீங்க அப்பா?" என்றான் பிரபு.

"நான் வரவழைக்கலே பிரபு. நம்ம பூபதிதான் இவர்களிடம் சொல்லிக் கூட்டிக் கொண்டு வந்திருக்கான்" என்றார் மதிவாணன்.

"என்னவோ காக்கை உட்காரப் பனம் பழம் விழ, இவங்க ஏதோ ஒரு திருட்டைக் கண்டுபிடிச்சுக் கொடுத்துட்டா பெரிய துப்பறியும் புலிகள்னு நினைப்பா? சின்னப் பசங்க சமாச்சாரமா என்னவாவது பண்ணி வைக்கப் போறாங்க அப்பா. இதையெல்லாம் ஊக்கி விடக் கூடாது" என்று சிடுசிடுத்தான் பிரபு.

"திருட்டு நடந்திருக்கிறது பெரிய மர்மம்தானே பிரபு? இதை இவங்களிடம் சொல்வதால் எந்த இழப்பும் இல்லையே? என்னமோ பூப்தி கூட்டிக்கிட்டு வந்திருக்கான். இந்த மாதிரி திறமைகளை நாம்ப உற்சாகப்படுத்த வேண்டாமா?"


"எனக்கு என்னவோ பிடிக்கலேப்பா."



மதிவாணன் பிரபுவின் எண்ணத்திற்கு அதிக மதிப்பு வைக்கவில்லை. தானே தொடர்ந்தார்.

"நானும் மனைவியும் மட்டும்தான் பம்பாய் போனோம். போகும் போது, காரை காரேஜில் வைத்துப் பூட்டி விட்டுத்தான் போனேன். திரும்ப நான் வந்து பார்த்தால், காரேஜில் கார் இல்லை. போலீசுக்கு போன் பண்ணலாமா என்று எண்ணினேன். அதற்குள் கார் சந்தைப் பேட்டை மாரியம்மன் இடவில் இருப்பதாகத் தகவல் வந்தது. போய்ப் பார்த்தோம். காரில எந்த பாகமும் திருட்டுப் போகவில்லை. மெக்கானிக்கைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினேன். அவரும், காரில் எல்லாமே சரியாக இருப்பதாகவும் கூறி விட்டார். நாளைக்கு எனக்குப் பிறந்த நாள். எல்லாப் பிறந்த நாளன்றும் இதே காரில் குடும்பத்தோடு திருநீர்மலைப் பெருமாளைத் தரிசித்து வருவேன். போலீசில் புகார் பண்ண வேண்டாம் என்று தோன்றியது. அதான் பேசாமல் இருந்து விட்டேன்."

சாட்பீட்கித் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.



"சார், நாங்கள் ஏதாவது கேட்கலாமா?" என்று கேட்டான் சாதிக்.

"தாராளமாகக் கேளு தம்பி. பதில் சொல்றேன். கார் பத்து கிலோ மீட்டர் ஓடியிருக்கு. அதுக்கான பெட்ரோல் செலவாகியிருக்கு. மற்றபடி காரில் எல்லாமே அப்படியே இருக்கு. யார் எடுத்திருக்காங்க? எப்படி எடுத்திருக்காங்க? எதுக்கு எடுத்தாங்க என்பதுதான் மர்மமா இருக்கு!" என்றார் மதிவாணன்.

"நீங்க ஊருக்குப் போனப்போ வீட்ல யாரெல்லாம் இருந்தாங்க?"

"தோட்டக்காரர் மட்டும்தான் இருந்தார். அவர்தான் காவல்காரர் கூட."

"பிரபு அண்ணன்?"

"அவனுக்குக் கல்லூரி இருந்ததே? அதனால வரலை."

"வீட்டுல சமையற்காரர் இல்லையா?"

"இருக்காரே. ஆனா, பிரபு ஒருவனுக்காக எதுக்கு சமைக்கிறது என்று அவருக்கு பதினாறு நாள் லீவு கொடுத்து அனுப்பினேன்."

"அண்ணா, உங்களை ஏதாவது கேட்கலாமா?"

"பெரிய அகதாகிறிஸ்டின்னு நினைப்பு. கேளுங்கடா பொடிசுகளா?" என்றான் பிரபு.

"உங்களுக்குக் கார் விடத் தெரியுமா?"

"தெரியும். லைசென்ஸ் இருக்கு."

"சார், காருடைய கேரேஜ் எங்கே இருக்கு?"

"தனியா, இதே காம்பவுண்டில் வீட்டுக்கு இடதுபக்கம் இருக்கு. ஷட்டர் போட்டு மூடிடலாம். கார் உள்ளே இருக்கா வெளியே போயிடுச்சான்னு கூடக் கண்டுபிடிக்க முடியாது. திறந்து பார்த்தால்தான் தெரியும்" என்றார் மதிவாணன்.

"காரேஜில் கார், இல்லைங்கறதை எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"நான் ஊரிலே இருந்து வந்ததும், பதினைந்து நாளாகக் காரை எடுக்கவே இல்லையே. அதனால காரை வெளியே எடுத்து தோட்டக்காரரைத் துடைக்கச் சொல்லலாம்னு, தோட்டக்காரரைக் கூப்பிட்டேன். காரேஜைத் திறக்கச் சொல்லி சாவியைத் தந்தேன். அவர் வாங்கிக்கிட்டுப் போனார். போன சுருக்குல பதறிக்கிட்டு ஓடி வந்தார். எஜமான், காரை காரேஜில் காணோம்னு பதறினார்."

"அவருக்குக் கார் ஓட்டத் தெரியுமா சார்?"

"தெரியாது தம்பி. சாவியைக் கொடுத்தா, காரேஜோட கதவைத் திறந்து வைப்பார். அவ்வளவுதான்."

"காரை எடுத்துக்கிட்டுப் போனவங்க, காரேஜைத் திறந்து, காரை எடுத்துக்கிட்டுப் போயி, காரேஜோட கதவை வேற பழையபடி மூடிப் பூட்டிக்கிட்டுப் போயிருக்காங்களே! தோட்டக்காரருக்குத் தெரியாமல் இதைப் பண்ண முடியுமா?" என்று கேட்டாள் கீதா.

"உண்மைதாம்மா. ஆனால் அவன் நம்ம வீட்டை விட்டு வெளியே போகவே இல்லைன்னு சாதிக்கிறானே! காரேஜ் சாவி, கார் சாவி எல்லாம் உள்ளே பாதுகாப்பா வைச்சிருந்தேனே?"

"அண்ணனும் கார் ஓட்டுவார் இல்லே? அண்ணனே ஏன் காரை வெளியே எடுத்துக்கிட்டுப் போயிருக்கக் கூடாது?" என்றான் சாதிக்.

"டேய் ஷெர்லக் ஹோம்ஸ். கார் எங்க வீட்டுக் கார். நான் வேணுமானா தைரியமா தோட்டக்காரன்கிட்ட சொல்லிட்டே எடுத்துக்கிட்டுப் போகலாம். அதுக்கு யார் தயவும் அவசியம் இல்லே. ஆனா, நான் அப்படிச் செய்யலே. அதுதானே இதில் மர்மம்?" என்றான் பிரபு காட்டமாக.

"கார் சந்தைப்பேட்டை மைதானத்தில் இருக்குன்னு உங்களுக்கு யார் சார் முதல்ல சொன்னது?" என்று கேட்டான் பீட்டர்.

"எனக்கு நினைப்பில்லையே...!" என்று தலையைச் சொறிந்தார் மதிவாணன்.

"சரி. யோசிச்சு நினைப்பு வந்தால் சொல்லுங்க" என்று கேட்டுக் கொண்ட கீதா, "சார் காரேஜோட பூட்டை செக் பண்ணினீங்களா? அதுக்கு மறு சாவி போட்டிருக்கான்னு சோதிச்சுப் பார்த்தீங்களா?" என்றாள்.

"காரேஜ் பூட்டையும், கார் சாவியையும் மெக்கானிக்கே வந்து பார்த்து சோதனை பண்ணினான். சார் ஒரு கீறல் கூட இரண்டிலும் இல்லை. மாற்று சாவியே போடலேன்னு அவன் சாதிக்கிறான்."

"அதாவது இவைகளுக்கு உரிய சாவிகளைப் போட்டே திறந்து எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள் என்கிறான் மெக்கானிக். அப்படித்தானே?" என்றான் பீட்டர்.

"ஆமாம்" என்ற மதிவாணன், "போலீசுக்குப் புகார் பண்ணலாம்னு எழுதிக் கொண்டிருந்தப்போ, கார் அனாதையா சந்தைப்பேட்டை மைதானத்தில் நிக்குதுன்னு தகவல் வந்தது. உடனே போய் எடுத்துக்கிட்டு வந்தேன். இதை யாரு, எதுக்கு, எப்படி எடுத்துக்கிட்டுப் போனாங்க என்பதுதான் ஒரே மர்மமா இருக்கு," என்றார்.

சாதுபீட்கீத் கேட்டுக் கொண்டபடி காரேஜைத் திறந்து காரைக் காட்டினார் மதிவாணன்.

"காரை இன்னும் துடைக்கக்கூட இல்லை. இனிமேல்தான் பண்ணணும்" என்றார் மதிவாணன்.


மூவரும் காரின் சீட்டைத் தூக்கி விட்டுப் பார்த்தார்கள். பேனட், டிக்கியைத் திறந்து பார்த்தார்கள். எதுவும் இல்லை. காரின் மேல், சாமான் வைப்பதான இரும்பு கேரியர் பொருத்தப்பட்டிருந்தது. அதன் கம்பி நுனியில் ஏதோ ஒரு வாடிப் போன பூ. அது வாசனையாக இருக்கவே பீட்டர் அதை எடுத்துக் கையில் வைத்து மூடி முகர்ந்து கொண்டிருந்தான்.


"சார், நாங்கள் எங்களுக்குள் விவாதித்துக் கொண்டு மறுபடி உங்களை சந்திக்கிறோம். கார் சந்தைப்பேட்டை மைதானத்தில் இருப்பதை யார் உங்களுக்கு முதலில்

"உனக்கு செல்வம்... வீரம்... கல்வி... இந்த மூன்றில் எது வேண்டும்.. கேள்.. தருகிறேன்."

"மூன்றும் தேவையில்லை. பரீட்சை மட்டும் இல்லாமல் செய் போதும்..."

— இரா. திலீப்





தெரிவித்தார்கள் என்பதை மட்டும் யோசித்துக் கூறுங்கள்" என்று மூவரும் விடைபெற்றுக் கொண்டனர்.

"டேய் சூரப் புலிகளா... நீங்கள் மட்டும் இதன் மர்மத்தைக் கண்டுபிடியுங்கள். நான் இடது காதில் ஒரு வாரம் ஜிமிக்கி மாட்டிக் கொண்டு பள்ளிக்கு வரேன்" என்று சவால் விட்டு அனுப்பினான் பூபதி.

கீதா வீட்டு மொட்டை மாடியில் மூவரும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டனர்.

"உறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டிய" ஊகங்கள் என்று கீதா எழுதினாள்.

"கார் பழகியவர்களாலேயே எடுக்கப் பட்டிருக்கிறது. எனவே எடுத்தவர்கள் மதிவாணனோ, இல்லை பிரபுவோதான். மதிவாணன் ஊரில் இல்லை. பிரபு மறுக்கிறான். மறுப்பதற்கு என்ன காரணம் இருக்கக்கூடும்? இரண்டாவது ஊகம், கார் பத்து கி.மீ. தூரமே ஓட்டப்பட்டிருக்கிறது. அதாவது மிக அருகில். சுற்றுவட்டாரத்திற்குள். மூன்றாவது, காரைத் தோட்டக்காரன் அறியாது எடுத்து வந்திருக்க முடியாது. ஆனால் தோட்டக்காரன் மறுக்கிறான். என்ன காரணமாக இருக்கக் கூடும்?"

"பீட்டர் என்னடா கையில? என்னமோ முகர்ந்து முகர்ந்து பார்க்கிறாயே?" என்றான் கீதா.

பீட்டர் கையைத் திறந்து காட்டினான். வாடிய மலர்.

"காருக்கு மேலே கேரியர் இருந்ததே, அதில் இது சிக்கிக் கிடந்தது" கீதா பரபரப்புடன் அதை வாங்கிப் பார்த்தாள்.

"இது நாகலிங்கப் பூ! இதுதான் லிங்கம் இருக்கும் மொட்டுப் பகுதி. இந்தப் பூ இங்கே அருகில் யார் வீட்டிலும் இல்லையே! இது எப்படி காரின் கேரியருக்கு வந்திருக்க முடியும்?"

"அருந்ததி நகர்ல ஏழாவது குறுக்குத் தெருவில் சாவரின் அபார்ட்மெண்டில் இந்த மரம் இருக்கு."

"காரைக் கடத்தினவன் எதுக்கோ அங்க காரை நிறுத்த, மரத்திலே இருந்து நாகலிங்கப் பூ அதன் மேல் விழுந்திடுச்சு. அப்படித்தான் இருக்க வேண்டும்."

மூவரும் சாவரின் அபார்ட்மெண்டில், சாலை ஓரமாக நாகலிங்க மரம் இருப்பதை உறுதி செய்து கொண்டார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டபடி, மதிவாணன் தனது காரை அங்கே கொண்டு வந்து நிறுத்தி ஹார்ன் கொடுத்தார். ஜன்னல் வழியாக சில வாண்டுகள் எட்...

டிப் பார்த்தன. 'ஹாய்' என்று கத்திக் கொண்டு ஓடி வந்தனர். நால்வரும் கதவைத் திறந்து விட்டு மறைந்து கொண்டனர்.

"அதே கார்டா" என்று கத்தியபடி பின் சீட்டில் அமர்ந்தான் ஒரு வாண்டு.

"தாத்தாவைத்தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிட்டாங்களே? பின்ன ஏன் இந்த வெள்ளைக் கார் மறுபடி வந்திருக்கு?" என்று கேட்டாள் ஒரு சிறுமி.

"இது அதே கார்தானா?"

"ஆமாண்டா. அதே கார்தான். நான்தான் நெம்பரைப் பார்த்தேனே? அதே CDB 342. கூட்டிப் பார் ஒன்பது வரும். தாத்தாவுக்கு ஒன்பதாம் எண்ணும், வெள்ளைக் கலரும் ராசியானதாமே? அதனால் தானே இந்தக் காரை வரவழைச்சுக் கூட்டிக்கிட்டுப் போனாங்க."

"கார் வந்த இடம், வந்த காரணம் தெரிஞ்சு போச்சு. இதை யார் எடுத்து வந்திருப்பாங்க?" என்று மெதுவாகக் கேட்டாள் கீதா.

"காரை ரமணி மாமாவின் நண்பன் பிரபு அண்ணாதானே எடுத்துக்கிட்டு வந்தார்? இப்போ யார் எடுத்துக்கிட்டு வந்தாங்கன்னு தெரியலையே...!" என்று கேட்டாள் பின்பக்கம் சாய்ந்திருந்த சிறுமி.

"காரை யார் எடுத்துக்கிட்டு வந்தாங்கன்னும் தெரிஞ்சு போச்சு. வாங்க போகலாம்" என்று மறைவில் இருந்து வெளியே வந்தார் மதிவாணன்.

நால்வரும் காரில் கிளம்பினர்.

"சார், பம்பாயில் இருந்து என்னிக்குத் திருப்பி வந்தீங்க? விமானத்திலா இல்லே ரயிலிலா?" என்று கேட்டான் பீட்டர்.


"பதினைந்து நாள் இருப்பதாகத்தான் போனோம். ஆனால் கிளம்பும் போது நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்தாங்க. ஏற்கெனவே ரிசர்வ் பண்ணியிருந்த நாள் நல்ல நாள் இல்லைன்னு சொல்லிட்டாங்க. அடுத்த நல்ல நாள் வர இன்னும் ஒரு வாரம் காத்திருக்கணும். அதுவரை எங்களால் அங்கே இருக்க முடியலே. அதனால் முன்னதாகவே ஏதாவது நல்ல நாள் இருக்கான்னு பார்த்தோம்! மூன்று நாள் முன்னாடியே கிடைச்சுது. அதனால் மூன்று நாள் முன்னதாகவே விமானத்தில் கிளம்பி வந்தோம்" என்றார் மதிவாணன்.

பீட்டர் துள்ளிக் குதித்தான் மகிழ்ச்சியில். "சார், நீங்க மூன்று நாள் முன்னதாகவே பிளேனில் வரது பிரபு அண்ணனுக்குத் தெரியாது இல்லையா? சாவரின் அபார்ட்மெண்டில் உள்ள தனது நண்பன் ரமணியின் தாத்தாவுக்காக; அவரது நம்பிக்கைக்கு மதிப்பளிக்க ஒன்பதாவது எண் வரும் வெள்ளைக் கலர், அம்பாசிடர் காரை பிரபு எடுத்துக் கொண்டு போயிருக்கிறார். சாவரின் அபார்ட்மெண்டில் நிறுத்தியிருக்கிறார். நாகலிங்கப் பூ அதன் மேல் விழுந்திருக்கு. கேரியர் கம்பியில் மடங்கி சிக்கியிருக்கு. ரயிலில் தாத்தாவை அனுப்பிய பிறகுதான், நீங்கள் திடீரென்று முன்னதாகவே திரும்பி விட்டது அண்ணனுக்குத் தெரிந்திருக்கிறது. நீங்கள் ஏதாவது திட்டப் போகிறீர்களோன்னு பயந்து அண்ணன் காரை சந்தைப்பேட்டை மைதானத்தில் விட்டு விட்டுத் திரும்பியிருக்கிறார். திட்டப்படி நீங்கள் இன்னும் மூன்று நாள் கழித்து வந்திருந்தால், காரை அவரே கொண்டு போய் இருந்த இடத்திலேயே திருப்பிக் கொண்டு வந்து வைத்திருப்பார்" என்றான் சாதிக்.

குற்றத்தைத் தலைகுனிந்து ஒப்புக் கொண்ட பிரபு, "அப்பா, நம்ம தோட்டக்காரன் குப்புசாமி நிரபராதி. அவனை வேண்டுமென்றே என் நண்பன் முரளி வீட்டுக்கு அனுப்பி விட்டு நான்தான் காரை எடுத்துக் கொண்டு போனேன்" என்றான் திகைப்புடன்.

"பூபதி, ஒரு வாரம் வரை பந்தயம் போட்டபடி என் ஜிமிக்கியையே போட்டுக் கொள்கிறாயா? இல்லே புதுசா வாங்கிக்கப் போறீயா?" என்று கேட்டாள் கீதா.

பூபதி அரண்டு போய் நின்றான்!



"உங்க அப்பாவுக்கு இசையில ஈடுபாடு அதிகமா? உனக்கு "சிந்து"ன்னு பேரு வச்சருக்காரே?"

"அட நீ ஒன்னு அவர் ஒரு சரியான 'பக' பிரியர்.

– எம். எம். தேவதாசன்.

நீங்களே ராஜா!

இளமதியன்

அந்தக் காட்டின் ராஜாவான சிங்கம் வேடர்கள் விரித்து வைத்து இருந்த வலையில் சிக்கி தப்ப வழியில்லாமல் திணறிக் கொண்டிருந்தது. பரம்பரையாக அந்தக் காட்டிற்கு அந்தச் சிங்கத்தின் குடும்பத்தினரே ராஜாவாக இருந்து வந்தனர். அக்காட்டிலுள்ள மற்ற விலங்குகளும் சிங்கத்திற்கு மிகவும் மரியாதை கொடுத்தன. சிங்கமும் காட்டு விலங்குகளைத் துன்புறுத்தாமல் இருந்து வந்தது. வலையில் சிக்கியிருந்த சிங்கத்தை அந்த வழியாக வந்த நரியார் பார்த்தார்.

"அரசே! எப்படி உங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது?" என்று கேட்டது நரி.

"கவனிக்காமல் வந்து மாட்டிக் கொண்டேன். என்னை எப்படியாவது காப்பாற்று" என்று சிங்கம் கேட்டது.

"ஒரு நிமிடத்தில் உங்களைக் காப்பாற்றுகிறேன்" என்று சென்ற நரி, சிறிது நேரத்தில் இரண்டு எலிகளுடன் வந்தது. எலிகள் உடனே வலையைத் தமது கூரிய பற்களால் கடித்து அறுத்தன. சிங்கமும் விடுதலையடைந்தது.

"நீங்கள் உதவியதை மறக்கவே மாட்டேன் எலிகளே" என்றது சிங்கம்.

"உங்களுக்கு உதவி செய்ய நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அரசே" என்றன எலிகள்.

"ஏதாவது உதவி தேவைப்பட்டால் என்னை வந்து பாருங்கள்" என்றது சிங்கம். எலிகள் விடைபெற்றுக் கொண்டு சென்றன.

"ரொம்ப நன்றி நரியாரே" என்றது சிங்கம்.

தந்திரம் மிக்க நரி, "அரசே நீங்கள் வலிமை மிக்கவர். உங்களுக்கு உதவ கடைசியில் இரண்டு அற்ப எலிகள் தேவைப்பட்டதே" என்றது.

"இதில் என்ன தவறு?" என்றது சிங்கம்.

"எலிகள் இல்லாவிட்டால் நீங்கள் உயிரோடு இருந்திருக்க மாட்டீர்கள் என்ற செய்தி மற்ற விலங்குகளுக்குத் தெரிந்தால் அவை உங்களைக் கேவலமாக நினைக்குமே?" என்றது நரி.

"இதற்கு நான் என்ன செய்வது?" என்றது சிங்கம் வருத்தத்துடன்.

"இந்த விஷயம் தெரிந்த எலிகள் மற்ற விலங்குகளுடன் பழகாமல் வலைக்குள்ளேயே இருக்கும். அவற்றினால் பிரச்னையில்லை. அடுத்தது நான் மட்டும்தான் விஷயம் தெரிந்தவன்" என்றது நரி.

"சரி. உனக்கு என்ன வேண்டும் கேள்?" என்று சிங்கம் கேட்டது.

"நான் காலம் முழுவதும் உங்களுக்கு சேவை செய்ய வேண்டும். அதற்காக நான் உங்களுடனேயே இருக்க வேண்டும்" என்றது நரி.

இதைக் கேட்ட சிங்கம் மிகவும் மகிழ்ச்சியுடன், "இனி நீ என் உடன்பிறவாத் தோழன்" என்றது.

அன்றிலிருந்து சிங்கத்துடனேயே எல்லா இடங்களுக்கும் நரியும் சென்றது. சிங்கத்திற்குக் கிடைத்த அத்தனை மரியாதையும் நரிக்கும் கிடைத்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு நரி தன்னுடைய வேலைகளைக் காட்ட ஆரம்பித்தது.

நரி, புலி யானை போன்ற பெரிய

வகைப்படுத்துங்கள், சேராதது எது? - போட்டி முடிவு

இதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொட்டுவிட்டது. பெரும்பாலானவர்கள் சரியான விடையையே எழுதி அசத்தியிருக்கிறார்கள்! குலுக்கல் முறையே பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க உதவியது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஜெ. கௌரிசங்கர், சந்த்ராபூர் மா.வ. மகாராஷ்டிரா. 2. என். யசோதா, நெப்பட்டைக்காடு, சேலம் மா.வ. 3. ரா. ரெக்ஸன், சிப்பிகுளம், வ.உ.சி. மா.வ. 4. எஸ். சியாமளா, பம்பாய் - 6. 14, மகாராஷ்டிரா. 5. இரா. மரகதவல்லி, மதுரை - 7. 6. கே. தினேஷ் குமார், கடலூர் - 1. 7. எம். காயத்ரி, ஜெயம் கொண்டான். 8. எஸ்.எம். கார்த்திக், ஹைதராபாத், ஆந்திரா. 9. எம்.எம். இளம்பரிதி, அவலப்பம்பட்டி, பொள்ளாச்சி வட்டம். 10. அ. சங்கர், கன்னிக் கோட்டை, கேரளா. ஜி. குமரன், கொட்டுசேரி, காரைக்கால் வழி, 12. ஏ. ஜோஹ்வா, பெரிய மேலமையூர், வல்லம் P.O. 13. எம். கே. கதிரவன், பெட்னகுடி, கர்நாடகா. 14. P. பொன்னி வளவன், பெருந்துறை. 15. ஏ. ஹாஜா நஜ்முதீன், மதுக்கூர். 16. சி. நாராயண், பம்பாய் - 89. 17. எம். மருதாம்பாள், மதுரை - 3. 18. டி. எழிலரசி, குடந்தை. 19. ஏ.ஜெ. அகமத் உஸ்மான் ஜஹீத், சென்னை - 1. 20. சிவபெருமாள், இரணியல், குமரி மாவட்டம். 21. திவ்யா சாய்நாத், பூனா, மகாராஷ்டிரா. 22. ப. செண்பக முருகன், சின்னாளப்பட்டி. 23. D. பிரியமதி, பரூர் P.O., தருமபுரி தாலுகா. 24. த. மதன்ராஜ், காரைக்கால். 25. இ. அன்பழகன், ரெட்டியார் பாளையம், புதுச்சேரி.

சரியான விடை :

தொகுதி - 1

- சைக்கிள் டயர்
- காற்று பம்ப்
- ஹாண்டில்பார் (கைப்பிடி)
- சைக்கிள் சீட்

தொகுதி - 2

- தூளி (ஏணை)
- பாலாடை
- பால்புட்டி
- கிலுகிலுப்பை

தொகுதி - 3

- ஸ்டெதாஸ்கோப்
- சிரிஞ்ச் (ஊசிக்குழாய்)
- தெர்மாமீட்டர்

தனித்திருப்பது
- மண்வெட்டி

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

மிருகங்களைக் கூடத் தன் உத்தரவுக்குக் கீழ்ப் பணியவைத்தது. எல்லா மிருகங்களும் நரியின் தொந்தரவு தாங்காமல் ரகசியமாகக் கூடி யோசனை செய்து ஒரு முடிவெடுத்தன.

அதன்படி பக்கத்துக் காட்டிலிருந்து ஒரு சிங்கத்தை வரவழைத்து ராஜாவாக்கி விழாவெடுக்க முயன்றன. இதனைக் கேள்விபட்ட பழைய சிங்க ராஜாவும், நரியும் அவ்விழா நடக்கும் இடத்தில் ஒளிந்து கொண்டு அங்கு நடப்பதைக் கவனித்தன.

புலி பேசியது. "என் வீரமென்ன? என்னையே வேலை வாங்குகிறான் அந்த நரி" என்றது.

யானையும், "என் இடதுகால் உதைக்குத் தாங்காத நரிக்கு நான் வேலை செய்கிறேன். இதைக் கேட்க நமது ராஜாவுக்கு தைரியமில்லை! எனவே, இனி இந்த சிங்கம்தான் நமது காட்டின் ராஜா" என்றது.

எல்லா மிருகங்களும் "புது ராஜா வாழ்க!" என்று கோஷம் எழுப்பியன.

நிலமை விபரீதமடைவதை உணர்ந்த நரி, "புது ராஜா வாழ்க!" என்று தானும் கூறிக் கொண்டே வெளிப்பட்டது. எல்லா மிருகங்களும் நரியைக் கோபத்துடன் பார்த்தன.

நரி உடனே, "தன்னையே காத்துக் கொள்ள சக்தியில்லாமல் எலிகள் தயவால் உயிர் பிழைத்து வாழும் பழைய சிங்கத்தைப் பதவியிறக்கம் செய்தது நரியே" என்று நடந்த அத்தனை விஷயங்களையும் போட்டு உடைத்தது.

ஒளிந்திருந்த சிங்கம் கோபத்துடன் வெளியே வந்தது. "நன்றி கெட்ட நரியே, எதை வெளியே சொல்லாதே என்று உன்னைக் கேட்டுக் கொண்டு உனக்கு சலுகை கொடுத்தேனோ அதை வெளியே சொல்லி விட்டாய். என் பெயரைக் கெடுத்த நீ, இனி உயிரோடு இருக்கக் கூடாது" என்று பாய்ந்தது. நரி தப்பிக்க ஓட்டமெடுத்தது. அருகிலிருந்து புலி பழைய பகையைத் தீர்த்துக் கொள்ள நரியை ஓர் அடி அடிக்க நரியின் கதை முடிந்தது.

பழைய ராஜாவான சிங்கம் பேசியது, "நண்பர்களே என்னை மன்னித்து விடுங்கள். நரியை நண்பன் என்று ஏமாந்து உங்

களுக்குத் தொல்லை கொடுத்து விட்டேன். நானும் புது ராஜாவை ஏற்றுக் கொள் கிறேன்'' என்றது.

உடனே மற்ற மிருகங்கள் "எங்களை மன்னியுங்கள் ராஜா. உங்கள் தவறை உங்களுக்குப் புரிய வைக்கத்தான் இப்படி நாடகம் ஆடினோம். நீங்களே தொடர்ந்து அரசாளுங்கள்'' என்றன.

"அப்படியென்றால் புது ராஜா?" என்று சந்தேகத்துடன் கேட்டது சிங்கம்.

"அவர் பக்கத்துக் காட்டு ராஜா. நாங் கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எங் கள் நாடகத்தில் ஒத்துழைத்தார்'' என்றது புலி.

"ரொம்ப நன்றி'' என்று பக்கத்துக் காட்டு ராஜாவுக்கு நன்றி தெரிவித்தது சிங்கம்.

எல்லா விலங்குகளும் "ராஜா வாழ்க" என்று கோஷம் எழுப்பின. சிங்கமும் ஆனந்தக் கண்ணீருடன் அவ்வாழ்த்தை ஏற்றுக் கொண்டது.



எங்கள் ஊரில் நடந்தது

கிள்ளுது

பத்தாம் வகுப்பில் படிக்கிறேன். உறவினர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுள் ஆறு வயது சித்தப்பா பையனும் ஒருவன். அம்மா கேட்டபடி கடைக்குச் சென்று வாழை இலை வாங்கி வந்தேன். வந்ததும் அதை அம்மாவிடம் கொடுத்துவிட்டு, 'அம்மா சீக்கிரம் சாப்பாடு போடுங்க. பசி வயிற்றைக் கிள்ளுது' என்று கூறினேன். அதற்கு என்னுடைய சித்தப்பா பையன் "எனக்கும் தான் பசிக்கிறது. ஆனால், வயிறைக் கிள்ளவில்லையே!" என்று கூறினான். வீடே சிரிப்பில் அதிர்ந்தது.

அனந்தபுரம், தி. கலையரசு

பிரபு போட்ட கோலம்!


வாசலில் கோலம் போடுவது அழகிற்கு மட்டுமல்ல, வெண்மையான கோலத்தைப் பார்ப்பதால் மனதிற்கு மகிழ்ச்சியும், அமைதியும் தருகிறது என்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். மறுநாள் காலை, வாசலில் என் சித்தி மகன் மூன்று வயது பிரபு, பவுடரை வாசலில் தூவிக் கொண்டிருந்தான். சித்தி பதறிப்போய் "எதுக்குடா இதை எடுத்தே?" என அதிர்ச்சியோடு கேட்டு அவனை அடித்து விட்டார்கள். அதற்கு அவன் "வாசலில் கோலம் போடுவது நல்லதுன்னு சொன்னாங்களே. அதான் கோலம் போட்டேன்" என மழலை மொழியில் கூறினான்.

ஆலங்காயம், தே. சங்கீதா

மஞ்சள் காமாலை

ஒருநாள் எங்கள் அறிவியல் ஆசிரியர் கண்ணினுடைய அமைப்பைப் படம் வரைந்து கொண்டு வரச் சொன்னார். "படத்தின் 'ஸ்கெட்ச்' போட்டால் போதும் என்றுதான் கூறினார். ஆனால் பூபதி என்ற மாணவன் மட்டும் மஞ்சள் நிறத்தில் கண்ணின் படத்தையே வரைந்து வந்தான். படம் தெளிவாகத் தெரியவில்லை. எங்கள் ஆசிரியர்," "ஏன் மஞ்சளில் படம்போட்டு வந்தாய்? சரியாகத் தெரியவில்லையே" என்றார். அப்போது ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "பூபதி வரைந்த கண்ணுக்கு மஞ்சள் காமாலை நோய், சார்" என்றானே பார்க்கலாம். சிரிப்பால் வயிற்று வலி தாங்கவில்லை!

அனந்தபுரம், கே.ஜெகன்நாதன்



தனிக்காலேஜ்!

நான், அத்தை, அண்ணன் மூவரும் ஒரு சமயம் சென்னைக்கு ரயிலில் சென்றோம். அத்தை அதுவரை ரயிலில் சென்றது இடையாது. கிராமத்துப் பெண்மணி. நானும், அத்தையும் ரயிலில் ஒரு 'காரேஜி'ல் ஏறிக்கொண்டோம். அண்ணன் மட்டும் வேறொரு 'காரேஜி'ல் ஏறிக் கொண்டார். இது பற்றித் தெரியாத அத்தை, "அண்ணன் எங்கே?" என்று கேட்டார். "அண்ணன் வேறொரு காரேஜில் ஏறிக் கொண்டார்," என்று அத்தையிடம் சொன்னேன். அதற்கு அத்தை "அவன் மட்டும் ஏன் தனியாக தனிக் 'காலேஜி'ல் ஏறிக் கொண்டான்? இல்லை என்றால் நாமும் அவனோடு அந்த 'காலேஜிலேயே ஏறிக் கொண்டிருக்கலாமே!" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்துப் பார்த்த பிறகுதான் அத்தை 'காரேஜை', 'காலேஜ்' என்று தப்பாகப் புரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. மனதுக்குள் சிரித்துக் கொண்டே, அத்தைக்கு விளக்கினேன்.

முடிகொண்டான், கவிதா வீராசுவாமி

எங்கள் ஊரில் நடந்தது



பேத்திகாண!

என் பாட்டி மிகவும் நல்லவர். அக்கம் பக்கத்தில் எல்லாராலும் மதிக்கப்படுபவர். ஒரு நாள் பக்கத்து வீட்டினரை ஒரு பத்திரிகையாளர் பேட்டி காண வந்திருந்தார். அதை அரைகுறையாகக் கேட்ட மூன்று வயதுத் தம்பி பாட்டியிடம் சென்று "பக்கத்து வீட்டுல பேத்தி காண வந்திருக்காங்க" என்று சொன்னான். "பக்கத்து வீட்டுக்காரருக்கு பேத்தியே இல்லையேடா? எப்படி பேத்தி காண வருவார்?" என்று கேட்டார் பாட்டி குழப்பத்துடன். வீடே ஒரே சிரிப்புதான்.

ஸ்ரீரங்கம், எஸ். லோகநாதன்

நன்றி!

எங்கள் வீட்டிற்கு அப்பாவின் நண்பர் ஒருவர் குடும்பத்துடன் வந்திருந்தார். சாப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு விலாசம் குறிப்பதற்காக அவர் சட்டைப் பையிலிருந்து பேனா எடுக்கும்போது அது தவறிக் கீழே விழுந்து விட்டது. அதனை அவர் தம் மகனை விட்டு எடுத்துத்தரச் சொன்னார். அவனும் எடுத்துத் தந்தான். உடனே அவர் 'தேங்க்ஸ்' என்று கூறினார். பையன் சென்ற பிறகு "ஏன் உங்கள் பையனுக்கே தேங்க்ஸ் சொன்னீர்கள்?" என்று கேட்டேன். யார், என்ன உதவி செய்தாலும் 'நன்றி' சொல்லும் பழக்கம் அவனுக்கு வர வேண்டும் என்பதற்காகவே அப்படிச் சொல்லிப் பழக்கப்படுத்துவதாகக் கூறினார். அவர் சொன்னது சரிதானே.

திருவாரூர், மு. தனகோபாலன்


மாமாதானே?

ஒருநாள் எங்கள் தெருவில் துணிக்காரர் வந்து கொண்டிருந்தார். என் 3 வயது தம்பி பாபு சட்டை எடுக்க வேண்டும் என்று அடம்பிடித்தான். அவனது தொந்தரவு தாங்காமல் அம்மாவும், துணிக்காரரை அழைத்து பாபுவுக்கு துணி எடுத்தார். "சட்டைத் துணி எண்பது ரூபாய் அக்கா" என்றார் துணிக்காரர். மரியாதை, அன்புக்காக என் அம்மாவை அக்கா என்று அழைத்தார். அம்மா "75 ரூபாய்க்குக் கொடுங்கள்" என்று கேட்டார். உடனே அவர், "இல்லக்கா, எண்பது ரூபாய்க்கு ஒரு காசுகூடக் குறைத்துத் தர முடியாது" என்று சொல்லி விட்டார். என் தம்பி துணிக்காரரைப் பார்த்து "என்ன மாமா? நான் உங்க அக்கா பையன்தானே? இன்னும் இரண்டு சட்டை சும்மாவே கூட நீங்க தரலாமே மாமா?" என்று சொன்னதைக் கேட்டு நாங்கள் ஒன்றும் புரியாமல் விழித்தோம். பிறகுதான் புரிந்தது. துணிக்காரர் அம்மாவை அக்கா என்று அழைத்ததால், அவன் அவரை மாமா என்று அழைத்திருக்கிறான் என்று! மாமாதானே என்று சட்டைத்துணியைச் சும்மாவே தரக் கேட்டிருக்கிறான்! துணிக்காரர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

சோழன்மாளிகை, நா. சாந்தி

உட்காரு!

அன்று எங்களுக்குக் கோடை விடுமுறைவிடும் தருவாய். கடைசி நாளானதால் ஆசிரியர் எங்களுடன் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்தார்.. "நான் உங்களிடம் சில சொற்களைக் கூறுவேன். நீங்கள் அவற்றிற்கு எதிர்ப்பதம் சொல்லணும்" என்றார். நாங்களும் தயாரானோம். ஒரு மாணவனை எழுப்பி "மேலே" என்றார். அவன் எழுந்து நின்று "கீழே" என்றான். இதற்குள் ஒரு மாணவன் வெளியே வேடிக்கை பார்த்துக்



எங்கள் ஊரில் நடந்தது

கொண்டிருப்பதை ஆசிரியர் கவனித்து விட்டார். அவனை எழுப்பி, "எழுந்திரு" என்றார். உடனே அவன் எழுந்து நின்று "உட்காரு" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்.

துத்திப்பட்டு, ராம. ஜெயகாந்தன்

இரண்டு இருக்கு

சென்ற வாரம் அப்பாவுக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் வந்தார். "என் மகனுக்கு அடுத்த மாதம் திருமணம். கடனாக இரண்டு ரூபாய் இருந்தால் கொடு. ஆறு மாதத்திற்குள் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என அப்பாவைக் கேட்டார். "இப்போது கையில் பணம் இல்லை. அடுத்த வாரம் வா. ஏற்பாடு செய்து தருகிறேன்" என்றார் அப்பா. அருகில் இருந்த 5வது படிக்கும் என் தம்பி "மாமா, பாட்டி திருவிழாவுக்குக் கொடுத்த பணத்தில் என்னிடம் இரண்டு ரூபாய் இருக்கு. நீங்க வாங்கிக்கிட்டுப் போய் கல்யாணத்தை நடத்துங்க" என்று இரண்டு ரூபாயை நீட்ட, உறவினர் அசந்து போனார். பிறகுதான் ரூபாய் இரண்டு என்பது இரண்டாயிரம் என்பதை அப்பா தம்பிக்கு விளக்கினார். அனைவரும் சிரித்து விட்டோம்.

மல்லாண்டியூர், கே. பிரேமா

தாகம் புரிந்தது

விடுமுறை நாட்களில் வயலில் வேலை செய்யும் எனது தந்தைக்கோ, தாத்தாவுக்குகோ உணவு எடுத்துச் செல்வேன். ஒருநாள் உணவு கொடுத்து விட்டுத் திரும்பும் வழியில், வறட்சி நாக்கை வருத்தியது. கடுமையான வெயில் நேரம். வாயில் உமிழ்நீரை விழுங்கிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தேன். வீடு வந்ததும் நிறையத் தண்ணீர் குடித்தேன். தாகம் அடங்கியது. அப்போதுதான் தாகம் எப்படிப்பட்டது என்பதைப் புரிந்து கொண்டேன். எங்கள் வீட்டின் நான்கு மாடுகளும் வெயிலிலேயே கட்டப்பட்டிருக்கும். உடனே இரண்டு வாளிகளை எடுத்து எல்லாவற்றிற்கும் நீர் வைத்தேன். அவை என்னை நன்றியோடு பார்ப்பது போலிருந்தது. அன்று முதல், நேரம் கிடைத்த போதெல்லாம் தவறாமல் மாடுகளுக்குத் தண்ணீர் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

திருக்கண்ணங்குடி, நீ. சிவானந்தம்

சோயாப்பால்

ஒருநாள் கனமான மழை பெய்ததால் பலபேர் விடுப்புப் போட்டு விட்டார்கள். ஆசிரியர்கள் கூட அதிகம்பேர் பாடசாலைக்கு வரவில்லை. எங்கள் வகுப்பில் மாணவர்கள் வரவு மிகக் குறைவு. எமது வகுப்பு ஆசிரியர் மட்டும் எப்படியோ வந்திருந்தார். பயனுள்ள வழியில் பொழுதைக் கழிக்க எமது ஆசிரியர் மற்ற வகுப்பு மாணவர்களையும் சேர்த்து வைத்து பொது அறிவுக் கேள்விகள் சிலவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தார். மாணவர்களும் தெரிந்தவரை பதில் கூறிக் கொண்டிருந்தனர். எனக்கு முன் வரிசையில் இருந்த மாணவனிடம், "பசும்பாலைப் பசுவிலிருந்து பெறுவது போல், சோயா பாலை எதிலிருந்து பெறுவது?"எனக் கேட்டார். அதற்கு அவன் "சோயாபால் சோயாவிலிருந்து கறப்பது" என்றான். சிரிப்புக்கு கேட்கவா வேண்டும்?

கதிர். சந்திரகுமார்

(இந்தியத் தொடர்பு முகவரி இல்லை)

ஏழும்பத்தும்!

எங்கள் ஊரில் மின்சார மெக்கானிக் ஒருவர்

எங்கள் ஊரில் நடந்தது

இருந்தார். அவர் மின் கருவிக் கோளாறுகளை சரிசெய்வதில் நிபுணர். ஒரு சமயம் ஊரில் நடந்த ஒரு திருமணத்துக்கு மின் விளக்குகளைப் போடுவதற்காக அவரை அழைத்து இருந்தனர். அதைப் போடுவதற்கு ஆயத்தமாக்கிக் கொண்டு இருக்கும் பொழுது ஒருவர் அவரிடம் "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார். அவர் "ஏழும்பத்தும்" (SEVEN WILL LIGHT) என்று கூறினார். இதைக் கேட்டு திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். "உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டது, அவருக்கு ஏழு மின் பல்புகளும் வெளிச்சம் கொடுக்குமா என்று அவர் செவிகளில் விழுந்துள்ளது. இந்த சம்பவத்திற்குப் பிறகு ஊரில் எல்லோரும் அவரை ஏழும் பத்தும் என்றே அழைக்கிறார்கள். அவருக்கு வரும் தபால்களும் கூட ஆங்கிலத்தில் (SEVEN TEN) என்றே வருகின்றன. என்றால் பாருங்களேன்!

நீர்கொழும்பு, பர்ஸானா முஹமட்

கேட்காமல் போட்டது!

ஒருமுறை எங்களுடைய உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்கு குடும்பத்துடன் சென்று இரவு பஸ்ஸில் விடு திரும்பிக் கொண்டிருந்தோம். நானும் அண்ணனும் பேசிக் கொண்டே வந்தோம். ஒருவர் எங்கள் பஸ்ஸில் ஏறினார். ஏறியவுடனேயே அருகில் அவருக்குத் தெரிந்த ஒருவரிடம் தொணத்தொணவென்று நிறுத்தாமல் உரக்கப் பேசிக் கொண்டே வந்தார். போகும் வழியில் ரயில்வேகேட். கேட்டைப் இறக்கிப் பூட்டிருந்தார்கள். எங்கள் பேருந்து நின்றது. விடாமல் பேசிக் கொண்டே வந்தவர் "அடடா! கேட்டுப் (Gate) போட்டுட்டாங்களா?" என்று சாதாரணமாகக் கேட்டார். உடனே நான் "இல்லையே. கேட்காமல்தானே போட்டார்கள்" என்றேன். அமைதியாக இருந்த அந்த பஸ்ஸே கொல்லென்ற சிரிப் பால் அதிர்ந்தது.

இலால்குடி, தி.கனகராஜ்

உறுப்பினர் கப்பல்!


எங்கள் ஆங்கில ஆசிரியர், அடிக்கடி சில சிக்கலான ஆங்கிலச் சொற்களைக் கொடுத்து அதற்குத் தமிழில் அர்த்தம் எழுதிவரச் சொல்வார். இம்முறை அவர் கொடுத்த வார்த்தைகளில் 'membership' என்ற சொல்லும் இருந்தது. அதற்கு ஒரு மாணவன் வினோதமான விளக்கம் எழுதிக் கொண்டு வந்திருந்தான். அதாவது, member என்ற வார்த்தைக்கு 'உறுப்பினர்' என்றும், ship என்ற வார்த்தைக்கு 'கப்பல்' என்றும் அகராதியிலிருந்து தனித்தனியே அர்த்தம் கண்டுபிடித்து 'உறுப்பினர் கப்பல்' என்று எழுதி வந்திருந்தான். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம்!

சென்னை-600 116, இ.சிவா.


குறைத்து விடாதீர்கள்!

எங்கள் ஆசிரியர் எங்களையெல்லாம் சமூக சேவைப் பணிக்காக ஒரு கோயிலை சுத்தம் செய்யக் கூட்டிச் சென்றார். "நீங்கள் அனைவரும் நல்ல முறையில் இந்தப் பணியைச் செய்தால் உங்களுக்குப் பாயசமும், மதிப்பெண்ணும் கிடைக்கும். இல்லையென்றால் மதிப்பெண்ணைக் குறைத்து விடுவேன்" என்றார் ஆசிரியர். குறும்புக்கார மாணவன் ஒருவன் எழுந்தான். "சார் மதிப்பெண்ணைக் குறைத்தாலும் குறைத்து விடுங்கள். பாயாசத்தை மட்டும் குறைத்து விடாதீர்கள்" என்றானே அவன் பார்க்கலாம். மாணவர்களும் எல்லோரும் ஒன்றாகச் சிரித்தோம்!

களக்காடு, எம். முத்து










பொருத்துங்கள்


போட்டி





இங்கே மொத்தம் பதினாறு படங்கள் இருக்கின்றன. இவைகளில் மூன்றெழுத்துக் கொண்டவை எட்டு. இவைகளின் நடு எழுத்தை நீக்கி விட்டால் மீதி எட்டுப் படங்களில் உள்ளவை வரும். உதாரணம் : கடல். இதில் 'ட'வை எடுத்து விட்டால் வருவது கல். இந்த மாதிரியே மீதி ஏழு மூன்றெழுத்து, இவைகளுக்குத் தொடர்புடைய இரண்டெழுத்துப் படங்கள் ஏழு ஆகியவற்றை மட்டும் ஒரு தபால் கார்டில் எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். முடிவு தேதி : 31.12.95 தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பல்ல. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய முகவரியைத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதி விட்டால், குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.





12 12 12 12 12 12 12 12 12 12
12
12 ஆசிரியர்,
12 கோகுலம்,
12 47, ஜவாஹர்லால் நேரு
12 சாலை,
12 ஈக்காடுதாங்கல்,
12 சென்னை - 600 097
12



வீட்டைத் தாண்டி வராதே!



செல்வபுரம் ஜமீன்தார் சாமியார்களை தெய்வமாக மதிப்பவர்.

ஜமீன்தாரிடம் ராமு வேலை பார்த்து வந்தான். ஜமீன்தார் போலிச் சாமியார்களை நம்பிப் பொருள் இழந்து ஏமாறுவது ராமுவுக்குத் துன்பத்தைக் கொடுத்தது. ஒவ்வொரு முறை ஜமீன்தார் ஏமாறும் போதும், இனியாவது இப்படி ஏமாறாமல் இருக்கும்படி ராமு அவரைக் கேட்டுக் கொள்வான்.

இது போலிச்சாமியார் ஒருவருக்கு சினத்தைக் கொடுத்தது.

ஒரு நாள் ஜமீன்தாரின் மனைவிக்குக் கடுமையான ஜுரம் கண்டது. ஒரு மாதம் ஆன பிறகும் குறையவில்லை. போலிச் சாமியார், "ராமுவைப் போல் ஒரு சிறுவனைப் பலி கொடுத்து அதிக செலவில் பூஜை செய்தால் தங்கள் மனைவி பிழைப்பார்கள்" என்று கூறினார். ஜமீன்தார் யோசித்து விட்டு, "ராமுவையே பலி கொடுத்து விடலாம்" என்றார்.

இவர்கள் பேசிக் கொள்வதை இளநீர் கொடுக்க வந்த ராமு கேட்டு விட்டான். உடனே ஊரை விட்டே ஓடி விட்டான். ஜமீன்தார் ஆட்களை அனுப்பித் தேடியும் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ராமு தன் ஊரை விட்டு ஓடி வெகு தூரம் சென்று ஒரு கிராமத்தை அடைந்தான். குமார் என்பவனின் நட்புக் கிடைத்தது. இருவரும் ஒரு பஜ்ஜிக் கடையில் வேலை பார்த்தனர்.

ஒரு நாள் வியாபாரம் நடந்து கொண்டிருந்த போது தொலைவில் செல்வபுரம் ஜமீன்தாரும் அவரது கையாளும் வருவதை ராமு கண்டான். குமாரின் காதில் ஒரு செய்தியைக் கூறி விட்டு, கடையின் பின் பக்க வழியே சென்று விட்டான் ராமு.

ஜமீன்தாரும், அவரது கையாளும் கடையில் வந்து அமர்ந்தனர். ராமுவைப் பற்றி விசாரித்தனர்.

குமார், ராமு சொன்னபடி, "இங்கு பக்கத்து மலையில் ஒரு முகமூடிச் சாமியார் இருக்கிறார். அவர் பெரிய ஞானி. காணாமல் போனவர்களை எல்லாம் மை போட்டுக் கண்டுபிடித்து விடுவார். வாருங்கள்" என்று கூறி பக்கத்திலிருக்கும் மலைக் குடிசைக்கு அவர்களை அழைத்து வந்தான்.


"நீங்கள் ராமு என்பவனைத் தேடி செல்வபுரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். சரிதானா?" என்று கேட்டார் சாமியார். ஜமீன்தார் மிகவும் வியப்படைந்து அவரது ஞானதிருஷ்டியைப் புகழ்ந்து ஐநூறு ரூபாய் காணிக்கை வழங்கினார். "ராமு எங்கிருக்கிறான் என்பதைச் சொல்லுங்கள்" என்று கைகட்டிப் பணிவு டன் வேண்டினார்.

முகமூடிச் சாமியார், இலையில் மை போட்டுப் பார்த்து, "ராமு இறந்து பத்து நாட்கள் ஆகி விட்டன. இனி அவன் தேடினாலும் கிடைக்க மாட்டான். மேலும் ஒரு முக்கிய விஷயம். உங்களுக்கு வீட்டுக்கு வெளியே கண்டம் இருக்கிறது. அதனால் இனி வீட்டைத் தாண்டி வெளியே எந்தக் காரணம் கொண்டும் வராதீர்கள். உயிருக்கே ஆபத்து" என்று கூறினார்.


ஜமீன்தார், "இனி நான் இந்தப் பக்கமே வர மாட்டேன். நீங்கள்தான் என் உயிரைக் காப்பாற்றிய தெய்வம்" எனக் கூறி மேலும் நூறு ரூபாய் காணிக்கையாகத் தந்து விட்டு கையாளுடன் சென்று விட்டார்.

அவர் போன உடன் சாமியார் முகமூடியைக் கழற்றினார். அது வேறு யாருமல்ல! ராமுவேதான். "முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்" என்பதை உணர்ந்த ராமு தன் அறிவினால் உயிர் பிழைத்ததுடன் அவரிடம் காணிக்கையாகப் பணத்தையும் பெற்றான். அதை அனாதை இல்லங்களுக்குக் கொடுத்தான்.


வி. ராதா



கூந்தலழகி
அமைப்பு : ரே ஓவியம் : லலிதா
கிராமம் குஞ்ஙஸ்தி
என்றும் கடுமையான குடிநீர் பஞ்சம்
இதுக்கு விடிவே கிடையாதா கடவுளே!
எத்தனை அழகான கூந்தல்!
பெயரே கூந்தலழகி தான்!
கூந்தலழகி எல்லோருக்கும் உதவுவாள்.
நீங்க வரும்வரை பாப்பாவைப் பார்த்துக்கறேன்.
அம்மாவுக்கு
அப்பா இருந்தா இந்தக் கஷ்டம் இருக்காது பாவம்!
அம்மாவுக்கு, பெண் இதைப் பண்ணக் கூடாதா?
குடிக்க நீரில்லாம மாடு இறந்துட்டதாம்!
கடவுளே இதுக்கு வழியே இல்லையா?




ஒரு நாள் வழக்கப்படி -
அம்மா. மலைக்குப் போறேன் தண்ணி கொண்டு வர
ஜாக்கிரதைம்மா!
மலையேறுகிறாள் -
வழியில் ஆலமரம் -
எத்தனை பெரிசு! வரவங்க எல்லோருக்கும் நிழல் தருதே!
மலையேறும் போது -
அம்மா!
கல் தடுக்கி -
பள்ளத்தில் விழுகிறாள்
என்னது! டர்னிப் மாதிரி இருக்கே?



வியந்து பிடித்து இழுக்க -
அட! தண்ணி கொட்டுதே! கல் கண்டா இருக்கே!
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
என்னது! இழுத்துப் போட்ட டர்னிப் பழையபடி சுனை வாயை அடைச்சிட்டுதே!
மின்னல் மின்னி இடி இடிக்கிறது!
ஒளி வெள்ளம் பாய்கிறது - அதில்



வணக்கம் தாயே!
இந்த மலையின் தேவதை நான்!
தாயே, நீங்கள் இருந்துமா -
குடிநீருக்குக் கூட இப்படியா துன்பம்?
டர்னிப் ஓட்டை நீர் கிடைத்தால் கூடப் போதுமே?


அது ஒரு போதும் நடக்காது.
நடக்கவும் விடமாட்டேன்!
ஏன் தாயே?
இந்த கிராம மக்கள் சுயநலம் பிடித்தவர்கள். மற்றவர் நலனை எண்ணாதவர்கள்!
அதனால்தான்
இந்தத் தண்டனை
மன்னிப்பே
கிடையாதா?


என் கோபம் தீரவில்லை. அதுவரை தண்டனைதான்!
நல்லவர் கண்ணில் மட்டுமே இந்த டர்னிப் அடைப்பு தெரியும்!
தெய்வமே மனமிரங்கா விட்டால் எங்கள் கதி?
அதோ கதிதான்! டர்னிப் அடைப்பின் கீழே சுனை இருப்பது..
உனக்குத் தெரிந்து விட்டது..... இந்த இரகசியத்தை வெளியே கூறினால் என் சாபம் நிச்சயம்.


இருந்தாலும் நீ நல்லவள். என்ன வரம் வேண்டும் கேள்?
இந்த நீர், கிராம மக்களுக்குப் பயன்பட வேண்டும். வேறு எதுவும் தேவையில்லை.
அது மட்டும் நடக்காது. எச்சரிக்கையை மறக்காதே!
தேவதை மறைந்தது -
கூந்தலழகி கவலையுடன் திரும்பினாள்.
மக்கள் தண்ணீருக்காக -
அலைந்து திரிவது மனதை வருத்தியது.


ஒரு நாள் -
ஏம்மா அடிக்கிறே?
நாளைக்குன்னு வைச்ச தண்ணீரை இன்னிக்கே குடிச்சிட்டான்!
தண்ணி தூக்கும் கஷ்டம் இதுக்கு என்ன தெரியும்?
கூறி விடலாமா?
தேவதையின் எச்சரிக்கை -
நினைவுக்கு வரும்
தீர்க்க வழி தெரிந்தும் கூற முடிய வில்லையே!


கவலை, தவிப்பால் உடல் வாடியது. கூந்தலும் நரைத்து விடுகிறது!
??!!
என்னதான் ஆச்சு இந்தப் பெண்ணுக்கு? தலை நரைச்சுப் பேச்சே?
தண்ணி இல்லாம குதிரை இறந்து போச்சு.
தாமதிப்பது நியாயம் இல்லை. நான் ஒருத்தி சாபத்துக்கு ஆளானாலும் இவர்களுக்கு வழி பிறக்குமே!


எல்லோரும் என்னுடன் வாருங்கள். சுனை இருக்கும் இடம் தெரிந்து விட்டது!
இனி, நீருக்குப் பஞ்சம் இல்லை.
என்னோடு வாருங்கள் எல்லோரும்.
எல்லோருடனும் பள்ளத்திற்கு வருகிறாள்!


அதோ, அந்த டர்னிப்பை இழுக்கிறேன்.
தண்ணீர் வெள்ளமாகப் பாய்ந்து வருகிறது!
ஆகா! தண்ணீர்! சுவையான நீர். நம் குறை தீர்ந்தது!
இது வற்றாத சுனை. வாய்க்கால் வெட்டி நம் ஊருக்குக் கொண்டு போங்கள்.
அவள் கையில் உள்ள டர்னிப் பறந்து ஓட்டையை அடைத்து விடத் துடிக்கிறது!



மூலம் : சீன நாடோடிக் கதை

"மதத்தால் முஸ்லிமாக இருந்தாலும் இதுதான் என் தாய்த் திருநாடு, முதலில் நான் இந்தியன்" - ரெசாக்

நண்பர்களோடு விளையாடும் போதோ, பள்ளியில் படிக்கும்போதோ, 'நாம் ஹிந்து, பக்கத்து வீட்டு இக்பால் ஒரு முஸ்லிம், கடைசி வரிசையில் உட்காரும் எபனிஸர் ஒரு கிறிஸ்துவன்...' என்றெல்லாம் நாம் சிந்திப்பதேயில்லை.

பல சமயங்களில், நண்பர்களிடையே இந்த மாதிரி வித்தியாசப்படுத்திப் பார்க்க, பெரியவர்கள்தான் நம்மைத் தூண்டுகிறார்கள்– அல்லது தவறாகக் கற்றுத் தருகிறார்கள். அந்த மாதிரி சமயங்களில் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளாமல், நாம் தொடர்ந்து எப்போதும் போல் நண்பர்களாக இருக்க நிறைய மன உறுதி வேண்டும். அப்படிப்பட்ட மன உறுதி வாய்ந்த ஒரு சிறுவனின் கதைதான் ராம்–ரெசாக்!

சில கதைகளில் நல்ல கருத்துகள் இருக்கும்; வேறு சில கதைகளில் 'திக் திக்' கென்று நெஞ்சு துடிக்க வைக்கும் மர்மம் நிறைந்திருக்கும்; இன்னும் சில கதைகளில் விதவிதமான வர்ணனைகள் இருக்கும்; ஒரு சில கதைகளிலோ கதாபாத்திரங்கள் உயிருள்ள நபர்களைப் போலவே நடந்து கொண்டு நம்மை அப்படியே கதைப் போக்கில் கட்டிப் போட்டு விடுவார்கள்... ஆனால் இத்தனை சிறப்புகளையும் சேர்த்து ஒரே நாவலில் கூட அமைத்து விட முடியும் என்பது ராம்–ரெசாக் புத்தகத்தைப் படிக்கும் போது புரிகிறது.

ஒரு பழைமை வாய்ந்த கோயிலின் விக்ரகங்கள் திருட்டுப் போகாமல் ரெசாக் என்ற முஸ்லிம் சிறுவன் காப்பாற்றுகிறான். இதுவே கதையின் ஒருவரிச் சுருக்கம். முழுக்க முழுக்க மத நல்லிணக்கத்தையும், தேசிய ஒருமைப்பாட்டையும் சலிப்புத் தட்டாமல் வலியுறுத்துகிறது. ஒரே மூச்சில் படித்து முடிக்கத் தூண்டுகிறது. விரிவாகச் சொன்னால் 'சஸ்பென்ஸ்' உடைந்து விடும் என்பதால் இதற்கு மேல் கதையைச் சொல்லப் போவதில்லை.

ஆனால்... ஒரே ஒரு சிறப்புத் தகவலை மட்டும் இங்கே சொல்லியாக வேண்டும்:

இந்த நாவலை எழுதியவர் உங்களுக்குப் பிரியமான இந்த கோகுலம் இதழின் கௌரவ ஆசிரியர் ரேவதி. இந்த நூலுக்கு மத்திய அரசினரின் NCERT விருது வழங்கப்பட்டுள்ளது என்பது கோகுலம் வாசகர்கள் அத்தனை பேருக்குமே பெருமையல்லவா!

பழனியப்பா பிரதர்ஸ் அழகாக வெளியிட்டுள்ள 'ராம்–ரெசாக்' புத்தகத்திற்கு ஓவியர் வினு அற்புதமாகப் படங்கள் வரைந்து கொடுத்திருக்கிறார். 86 பக்கங்கள் கொண்ட இதன் விலை : ரூ. 13.50. (பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14).

படித்து மகிழவும் பரிசாகக் கொடுக்கவும் முற்றிலும் ஏற்ற புத்தகம் இது!

— அலமு



நீங்களே செய்யுங்க!

அப்பாவும், அம்மாவும் அவசரமாய் வெளியூர் போக வேண்டியிருந்தது. நம்பிக்கையான வேலையாள் ராமய்யாகிட்ட பொறுப்பை ஒப்படைச்சிட்டுப் போனாங்க...!

ராமய்யா ரொம்ப நல்லவரு. நாலாவது படிக்கும் ராமு, மூன்றாவது படிக்கும் வித்யா மீது அவருக்கு உயிர்.


ஆனால், சமையல் வேலை செய்யும் வாக ரொம்பக் கெட்டவன். என்னிக்காவது வாய்ப்பு அமைஞ்சா முதலாளி வீட்லே திருடிட்டு போகலாமான்னு காத்திருந்தான். முதலாளி, முதலாளிம்மா வெளியூர் போனது அவனுக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஒரு யோசனை பண்ணினான் தன் விருப்பத்தை நிறைவேற்ற. அதன்படி சமையல் செஞ்சான்.

"ராமய்யா, குழந்தைகளுக்கும் உனக்கும் இரவு சாப்பாடு செஞ்சிட்டேன். வந்து சாப்பிடுங்"கன்னு நயவஞ்சகமா அழைத்தான்.

சாப்பாடு மேஜையிலே ராமு, வித்யா இருவரையும் உட்கார வைத்துவிட்டு தானும் உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார் ராமய்யா.

"ஐயையோ அங்கிள்! சாப்பிட ஆரம்பிக்கும் போது கடவுள்கிட்டே பிரார்த்தனை செஞ்சிட்டுத்தான் சாப்பிடணும்" என்று ராமு சொன்னான்.

"நான் சாப்பிட ஆரம்பிச்சுட்டேன். நீங்க எனக்காகவும் சேர்த்து பிரார்த்தனை செய்யுங்க" - சொல்லிவிட்டு சாப்பிடத் தொடங்கினார் ராமய்யா.



ராமு, வித்யா பிரார்த்தனை முடிந்து கண் திறந்து பார்த்த போது ராமய்யா சாப்பாடு மேசை மேலே மயங்கிக் கிடந்தாரு. ராமுவும், வித்யாவும் சத்தம் போட பக்கத்து வீட்டுக்காரங்க வந்து பார்த்து, சாப்பாட்டிலே 'மயக்க மருந்து' கலந்திருப்பதைக் கண்டு பிடிச்சி சமையல்காரன் வாகவை போலீஸ்லே பிடிச்சி கொடுத்தாங்க. ராமய்யா மயக்கம் தெளிந்ததும் ராமு, வித்யாவை அணைத்துக் கொண்டார். பிரார்த்தனையின் பலனை உணர்ந்தார்.

- 'தேவி' கணேஷ்

5 ஜெய்பூர் கிளம்பினர்

புவனாவின் விஷயத்தில் தாங்கள் இதுவரை எவற்றையெல்லாம் கவனித்துள்ளோம் என்பதை ரவி ஒரு குறிப்பு எடுத்துக் கொண்டார். இதுகூட டாக்டரின் ஆலோசனைப் படிதான்.

1. அந்தப் பழைய காசெட்டில் உள்ள அரண்மனை ராஜஸ்தானில் உள்ள ராம்தம்பூரைச் சேர்ந்தது. அதன் சின்னம்தான் அன்னப் பறவை.

2. அந்த அரண்மனையில் உள்ள அழகான மாடிப் படிக்கட்டுக்கும், ஏன் அந்த அரண்மனைக்கும் புவனாவுக்கும் கூட தொடர்பு இருக்கிறது. அதனால்தான், அரண்மனையை ஏற்கனவே பார்த்த; பழகிய ஒன்றாக அவள் எண்ணுகிறாள். குறிப்பாக மாடிப்படிக் கட்டின் கடைசிப் படிக்கும் அவளுக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது.

3. புவனாவுக்கு அந்த அரண்மனையை பற்றி ஏற்பட்டுள்ள நினைப்பு, முன்பிறவி நினைவு அல்ல. இதை டாக்டரும் உறுதிப் படுத்துகிறார்.

4. புவனாவுக்கும் அந்த அரண்மனைக்கும், அந்த காசெட்டுக்கும் உள்ள தொடர்பை, அவர்களைவிட நன்கு அறிந்தவர்கள் யாரோ இருக்கிறார்கள். அவர்கள் புவனாவையும் தங்களையும் கண்காணிக்கிறார்கள். அதன் விளைவாகவே, காசெட்டை அவர்கள் கைப்பற்றிக் கொண்டு போய் விட்டார்கள். இதனால், மேற்கொண்டு புவனாவும், அவளைச் சேர்ந்த தாங்களும் இந்த விஷயத்தை மறந்து விட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்



புவனா தேடிய புதையல்

மதிஒளி



கள்.

5. ராம்தம்பூருக்கு புவனாவை அழைத்துக் கொண்டு போனால் மேலும் பல குழப்பங்கள் தெளிவாகவும் ஆகலாம்; புதிய குழப்பங்கள் ஏற்படவும் ஏற்படலாம்.

6. புவனாவுக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தை, நன்கு புரிந்து கொண்டால்தான் அவள் இப்படி மயக்கமடைந்ததற்கு சரியான சிகிச்சை அளிக்கலாம்.

7. இந்த விஷயங்களை புவனாவின் அப்பா, அம்மாவோடு பேசி, அவர்களுக்கும் விளங்க வைக்கலாமா? அது நல்லதா இல்லையா?

ரவி எழுதிய குறிப்பை டாக்டர் கையில் வைத்துக் கொண்டு கவனமாகப் படித்தார். அவர் என்ன கூறப்போகிறார் என்பதைக் கேட்க ஆவலாக இருந்தார் ரவி.

"மிகவும் தெளிவாக இதுவரை நிகழ்ந்ததையும், நமது ஊகங்களையும் எழுதிவிட்டாய் ரவி. பாராட்டுகள். இதை நாம் இப்படியே கூட விட்டுவிடலாம். நமக்கு எந்த பாதிப்பும் இல்லை. ஆனால்,, புவனாவைப் பொறுத்தவரை, அவளுக்கு, நாம் இப்படி நாம் நிறுத்திக் கொள்வது நியாயம் செய்வதாக ஆகாது. ரமாவும், ஈஸ்வரும் திருப்பதியைக் கூடத் தாண்டி வடக்கே போகாதவர்கள். அப்படியிருக்க, இந்த அரண்மனையை புவனா எப்படி முன்பே பார்த்திருக்கக் கூடும்? இந்தப் புதிரை விடுவிக்கவாவது, இதில் மேலும் முயற்சி செய்ய வேண்டும்," என்றார் டாக்டர்.

"அப்படியானால் அக்காவுக்கும் அத்தானுக்கும் இதையெல்லாம் தெரிவிக்க வேண்டியது அவசியம் இல்லையா டாக்டர்?" என்று கேட்டார் ரவி.

"கண்டிப்பாக. ஆனால், ஈஸ்வர் இதய நோயாளி. எந்த ஒரு பரபரப்பான, கவலைக்குரிய செய்தியையும் அவருக்குத் தெரியாமல் இருப்பதே நல்லது. ரமா, புவனாவின் விஷயத்தில் படு கோழை. புவனாவுக்கு ஏதாவது தலைவலி என்றால் கூட அவளால் தாங்க முடியாது. உள்ளம் உடைந்து விடுவாள். அதனால் இதெல்லாம் அவர்கள் காதுவரை எட்டாமல் பார்த்துக் கொள்வது அவசியம்."

"அவர்களுக்கு இதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை டாக்டர். புவனாவின் தாய்மாமா நான்



இருக்கிறேன். குடும்ப டாக்டர் நீங்கள் இருக்கிறீர்கள். அக்காளையும், அத்தானையும் தவிர, நம்மைவிட புவனாவின் விஷயத்தில் அக்கரை கொண்டவர்கள், வேறு யார் இருக்க முடியும்?" என்று டாக்டரின் முடிவை ஆமோதித்தார் ரவி.

"என்ன காரணத்தைக் கூறி புவனாவை மட்டும் ராம்தம்பூருக்கு அழைத்துக் கொண்டு போவது?" என்று ரவி தொடர்ந்து கேட்டார்.

"எனக்கும் வருவது பிரச்சனையாகத் தான் இருக்கும். நான் வருவதானால் கூட செப்டெம்பர் மாதக் கடைசியில் தான் என்னால் வர முடியும். இந்த மாதிரி நான் வெளியூர் போகும் போது, என்னுடைய வாடிக்கை நோயாளிகளைக் கவனித்துக் கொள்ள வரும் என் டாக்டர் நண்பருக்கும் அப்பொழுதுதான் வர இயலும்."

"அப்போ நான் மட்டுமாவது ஒருமுறை தனியாக ராம்தம்பூருக்குச் சென்று வரட்டுமா?" என்று கேட்டார் ரவி.

"அவசரப்படாதே ரவி. ஒருவாரம் பொறுத்திருப்போம். வேற ஏதாவது யோசனை தோன்றினாலும் தோன்றலாம். இல்லை, நமக்கே எதேச்சையாக ஒரு வாய்ப்புக் கிடைக்கலாம். உன்னைத் தனியாக அனுப்ப எனக்கு விருப்பம் இல்லை" என்றார் டாக்டர் உறுதியாக.

ரவி, விடை பெற்றுக் கிளம்ப எழுந்தார். டாக்டரின் ஒரே பெண் தீபா, பள்ளி முடிந்து ஓடிவந்தாள்.

"அப்பா, எனக்கு புது கலர் பாக்ஸ்

வேணும். பள்ளிக் கூடத்துல ஓவியப் போட்டி வைக்கப் போறாங்க. நான் கலந்துக்கப் பெயர் கொடுத்திருக்கேன்" என்று வரும் போதே கத்திக் கொண்டு வந்தாள்.

ரவி அங்கு இருப்பதைப் பார்த்ததும் தீபாவின் குரல் அடங்கியது. தீபாவும் புவனாவின் வகுப்புதான். ரவி புவனாவின் மாமா என்பதும் அவளுக்குத் தெரியும்.

"மாமா, புவனாகூட போட்டிக்குப் பெயர் கொடுத்திருக்கா. நாங்க ரெண்டு பேரும் பெயர் கொடுத்ததும், மத்தவங்களெல்லாம், என்ன சொன்னாங்க தெரியுமா? தீபாவும் புவனாவும் கலந்துக்கறப்போ நாம எதுக்கு வீணாக் கலந்துக்கிறதுன்னு தயங்கினாங்க" என்றாள் தீபா.



"இது பெருமைதானேம்மா?" என்றார் ரவி.

"சரி, என்ன பரிசு தரப்போறாங்க?"

"இரண்டு பரிசு தரப் போறாங்களாம். இரண்டும் வெள்ளிப் பதக்கம். அதோட முதல் இரண்டு பரிசு பெறுபவர்களை அவர்கள் செலவில் ஜெய்ப்பூருக்குக் கூட்டிக்கிட்டுப் போகப் போறாங்கலாம்" என்றாள் தீபா.

டாக்டரும் ரவியும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிரித்தனர்.

"முதல் இரண்டு பரிசைத் தவிர, ஐம்பது மூன்றாவது பரிசு தராங்களாம்பா. அத்தனை பேருக்கும் கண்ணபிரான் உருவம் பதித்த சின்ன டாலர் உண்டாம். ராஜஸ்தான் சங்கத்தினர் ஆதரவில் நடத்தப்படும் போட்டியாம் இது" என்று மேலும் விவரம் கூறினாள் தீபா.

தீபாவை அனுப்பிவிட்டு கிளினிக்குக் கிளம்பிய டாக்டர், "ரவி, எனக்கென்னவோ இந்தப் போட்டியில் புவனாவும் தீபாவும் கண்டிப்பாகப் பரிசு பெறுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதைச் சாக்கிட்டே இவர்களுக்கு துணையாக நாமும் கிளம்பலாம். அங்கே போய், அப்படியே ராம்தம்பூருக்குப் போய்விட்டு வரலாம்" என்றார்.

"புவனாவை அழைத்துக் கொண்டு தாங்களே சென்று வருவதாக அக்காவும் அத்தானும் கிளம்பி விட்டால்?"

"இன்னும் ஒரு மாத காலம் இருக்கே ரவி? அந்த சமயத்தில் ஏதாவது ஒரு வழி தோன்றாமலா போகும்?"

டாக்டரின் நம்பிக்கை வீண் போகவில்லை. ஓவியப் போட்டியில் புவனாவும், தீபாவும் வரைந்த ஓவியங்கள் முதல் இரண்டாவது பரிசுகளைப் பெற்றன. ஜெய்ப்பூரில் நடைபெற உள்ள சித்திரமேளாவிற்குச் சென்றுவர இருவருக்கும் ஆகும் செலவை ஏற்பதாகத் தகவல் வந்தது. பரிசளிப்பும் சித்திர மேளாவில்தான்.

"நான் இதுவரை ஜெய்பூருக்குப் போனதே இல்லை. அதனால் நானும் ரமாவுமே புவனாவைக் கூட்டிக் கொண்டு ஜெய்பூருக்குப் போவதாக இருக்கிறோம்" என்றார் ஈஸ்வர் ரவியிடம்.

"ஆமாம், நம் கூடவே டாக்டரும் தன் மனைவியுடன் தீபாவை அழைத்துக் கொண்டு வரப்போகிறார். இதை விடவா வேறு நல்ல துணை கிடைக்கப் போகிறது?" என்றாள் புவனாவின் அம்மா ரமா.

மனதுக்குள் எழுந்த குழப்பத்தை மறைத்துக் கொண்டு, "வீட்டைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவர்களை உற்சாகப்படுத்தினார் ரவி.

அன்று மாலையே டாக்டரைச் சந்தித்து, ரவி விஷயத்தைக் கூறினார்.

"கலவரப் படாதே ரவி. அப்படியே உங்க அக்காவும் அத்தானும் ஜெய்பூருக்கு வந்தால் கூட, ராம்தம்பூருக்கு அவர்களை

வரவிடாமல் ஏதாவது சாக்குச் சொல்லித் தடுத்து விடுகிறேன? நீ மட்டும் நேராக ராம் தம்பூருக்கே வந்து விடு. நம் திட்டத்தில் எந்த விதமான மாறுதலும் இல்லை" என்று உற்சாகப் படுத்தினார் டாக்டர்.

எல்லாமே திட்டமிட்ட படி நடந்து விடுமா என்ன? அடுத்த வாரம் ஈஸ்வர் மாடிப்படியில் தடுக்கிவிழ, இடுப்பில் பலத்த சுளுக்குப் பிடித்துக் கொண்டது. ஆபத்து ஏதும் இல்லை என்றாலும், இருவாரங் களாவது காலுக்கு ஓய்வு தர வேண்டும் என்று டாக் டர் கூறிவிட்டார். அத னால் அவருக்கு உதவியாக ரமாவும் இருக்கும்படி ஆயிற்று.

"ரவி, புவனாவுடன் கூட நீயும் போய் விட்டுவா. என்னதான் டாக்டரும் அவர் மனைவியும் அவளை நன்கு கவனித்துக் கொள் வார்கள் என்றாலும், நீயும் கூடவே இருப்பது அவ ளுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும்" என்று புவனா வின் பெற்றோர் ரவியைக் கட்டாயப் படுத்திக் கிளம்ப வைத்தனர். ரவி ஏற்கனவே கிளம்பத் தயா ராக இருந்த உண்மை அவர்களுக்கு எப்படித் தெரியும்?

புதிய அதிர்ச்சிகளுக்கு இலக்காகப் போகிறோம் என்ற உண்மையை அறி யாத ஐவரும் உற்சாகமாகப் பயணத்தைத் துவக்கினர். தாங்கள் கிளம்பிவிட்ட தகவல் ஏற்கெனவே, ராம்தம் பூருக்குப் போய் விட்டதை அவர்கள் அறியவில்லை.

(தொடரும்)



வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டிக் கதை — 3

தம்பிக்காக

எஸ். ஸ்ரீராமன்



வெயில் தகித்துக் கொண்டிருந்தது. வியர்வை வழிய வேலு என்கிற வேலாயுதம் வெற்றுக் கால்களால் வெயிலில் நிற்க முடியாது ஆலமர நிழலில் ஒதுங்கினான்.

ஆலமரம்!

இது எவ்வளவு உயர் பண்பு உடைய மரம்! பிரதிபலன் பாராது எத்தனையோ பேர்களுக்கு நிழலளிக்கிறதே! தான் வெயிலில் வாடி நின்றாலும் பிறர்க்கு நிழல் அளிக்கிறதே! இப்படிச் சிந்தித்த வேலு சட்டென தன் இலட்சியம் நினைவுக்கு வந்தவனாய் நிழலில் சுகம் காண விரும்பாது வெயிலுக்கு ஓடினான். பஸ் ஸ்டாண்டிற்கு ஓடினால்தானே கூலி வேலை கிடைக்கும்? இலட்சியமும் நிறைவேறும்!

இலட்சியம்! மற்றவர்கள் நோக்கில் அவனது இலட்சியம் ஒன்றும் பெரிதல்ல! ஆனால், அவனைப் பொறுத்தவரையில் அது ஒரு வாக்குறுதியின் நிறைவேற்றம்! தவம்!

வேலாயுதத்திற்குப் பதினைந்து வயதுதான் ஆகிறது. ஏழையான அவனுக்கு ஒரு தம்பி வேறு உண்டு.

இன்னும் இதோ இப்போதும் வேலாயுதத்திற்கு அந்த நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. குளத்தங்கரை ஓட்டைக் குடிசை ஒன்றில் அம்மா படுத்திருக்கிறாள். பக்கத்தில் பல கண்ணாடிக் குப்பிகள். அம்மாவுக்கு இருமல் வியாதி. முனிசிபல் ஆஸ்பத்திரியில் காட்டி மருந்து வாங்கிக் கொடுத்தும் அம்மாவின் வியாதி குறையவில்லை. மாறாக முற்றிப் போய் இப்போது மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறாள்.

"வேலு.. உனக்கு நான் எம்மாங் கஷ்டமெல்லாம் தந்துட்டேண்டா...! அப்பனில்லாத இந்தக் குடும்பத்திலே என்னாலே உனக்குப் படிப்பைக் கொடுக்க முடியலே. ஆனா, பிஞ்சு உடம்பை சுமைதூக்க வச்சுட்டேனே! இந்த வியாதிக்காரியாலே வேற என்னடா முடியும்?" - திணறித் திணறி அம்மா அழுதாள்.

"இப்ப ஏம்மா அந்தக் கவலை? பேசாதம்மா. மூச்சிரைக்குதில்லே? இந்த வேலை எனக்குப் பழகிடுச்சி அம்மா. சுமை கிடைக்காத நாள்லே, தலை நம நமங்குது தெரியுமா?" - அம்மாவுக்கு தைரியம் கூறினான் வேலு.

"என் தங்கம்டா நீ. என் பேச்சையெல்லாம் தட்டாம எவ்வளவு காரியங்கள் செய்திருக்கே! உன் தம்பியைப் பள்ளிக்கூடத்திலே சேர்த்து இப்ப எட்டாவது

வரையில படிக்க வச்சிருக்கியே! உன் தியாகத்தை நான் எப்படிப்பா பாராட்டுவேன்? என் ராசா. அவனை நீ எப்படியாவது நல்ல நிலைமைக்கு கொண்ணாந்துடு. அப்புறம் அவன் பாட்டை அவன் பாத்துக்குவான்" - அம்மா நெஞ்சடைக்கப் புலம்பினாள்.

"கவலைப்படாதேம்மா. நான் படிக்கலேன்னாலும், தம்பியை நிச்சயமாப் படிக்க வைக்கறேன்"

அன்றிரவே அம்மா போய் விட்டாள்.

இந்த ஒரு வருடத்தில் தம்பி பாலு பாஸாகி இப்போது ஒன்பதாவது படிக்கிறான். நினைவோட்டம் அறுக பெரியவர் ஒருவர் கூப்பிட்டார். "ஏய், தம்பி இந்தப் பெட்டியையும், பையையும் எடுத்தாரியா?" என்றார்.

"வரேங்க" என்ற வேலு பெரியவரிடமிருந்து சுமையைக் கைமாற்ற நெருங்கினான்.

"எம்மாம் வேணும்? நீ பாட்டுக்கு அங்கே வந்து தகராறு பண்ணப்படாது. மேலத் தெரு வரைக்கும் வரணும்" - கண்டிப்பாகப் பேசினார் பெரியவர்.

வேலு யாரிடமும் தகராறு செய்தவனில்லை. பெரியவர் தெரியாது பேசுகிறார். அதற்காக அவன் வருந்தவில்லை.

"ஐயா, எம்மாம் கொடுப்பீங்களோ, அதக் கொடுங்க" என்றான் பெருந்தன்மையாக. பையையும், பெட்டியையும் வாங்கக் கைகளை நீட்டினான். பெரியவர் அப்பொழுதும் கொடுக்காமலே மறுபடியும் பேசினார். "அஞ்சு ரூவாத்தான் தருவேன். அதுக்கு மேலே கேட்டுத் தகராறு கிகராறு பண்ணக் கூடாது" என்றார் மறுபடியும் கறாராக.

அஞ்சு ரூபாய்!

வேலுவுக்கு நிலைமையறிந்து கடவுள் கொடுக்கும் வரமாக அது பட்டது. அவனது இலட்சியம் நிறைவேற அப்போதைக்கு அந்த அஞ்சு ரூபாய்தான் தேவை. தன்னிடம் உள்ள 55 ரூபாயோடு கைக்கு வராத அந்த அஞ்சு ரூபாயையும் விரல் விட்டு எண்ணிப் பார்த்தான். அறுபது! ஆகா! அந்த அறுபது ரூபாய்! அதுதானே இப்போதைக்கு அவனுடைய தேவை.

"ஐயா, போதுங்க. அதையே கொடுங்க" - சுமையைத் தூக்கிக் கொண்டு வேலு சந்தோஷ நடைபோட்டான். பெரியவர் ஐந்து ரூபாயில் பேரத்தை முடித்த மகிழ்ச்சியோடு பின்தொடர்ந்தார். மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு ஐந்து ரூபாய்க்கு எவன் வருவான் என்பது அவர் கணக்கு.


சுமை தலையை அழுத்தி, பெட்டியின் கைப்பிடி கையை வெட்டி வேதனைப் படுத்தினாலும் வேலு கொஞ்சம் கூட வருத்தம் பாராது விடுவிடுவென நடந்தான். அவன் தவம் இன்று நிறைவேறி விடும். அது போதும் அவனுக்கு.

அவன் மனம் சென்ற வாரம் தம்பி பாலுவோடு பேசியதை நினைவுகூர்ந்தது.

"அண்ணே... அண்ணே" என்று ஓடி வந்தான் பாலு, பள்ளி முடிந்ததும்.

"தம்பி, சோறு வச்சுருக்கேன். சாப்பிடு. நான் சுமை தூக்க ஓடணும். சீக்கிரம் சாப்பிட்டுட்டு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பு" என்றான் வேலு.

"அண்ணே இதோ சாப்பிடறேன்..." என்று நின்று தயங்கினான் பாலு. கை கால்களைக் கழுவிக் கொண்டு, "அண்ணே" என்று இழுத்துப் பேசினான்.



"வெடிக்க முடியாத வெடி எது தெரியுமா?"

"தெரியாது."

"பித்த வெடிதான்."

- எஸ். தட்சணாமூர்த்தி



"என்னடா தம்பி...! என்ன வேணும்? புத்தகம் நோட்டு எதுனாச்சியும்...?"

"இல்லேண்ணே, எல்லாம்தான் வாங்கிக் கொடுத்துட்டியே? அண்ணே, வெயில்ல நடக்கவே முடியலேண்ணே. செருப்பு வாங்கிக் கொடுத்தேன்னா..." - உள்ளங்கால்களைத் தூக்கிக் காண்பித்தான் தம்பி. நீரால் அலம்பப் பெற்ற உள்ளங்கால்கள் செக்கச் சிவந்திருந்தன.

வேலுவுக்கு 'சுருக்'கென்றது. படிக்காத இந்த மரமண்டைக்கு இதுவரை தெரியவில்லையே! எனக்குச் செருப்பும் வேண்டாம் மண்ணும் வேண்டாம். சுமை தூக்கிற கழுதைக்கு செருப்பு ஒரு கேடா? ஆனா, தம்பி படிக்கற பிள்ள, செருப்பில்லாம நடக்கறதா?

"தம்பி, இந்த நெனப்பே இல்லாத முட்டாப் பயடா நான். எப்படியாவது நாலு நாள்லே வாங்கிக் கொடுத்துடறேன். எட்டாம் நம்பர் செருப்புத்தானே கவலைப்படாதே" என்று அன்பொழுகப் பேசி தம்பி முதுகில் தட்டியும் கொடுத்தான்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு வேலு தன் தம்பியோடயே வந்தான். வெயிலில் அவனது கால்கள் பூமியில் பரவாமல் தவிப்பது புரிந்தது. சற்று தூரத்துக்கொரு முறை நிழலை அவனது கண்கள் தேடுவதைக் கண்டுணர்ந்த வேலு, கண்கலங்கினான். பாவம், எத்தனை வருடங்களாகத் தம்பி இப்படித் தவிக்கிறானோ? இதை கவனிக்காமல் தான் இப்படி மூளை கெட்டதனமாக நடந்து கொண்டிருக்கிறோமே என்று தன்னையே நொந்து கொண்டான் வேலு.

பள்ளி நெருங்கி விடவே, "தம்பியை அனுப்பி விட்டுத் தன் வேலைக்கு முதலாளியைத் தேடலானான் வேலு. எதிர்த் திசையில் தென்பட்ட செருப்புக் கடையில் ஒரு ஜோடி செருப்பைத் தேடி எடுத்து அது எட்டாம் நம்பர்தானே என்று சரிபார்த்துக் கொண்டான். கடை முதலாளியிடம், "இந்த செருப்பு என்ன விலைங்க?" என்றான்.

முதலாளி வேலுவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டு செருப்புகளை கையில் வாங்கிக் கொண்டு, "எழுபது



ரூவா" என்றார்.

"கொஞ்சம் குறைச்சுச் சொல்லுங்க" என்று கெஞ்சினான் வேலு.

"சரி. ஒரே விலை அறுபது ரூவா. எடு பணத்தை" என்றார் முதலாளி.

"நாளைக்கு வரேங்க. கையிலே கொஞ்சம் பணம் குறையுது" என்று வேலு தயங்கித் தயங்கி சொல்லிய போது, "இதுக்குத்தான் பிரமாதமா பேரம் பேசினியோ! போ போ! பணத்தை எடுத்துட்டு அப்புறம் வா" என்று வெறுப்பாக சொன்னார் முதலாளி.

ஐந்து ரூபாய்க்கு ஒப்புக் கொண்டு சுமை தூக்கிக் கொண்டு வந்த வேலு மேலத் தெருவில் பெரியவர் நின்ற வீட்டில் சுமையை வைக்க முனைந்தான்.

"உள்ளார வெய்யி" என்று பெரியவர் சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தார். ஐந்து ரூபாயை வேலுவிடம் நீட்டினார்.

இந்த ஐந்து ரூபாய் வேலுவுக்குக் கடவுள் காலமறிந்து கொடுத்த பரிசாகப் பட்டது. மடியில் இருந்த ரூபாயோடு இதையும் சேர்த்து எண்ணினான். அறுபது ரூபாய்!

பணத்தைக் கொடுத்து விட்டு செருப்புப் பெட்டியுடன் தம்பியைச் சந்திக்க பள்ளிக்கு விரைந்தான் வேலு. கடைவீதியின் திருப்பத்திலேயே பாலுவின் பள்ளி நண்பர்கள் பலர் எதிரே வந்து கொண்டிருப்பதைக் கவனித்தான். இதற்குள்ளாகவா இடைவேளை விட்டு விட்டார்கள்? பாலுவும் அந்தக் கூட்டத்தில் இருந்தான்.

"தம்பி!" என்று மகிழ்ச்சியுடன் அழைத்தான் வேலு. பாலு அருகே வந்தான்.

"அண்ணே! என் காலைப் பார்!"

தம்பியின் கால்களில் புத்தம் புது செருப்புகள்! வேலுவின் கண்கள் வியப்பாலும், மகிழ்ச்சியாலும் விரிந்தன.

"அண்ணா என் பள்ளி நண்பன் ஒருவனுக்குப் பிறந்த நாள். பெரிய பணக்காரன். தன்னுடைய பிறந்த நாளன்று தான் அளிக்கும் பரிசாக இருக்கட்டும் என்று



அவன்தான் இந்தப் புத்தம் புது செருப்பு களைத் தந்தான். அவனுக்குப் பிறந்த நாள் பரிசாக வந்ததாம் இது. தன்னிடம் ஏற் கெனவே செருப்பு இருக்கிறது என்று எனக்குக் கொடுத்தான்.''

வேலுவின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை.

"தம்பி, உங்க அண்ணன் ஒரு கூலிக் காரன்தான். ஆனாலும் இனாமாக எதை யும் யாரிடமும் பெற்றுக் கொள்ளாத தன்மானம் கொண்டவன்."

"அண்ணே, அந்த நண்பன் கணக்கில் வீக். பள்ளி இடைவேளையில் நான்தான் அவனுக்கு ஆறு மாதமா கணக்கு சொல் லித் தரேன். இப்போ அரையாண்டுத் தேர்வில் அவன் நூற்றுக்கு நூறு. டியூஷ னுக்கு என்று அவன் பணம் தந்த போது மறுத்து விட்டேன். இப்போ இதைத் தந்த போது, இதையும் நான் மறுத்தால் அவனு டைய அன்பை உதாசீனப்படுத்தியதா காதா?"

தம்பியின் நியாயத்தை ஏற்றுக் கொண் டதற்கு அடையாளமாக வேலு சிரித்தான்.

''அண்ணா, நீங்க வாங்கியிருக்கும் செருப்பை உங்க காலுக்கு ஏற்றபடி மாற் றிக் கொடுக்கும்படி கேட்டுப் பார்க்க லாமே?''

"கூலி வேலை செய்கிறவனுக்கு எதுக்கு தம்பி செருப்பு?" என்று வேலு மறுத்துப் பார்த்தான். பாலு கேட்பதாக இல்லை. இருவரும் கடைக்குப் போனார்கள்.

கடை முதலாளியிடம் விஷயத்தைக் கூறிய வேலு, "நீங்க தந்த பெட்டியை இன் னும் பிரிக்கக் கூட இல்லை. அப்படியே இருக்கு இதை எடுத்துக்கிட்டு எனக்கேத்த அளவில் மாற்றிக் கொடுங்க'' என்று கேட்டான் பணிவுடன்.

"ஒரு தடவை வாங்கிட்டா, திருப்பறது மாத்தறது எதுவுமே கிடையாது" என்று உறுதியாக மறுத்து விட்டார் கடைக்காரர்.

அடுத்த நாள் காலை. பாலு பள்ளிக் குக் கிளம்பிக் கொண்டிருந்தான். வேலு, தன் கூலி வேலைக்குக் கிளம்பிக் கொண் டிருந்தான். யாரோ அழைப்பது கேட்டு வேலு குடிசைக்கு வெளியே வந்து பார்த் தான். செருப்புக் கடை முதலாளிதான் நின்றிருந்தார்.

"தம்பி, அந்த செருப்பை என்ன பண் ணினே?"

''அப்படியே தூக்கிப் போட்டிருக் கேன்'' என்று பெட்டியைக் கொண்டு வந்தான் வேலு.

"தம்பி, ஒரு தவறு நடந்து விட்டது. நீ வாங்கின அறுபது ரூபாய் செருப்புக்குத் தவறுதலாக முன்னூறு ரூபாய் விலை உயர்ந்த செருப்பைத் தந்து விட்டாங்க. நேற்று இரவுதான் கண்டுபிடித்தேன். நீ மாற்றிக் கேட்டு வந்த போது கூட தர மாட்டேன் என்று விரட்டி விட்டேன்."

"ஐயா, நானும் பெட்டியைப் பிரிக்க லீங்க. பிரிச்சுப் பார்த்திருந்தால் நானே கண்டுபிடிச்சுக் கொண்டு வந்திருப்பேன். எனக்கு எதுக்குங்க மத்தவங்க பொருள்?"

"தம்பி, நீ வந்து உன் அளவுக்கு நல்ல செருப்பாக எடுத்துக் கொள்," என்ற முத லாளி, "உனக்கு சம்மதமானால் சொல். என் கடையிலேயே உனக்கு வேலை போட்டுத் தரேன்'' என்றார்.

தம்பிக்காக அம்மாவிடம் கொடுத்த வாக்குறுதி நிறைவேறி விட்டதாகவே பாலு எண்ணி மகிழ்ந்தான்.

நாமும் அவனை!

அரசர் நகர்வலம் வந்து கொண்டிருந்தார். இரவு நேரம். சற்றுத் தொலைவில் மெய்க்காப்பாளர்களும் பின் தொடர்ந்தனர்.

எங்கிருந்தோ ஒரு நாய் ஓடிவந்து அரசரைக் குதறிவிட்டது. அலறல் சத்தம் கேட்டு மெய்க்காப்பாளர்கள் விரைந்தனர். நாயை விரட்டினர்.

இதற்குள் நாயை வளர்த்த குடியானவனும் ஓடி வந்து நாயைக் கட்டிப் போட்டான். மாறு வேடத்தில் இருப்பவர் அரசரே என அறிந்ததும் பயந்து நடுங்கினான்.


மெய்க்காவலர், கட்டி வைத்துள்ள நாயைக் கொல்லச் சென்றனர். அரசர் அவர்களைத் தடுத்தார். "நீங்கள் அதைக் கொல்ல வேண்டாம். குடியானவனே நாயைக் கொல்லட்டும். அவன் எப்படிக் கொன்று போடுவானோ அவ்விதமே நாமும் அவனைக் கொல்ல வேண்டும்" என உத்தரவிட்டார்.

குடியானவனைச் சிறையில் அடைத்தார்கள். "நாய் செய்த குற்றத்திற்கு நாம் சாக வேண்டுமாம். யார் நியாயம் சொல்லி நம்மைக் காப்பாற்றுவார்கள்?" என்று குடியானவன் கவலைப்பட்டான். அன்றிரவு அவன் தூங்கவேயில்லை. யோசனைமேல் யோசனை செய்தான். கடைசியில் ஒரு வழி தோன்றியது.

மறுநாள் காலை. ஊர் மக்கள் சிலர் முன்னிலையில் நாயை அந்தக் குடியானவன் கொன்றுவிட்டான். அதே வேகத்தில் அரண்மனைக்குச் சென்றான்.

காவலர் வழியாக அரசருக்குச் செய்தி போனது, விசாரணை ஆரம்பமானது.

"நாயைக் கொன்றுவிட்டாயா?"



"ஆம்! அரசே!"

"எப்படிக் கொன்றாய்?" –அரசருடைய குரலில் உஷ்ணம் ஏறியது.

"மகாராஜாவே! நாயின் வாலை கெட்டியாகப் பிடித்து இழுத்து ஆற்றில் போட்டு விட்டேன். மக்களே இதற்கு சாட்சி" என்றான்.

அரசருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவனுக்கு வால் இல்லையே! எப்படித் தண்டிப்பது? மௌனச் சிலையாக நின்ற அரசருக்கு பெரிய கும்பிடு போட்டுவிட்டு புத்திசாலிக் குடியானவன் வந்து விட்டான்.

எஸ். குழந்தைசாமி

சின்னப் பையன்! பெரிய ஓவியன்!



புதுவை மாநிலத்தின் தலைநகர் பாண்டிச்சேரி. நகரத்தின் நெருக்கடி, சத்தத்தில் இருந்து விலகியிருக்கும் குடியிருப்பு அசோக் நகர். யாரிடம் கேட்டாலும் "உமர் வீடுதானே?" என்று உடனே வழிகாட்டுகிறார்கள். நாங்கள் சென்றபோது, இயற்கை எழில் கொஞ்சிய அந்தச் சிறிய வீட்டில் இருந்து மனத்தை ஈர்க்கும் ஹார்மோனியத்தின் இசை கேட்டது. அருகே சென்ற பிறகுதான் அது கம்ப்யூட்டர் கீபோர்ட்டு அமைக்கப்பட்ட கேசியோ இசைக் கருவி என்பது தெரிந்தது. வாசித்துக் கொண்டிருந்த வாண்டுப் பையன், ஷாஜகான், நாங்கள் தேடிக் கொண்டு சென்ற உமரின் தம்பி. அவனே ஓடிப் போய், விளையாடிக் கொண்டிருந்த தன் அண்ணன் உமரை அழைத்து வந்தான்.

உமர் யாரென்பதை உங்களுக்குக் கூறவில்லையே? உமரின் முழுப்பெயர் உமர் எழிலன். வயது 14. ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஓவியம் வரைகிறான். பல ஓவியக் கண்காட்சிகளில் பங்கு கொண்டு, அகில இந்திய அளவில் பல பரிசுகளைப் பெற்றுள்ள இளம் ஓவியன். இவன் வரைந்த ஓவியம் புதுவை அரசின் காலண்டரில் இடம் பெற்றுள்ளது. அண்மையில் பாண்டிச்சேரி ரோட்டரி கிளப்பின் ஆதரவில் இவன் வரைந்த ஓவியங்களை வைத்து ஓர் ஓவியக் காட்சி நடத்தப்பட்டுள்ளது. கோகுலத்தின் சார்பில் இந்த இளம் ஓவியனைப் பேட்டி காணவே புதுவை சென்றிருந்தோம்.

தான் வாங்கியிருந்த பரிசுகள், சான்றிதழ்களை உமர் எங்களிடம் காட்டினான். விடு கொள்ள முடியாத அளவுக்கு அவை இருந்தன. இவனது ஓவியங்களை வைத்துக் காட்சி நடத்தியுள்ள ரோட்டரிகிளப், இவனது ஓவியத் திறமையைப் பாராட்டிப் பட்டம் வழங்கியுள்ளது.

அகில இந்திய அளவில் பேசப்படும் பெருமை பெற்றுள்ளவன் என்ற தற்பெருமை எதுவும் இல்லாது மிக சாதாரணமாகப் பழகினான் உமர். நாங்கள் கேட்ட கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளித்தான்.

"ஓவியம் வரைவதில் எப்படி ஈடுபாடு ஏற்பட்டது? உன் வயதுச் சிறுவர்கள் எல்லாம், விளையாட்டிலும், திரைப்படம் தொலைக்காட்சியைப் பார்ப்பதிலும் ஆவலாக இருக்கும்போது, உனக்கு மட்டும் வித்தியாசமாக ஓவியத்தில் ஈடுபாடு ஏற்பட்டதற்கு என்ன காரணம்?"

"எங்கப்பா ஒரு தமிழாசிரியர். அவருக்கு ஓவியம் வரைவதில் அளவில்லாத ஈடுபாடு. அந்த ஈடுபாடு அப்படியே என்னையும் பிடித்துக் கொண்டது என்று நினைக்கிறேன்," என்று சிரித்தான் உமர்.

உமர், தன் கையில் வண்ணப் பென்சிலையும், பிரஷ்ஷையும் முதன்முதலாக பிடித்த போது அவனுக்கு வயது ஐந்துதான் என்பதை அறிந்த போது வியப்பாக இருந்தது.

"பரிசு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. நாமும் கலந்து கொண்டோம் என்ற நிறைவு ஏற்படும். இதுவே ஒரு அனுபவம் தான்" என்று அப்பா எல்லா ஓவியப் போட்டிகளிலும் கலந்து கொள்ள வைப்பார். புதுவையிலேயே ரவிவர்மா ஓவியப்பள்ளி என்று ஓர் ஓவியப் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அதில் சேர்ந்து பயிற்சி பெற்றேன். என்னுடைய பெருமைக்கும் சிறப்புக்கும் காரணம் இவர்கள் அளித்த பயிற்சியும், என் அப்பாவின் உற்சாகமும்தான்" என்றான் உமர்.

புதுவையில் உள்ள எல்லா கலை இலக்கிய அமைப்புகளும் உமரின் திறமையைப் பாராட்டிப் பரிசு வழங்கியுள்ளன. இவன் வரைந்த ஓவியம் ஒன்று புதுவை அரசினர் வெளியிட்டுள்ள காலண்டரில் இடம் பெற்று இவனது திறமையை அகில இந்திய அளவுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

"ஒரு ஓவியத்தை வரைய எத்தனை மணி நேரம் பிடிக்கிறது?"

"சுமார் இரண்டு முதல் நான்கு மணி நேரம்."

"ஒரே மூச்சில் முடிப்பாயா? படிப்பு, பள்ளி என்ன ஆவது?"



• ரோட்டரி சங்கப் பரிசு பெற்ற உமரை, சிறுமி ரஞ்சிதா கைகுலுக்கி பாராட்டுகிறாள்.

உமர் சிரித்தான்.

"எனக்கு நேரம் கிடைப்பதே கஷ்டம். அதனால் ஒரு ஓவியத்தை வரைய எடுத்துக் கொண்டால், தினமும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வரைவேன். முடிக்க ஒரு வாரம் கூட ஆகும்."

"இதற்கான கற்பனை உனக்கு எப்படிக் கிடைக்கிறது?"

"என் சொந்தமான கற்பனை தான். சந்தேகம் இருந்தால் அப்பாவிடமோ இல்லை மாஸ்டரிடமோ கேட்டுக் கொண்டு, என்னுடைய கற்பனையையும் கூறுவேன். அவர்கள் கூறும் கருத்து நன்றாக இருந்தால் அதன்படி மாற்றவோ திருத்தவோ செய்வேன்."

"படங்களை எங்கே வைத்துக் கொண்டு வரைவாய்? ஸ்டாண்டு ஏதாவது உண்டா?"

"எந்த ஸ்டாண்டும் கிடையாது. இப்படியே பெஞ்சியில் வைத்துக் கொண்டு வரைவேன். அட்டையில் பின் பண்ணி, சுவரில் சாய்த்தும் வரைவது உண்டு."

உமரின் ஓவியங்களில் அதிக அளவு இயற்கை எழில்களே இடம் பிடித்துள்ளன.

"மத்திய அரசின் பரிசு கிடைத்திருக்கிறதே. அதைப் பற்றிக் கூறேன்?"

"மத்திய அரசினர் தந்துள்ளது, பரிசு இல்லை. உதவித் தொகை. தென் மண்டலத்திற்கு என்று வளரும் இளம் ஓவியன் ஒருவனுக்கு உதவித் தொகை வழங்குகிறார்கள். பல வடிகட்டல்களுக்குப் பிறகு சென்னையில் இறுதிப் போட்டி நடந்தது. இதில் ஐநூறு பேர்களுக்குமேல் கலந்து கொண்டோம். அதில் நான் வரைந்து வைத்த ஓவியத்தையே சிறந்தது என்று தேர்ந்தெடுத்தார்கள். இதன்படி மாதம் இருநூற்றி இருபது ரூபாய் எனக்கு இருபது வயது வரை கிடைக்கும்!

"நீயார் மாதிரி வர ஆசைப்படுகிறாய்?"

"டேவின்சன், ரஹீம் போன்ற உயர்ந்த கலைஞர் வரிசையில் நானும் இடம் பெற வேண்டும் என்பது தான் என் இலட்சியம். மோனலிசா மாதிரி உலகம் முழுதும் வியந்து பேசப்படும் ஓர் ஓவியத்தை வரைய வேண்டும்."

கண்களில் மின்னும் ஒளியையும், உறுதியையும், உழைப்பையும், திட்டமிடலையும் பார்த்தபோது இவன் செய்யக் கூடியவனே

• பாட ரெடி





என்ற எண்ணம் எழுந்தது.

"உன்னால் மறக்க முடியாத நிகழ்ச்சி ஏதாவது ஒன்றைச் சொல்லேன்?"

"மத்திய அரசின் உதவித் தொகையைப் பெற, பலவடிகட்டல்களுக்குப் பிறகு இறுதிப் போட்டி சென்னையில் நடைபெற்றது. போட்டி நாளன்று எனக்கு நல்ல காய்ச்சல். அப்பா அந்த நிலையிலேயே என்னை சென்னைக்குக் கூட்டிக் கொண்டு போனார். காய்ச்சலின் வேகம் முழுநிறைவோடு படம் எழுத அனுமதிக்கவில்லை. ஏதோ போட்டேன். கண்டிப்பாக எனக்குக் கிடைக்காது என்று எண்ணினேன். அப்பா கேட்டபோதுகூட அதைத்தான் கூறினேன். எதிர்பாராதவிதமாக நான் போட்ட ஓவியத்தையே சிறந்ததாகத் தேர்ந்தெடுத்து எனக்கு உதவித்தொகை வழங்கினார்கள்."

புதுவை கல்வி அமைச்சர் கையால் பரிசு பெற்ற உமர் வரைந்த படங்கள் வீடு நிரம்ப இருக்கின்றன. எல்லாமே தனித்தன்மை வாய்ந்தவை; சிறப்பானவை. வானொலியும், தொலைக் காட்சியும் இவனது பேட்டியை ஒலி, ஒளிபரப்புச் செய்துள்ளன. இவன் வரைந்த ஓவியத்தை விலைக்கு வாங்கி புதுவை ஆளுனர் மாளிகையில் மாட்டி வைத்துள்ளனர்.

* ஷாஜகான், உமர், ஜவஹர்அலி அவர்கள் வரைந்த ஓவியங்கள்.



ஓவியத்தைத் தவிர, இசையிலும் உமருக்கு ஈடுபாடு உண்டு. கேசியோ மியூசிக் செட்டை வைத்து இவன் திரை இசைப்பாடல்களையும், கர்நாடக இசையையும் வாசிக்கிறான். பக்க வாத்தியங்களோடு பல இடங்களில் இசைக்கச்சேரி நடத்தி வருகிறான்.

உமரின் தம்பிகளான ஷாஜஹானும், ஜவஹர் அலியும் கூட வளரும் ஓவியர்களே. இவர்களும் பரிசுகள் பல பெற்று, ஓவியக் காட்சி நடத்தியிருக்கிறார்கள். பெற்றோரின் ஆதரவும், விடாமுயற்சியும் கற்பனையும் திட்டமிடலும் நிறைந்த உமர் உலகம் போற்ற கூடிய ஒரு தலைசிறந்த ஓவியனாகக் கண்டிப்பாக வருவான். கோகுலம் வாசகர் சார்பில் இப்போதே வாழ்த்தி வைப் போம்!

அட்டை &
வண்ணப்படங்கள்:
ராஜூ நாராயண்

தேள் கடிக்கு சிகிச்சை என்ன?

● ஆர். காயத்ரி, ஜாபர் கான் பேட்டை.

? எனக்கு தினமும் காலையில் எழுந்ததும் 5 மணியிலிருந்து 7 மணி வரை வறட்டு இருமல் வருகிறது. மதியம், இரவு நேரங்களில் இருமல் வருவதில்லை. இதற்கு என்ன காரணம்? எப்படி குணப்படுத்துவது?

! இதற்கு ஒவ்வாமை (ALLERGY) தான் முக்கிய காரணம். காலை நேரத்தில் வீசுகின்ற சில்லென்ற ஈரக்காற்று ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம்; அல்லது காற்றில் கலந்து வரும் தூசு, பூக்களின் மகரந்தங்கள், பூஞ்சைக் காளான்கள் (FUNGAL SPORES), வாசலில் தெளிக்கப்படும் சாணித் தண்ணீர் ஆகியவற்றாலும் ஒவ்வாமை ஏற்பட்டு இந்தப் பிரச்சனை தோன்றலாம். சில சமயங்களில் குடல் புழுக்கள் இருந்தாலும் இந்தத் தொல்லை ஏற்படக் கூடும். முடிந்த வரை மேற்சொன்ன ஒவ்வாமைப் பொருள்களிலிருந்து ஒதுங்கியிருந்தால் இருமல் குறையும். அத்துடன் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குடல்புழுக்களை ஒழிக்க மாத்திரைகள் சாப்பிட வேண்டும். இவற்றில் குணமாகவில்லை என்றால் மருத்துவரிடம் காண்பித்து எந்தப் பொருளுக்கு ஒவ்வாமை உள்ளது என்பதை ஓர் எளிய தோல் பரிசோதனை மூலம் தெரிந்து கொண்டு அந்தப் பொருளுக்குரிய ஒவ்வாமையை அகற்ற உதவும்' இமுனோ தெரபி' என்ற சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் வறட்டு இருமல் முழுமையாகக் குணமாகும்.

● என். ராஜலட்சுமி, மேலப்பாதி.


? டாக்டர்கள் 'ஸ்டெத்தாஸ் கோப்பை' வைத்துப் பரிசோதிக்கும் போது, மூச்சை இழுத்துவிடச் சொல்கிறார்களே, ஏன்?

! நம் நுரையீரல்களைத் தெளிவாகப் பரிசோதிப்பதற்குத்தான் டாக்டர்கள் மூச்சை இழுத்துவிடச் சொல்கிறார்கள். சாதாரணமாக நாம் மூச்சை உள்ளே இழுக் கும் போதும், வெளியே விடும் போதும் நுரையீரல்களுக்குள் சத்தம் எழும்பும். சில நோய்களின் போது இந்த சத்தத்தில் மாறு தல்கள் உண்டாகும். ஒவ்வொரு நோய்க் கும் ஒருவித சத்தம் கேட்கும். அதை மருத்துவர்கள் அறிவார்கள். அவர்கள் ஸ்டெத்தாஸ் கோப்பை மார்பிலும், முது கிலும் வைத்துக் கேட்பது அந்தச் சத்தங்களைத்தான். சத்தத்தில் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்து நோய்களை நிர்ணயிப்பார்கள். சமயங்களில் நோயின் ஆரம்பக் கட்டத்திலும், முதுமையிலும் இந்த சத்தங்கள் தெளிவாகக் கேட்காது. அதே சமயம் மூச்சை இழுத்து விட்டால் அப்போது கேட்கும். அதற்காகத்தான் அப்படி மூச்சை இழுத்துவிடச் சொல்கிறார்கள், மருத்துவர்கள்.

● பத்ம. சிவாஜி, நீடாமங்கலம்.

? தேள்கடிக்கு உடனடி சிகிச்சை என்ன, டாக்டர்?

! தேள் கொட்டிய இடத்திற்கு சுமார் 15 செ.மீ. மேலே கயிற்றால் அல்லது துணியால் இறுக்கிக் கட்டுப் போட வேண்டும். இதன் மூலம் தேளின் விஷம் உடம்புக்குள் பரவுவதைத் தவிர்த்து விடலாம். பின்பு, தேள் கொட்டிய இடத்தில் அரைமணி



நேரம் ஐஸ்கட்டியால் ஒற்றடம் தரலாம். ஐஸ்கட்டி கிடைக்காவிட்டால் குளிர்ந்த மண்பானைத் தண்ணீரில் தேன் கடித்த பாகத்தை அமுக்கிப் பிடிக்கலாம். இயலா தென்றால், குளிர்ந்த நீரில் நனைத்த துணியால் தேன் கடித்த இடத்தைக் கட்டுப் போடலாம். இதனால் வலி குறை யும். தேனின் கொடுக்கு தோலில் பகுந் திருந்தால் உடனே வெளியில் எடுத்து விட வேண்டும். தேள்கடித்த பாகத்தை உதறக் கூடாது; உயரே தூக்கக் கூடாது; தொங்கப்போட வேண்டும். தேள்கடி யினால் பெரியவர்களுக்கு ஆபத்தில்லை. பத்து வயதுக்குக் கீழுள்ள சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் தேள்கடி மிகுந்த ஆபத் தைத் தரலாம்; உயிர் ஆபத்தும் உண்டு. எனவே முதலுதவியோடு நின்று கொள்ளா மல் உடனடியாக மருத்துவ சிகிச்சையும் செய்து கொள்ள வேண்டும்.

● ***ஆர். சுகன்யா, மங்கைநல்லூர்.***

? யானைவெடி, அணுகுண்டு வெடி போன்ற அதிக சத்தம் தரும் வெடிகளை வெடிப்பது கெடுதலா, டாக்டர்?

! ஆம், கெடுதல்தான், சுகன்யா! அதிக சத்தம் எழுப்பும் வெடிகளை வெடிக்கும் போது காதுக்குள்ளே உள்ள செவிப்பறை கிழிந்து காது இரைச்சல் ஏற்படும்; செவி நரம்பு அதிர்ந்து காது கேளாமைக்கு அஸ்திவாரம் போடும்; வெஷ்டிபுலர் அமைப்பு பாதிக்கப்பட்டு தலைசுற்றல் ஏற் படலாம். ஆகையால், இம்மாதிரியான வெடிகளை வெடிக்கக் கூடாது.

● ***மா. பிரவீன், கெங்கரை.***

?வாயில் ஏன் நாற்றம் அடிக்கிறது? அதனைப் போக்க, தகுந்த வழிமுறை களைக் கூறுங்கள், டாக்டர்?

! வாய் சுத்தம் இல்லாமல் இருந்தால் வாய் நாறும். பற்களிலும் ஈறுகளிலும் நோய்த் தொற்று ஏற்பட்டு சொத்தைப்பல், பயோரியா போன்ற வியாதிகள் உண்டா னால் வாய் நாற்றம் அடிக்கும் டான்சில் வீக்கம், அடினாய்டு வீக்கம், தொண்டைப் புண், வாய்ப்புண், நுரையீரலில் புண், இரைப்பைப்புண், அஜீரணம், ஆகியவற் றாலும் வாய் நாற்றம் எடுக்கும். இதனைப் போக்க மேற்சொன்ன வியாதிகள் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வாயை எப்போதும் சுத்தமாகப் பராமரிக்க வேண் டும். தினமும் காலை, இரவு இரண்டு வேளைகளிலும் பல் துலக்க வேண்டும். சர்க்கரை, சாக்லேட், இனிப்புமாவு ஆகிய வற்றை அடிக்கடி சாப்பிடக் கூடாது; அப்படிச் சாப்பிட நேர்ந்தால் உடனே வாயை நன்கு கொப்பளித்து சுத்தப் படுத்தி விட வேண்டும். 'மவுத் வாஷ்' உப யோகித்து வாயைக் கொப்பளிப்பதும் நல்லது. மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் இடைவெளியில் பற்களை 'ஸ்கேலிங்' முறைப்படி சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். புகைபிடிப்பது, புகையிலை போடுவது, வெற்றிலை மற்றும் பான் மசாலா உபயோகிப்பது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

● ***தாஸ்பர்ஸானா, சிதம்பரம்.***

? எனக்கு கழுத்தின் இடது பக்கத்தில் ஒரு கட்டி உள்ளது. இதற்கு என்ன சிகிச்சை எடுக்க வேண்டும்? (கட்டியில் வலி இல்லை)

! உடனடியாக மருத்துவரிடம் காண்பித்து உன் கழுத்தில் உள்ள கட்டி சாதாரணக் கட்டியா அல்லது புற்றுநோய்க்கட்டியா என்பதைப் பரிசோதித்துத் தெரிந்து கொண்டு, அதற்குரிய சிகிச்சையைத் தொடங்க வேண்டும்.



சிரிப்...



"எதுக்கு உன் பையன் அடம்பிடிக்கிறான்?"
"அவனுக்கு புற்றுல தங்கறதுக்கு பிடிக்கலையாம். அதை இடிச்சுட்டு வீடு மாதிரி கட்டச் சொல்றான்."
- ப. ஜெயக்குமார்.

"எதிர் வீட்டு ராமு சரியான பயந்தாங்கொள்ளிடா."
"எப்படிச் சொல்றே?"
"சூரிய கிரகணத்தை டிவில கூட பார்க்க பயந்துட்டாரே!"
- சீர்காழி. வி. ரேவதி.



சிரிப்...

சிரிப்...



"மகாபாரத பீமன் ஒரு எழுத்தாளர்னு எப்படிச் சொல்லறே?"
"அவர்தான் எப்போதும் தன் கையிலே 'கதை' வெச்சிருப்பாரே!"
- அ. க. கிருஷ்ணன்.

சிரிப்...

சிரிப்...

"அந்தப் பல் டாக்டர் போலியானவரா?"
"ஆமாம். பல்லுல விழுந்த ஓட்டையை அடைக்க சிமெண்ட், செங்கல், மணல் தேவைன்னு லிஸ்ட் எழுதிக் கொடுக்கறார்!"
- அ.க. கிருஷ்ணன்.






"நம்ம வீட்டுல பூனை கூட இல்லியே. அப்புறம் யார் பாலை குடிச்சிருப்பாங்க?"
"அதான் பிள்ளையார் இருக்காரேம்மா!"
- தின. அன்புதேவன்

சிரிப்...

பழக்கம்



அப்பா கேட்டார்.

"அருண்! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. சாயந்திரம் நம்ப காஞ்சிபுரம் போறோம். என் ஃபிரண்டு சிவசங்கரை உனக்குத் தெரியுமில்லையா?"

"ஓ... அந்த அங்கிளை எனக்கு நல்லாவே தெரியுமே. மாலா அத்தை கல்யாணத்திற்கு அவர் தன் மகன் பாலகுமாரைக் கூடக் கூட்டிக் கொண்டு வந்திருந்தாரே?"

"எஸ். அவரேதான். அவரை இப்ப காஞ்சிபுரத்துக்கு மாத்தியிருக்காங்க. இன்னிக்கு அங்கே போறோம். நாளை இரவு கிளம்பி இங்கே வர்றோம். உனக்குச் சம்மதம்தானே?"

"கரும்பு தின்னக் கூலியா டாடி...?" மகிழ்ச்சியோடு கூவினான் அருண்.

மறுநாள். ஞாயிறு இரவு. படுக்கப் போகும் பொழுது அப்பா கேட்டார்.

"அருண். உன்னை நான் எதற்காகக் காஞ்சிபுரம் கூட்டிக் கொண்டு போனேன்னு தெரியுமா?"

"உங்க நண்பரைப் பார்த்துவிட்டு அப்படியே காஞ்சிபுரம் கோயிலையும் பார்த்துவிட்டு வரத்தான். இல்லையா?"

"நீ சொல்றது சரிதான். ஆனா, இந்த எல்லாவற்றையும் விட முக்கியமானது பாலகுமார் தன் வீட்டிலே அம்மா - அப்பாகிட்டே எப்படி நடந்து கொள்கிறான் என்பதை நீ நேரிலே பார்க்கத்தான் உன்னைக் கூட்டிக் கொண்டு போனேன். அவன் நடந்து கொண்ட விதத்தை கவனிச்சியா?"

ஏன் கவனிக்க வில்லை. அருண் நன்றாகவே கவனித்தான். நேற்று இரவு காஞ்சிபுரத்தை அடைந்தது முதல் இன்று மாலை கிளம்பும் வரை பால குமாரை கவனித்துக் கொண்டுதான் இருந்தான். அப்படி என்னதான் கவனித்தான்?

நேற்று இரவு எட்டு மணி சுமாருக்கு வீட்டிற்குள் நுழைந்த அருணையும் அவன் தந்தையையும் இன்முகத்தோடு வரவேற்றார் சிவசங்கர்.

தன் வயதை ஒத்த தன் வகுப்பே படிக்கும் பாலகுமாரோடு ஒட்டிக் கொண்டு விட்டான் அருண்.

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு என்று அவன் அம்மா கூப்பிட்டதும் சமையல் அறைக்குள் உடனே போனான்.

சாப்பாட்டு மேஜை

தா. ஜானகி

மீது சுத்தமாகக் கழுவிய தட்டுகளை வைத்தான். எவர்சில்வர் ஜக்கில் நீர் கொண்டு வந்து டம்ளர் களில் ஊற்றினான். சாப் பிட்ட பிறகு தன் தட்டைத் தானே விம் பவுடர் போட்டுச் சுத்தமாகக் கழுவி வைத்தான்.

விருந்தினர்களுக்குப் படுக்கை போடுவதில் உதவி னான். வயதான தாத்தா வுக்கு மறக்காமல் இரவு குடிக்க நீர் கொண்டு வைத் தான். அம்மா கூப்பிட்டுக் கொடுத்த பால் டம்ளர் களை அவரவர்களுக்குக் கொடுத்தான். அவர்கள் குடித்து முடித்த பிறகு எல்லா டம்ளர்களையும் எடுத்து பாத்திரம் தேய்க் கும் இடத்தில் போட்டான். பிறகு அருணுக்குப் பக்கத் தில் வந்து படுத்துக் கொண் டான்.

பாலகுமார் செய்தது எல்லாமே அருணுக்கு ஆச் சர்யமாக இருந்தது. ஒரு நாள் கூட அவன் இந்த மாதிரி அம்மாவிற்கு உதவி செய்ததில்லை.



இன்று காலை!

ஹாலில் உள்ள கடியா ரம் ஏழு முறை இனிமை யாக ஒலித்து, எழுப்பிய பிறகே அருண் கண் விழித் தான். தன் பக்கத்தில் படுத்திருந்த பால குமாரைப் பார்த்தான். அவனைக் காண வில்லை. படுக்கை சுத்தமாக மடிக்கப்பட்டு அதற்குரிய இடத்தில் வைக்கப்பட்டிருந் தது. மெதுவாக எழுந்து வீட்டின் பின் பக்கம் சென்றான்.

அங்கே!

குளித்து முடித்திருந்த பாலகுமார், தான் தோய்த்திருந்த டிராயர் சட்டைகளை கம்பிக் கொடியில் உலர்த்திக் கொண்டிருந் தான். உலர்த்தி முடித்ததும் அவைகள் பறக்காமல் இருக்க க்ளிப்பைப் போட் டான். இவனைப் பார்த்ததும் பல் பொடி யை எடுத்துக் கொடுத்தான்.

அருணுக்கு ஆச்சர்யமாக இருந்தது. தினமும் அவன் ஏழு மணிக்குத்தான் எழுந்திருப்பான். அதுவும் அம்மா "டேய் அருண். எழுந்திரு. பள்ளிக்கூடத்துக்கு நேரமாயிடும்" என்று கத்திய பிறகுதான் எழுந்திருப்பான். உடம்பிற்குக் கெடுதல் என்று தெரிந்தும் பல் தேய்க்காமல்தான் காப்பி குடிப்பான்.

பல் துலக்கிவிட்டு வரும்போது பால குமார் பிள்ளையார் படத்திற்கு



''போம்மா! ஞாயிற்றுக் கிழமை கூட இட்லிதானா! பூரி செய்யக் கூடாது?'' என்று கடுப் படித்துக் கொண்டே பால குமார் சாப்பிடவில்லை. இட்லியை எறியவும் இல்லை.

ஒன்பது மணிக்கு டீ.வி.யில் சிறுவர்களுக்கான நாடகம் ஒளி பரப்பாகிக் கொண்டிருந்தது. சுவாரஸ்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ''பாலகுமார்'' என்று அம்மா கூப்பிடும் குரல் கேட்கவே எழுந்து சமையல் அறைப் பக்கம் சென்றான்.

"போம்மா! டீ.வி. பார்க்கும் போது என்னைக் கூப்பிடாதே. நான் வர மாட்டேன்" என்று சொல்லவில்லை. அதுமட்டு மில்லை. பதினொரு மணி சுமாருக்கு பாலகுமார் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருந்த போது அவன் அம்மா வந்தாள்.

"இன்னிக்கு சேமியா பாய சம் வைக்கப் போறேன். கடைக் குப் போய் சேமியாவும், முந்திரி பருப்பும் வாங்கிண்டு வா'' என்று கூறியபடி பத்து ரூபாய்த் தாளை நீட்டினாள்.

"நான் ஹோம்வொர்க் செய் யற போது என்னை ஏன் டிஸ் டர்ப் பண்றே? டாடியை போகச் சொல்லு" என்று தன் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை!

மாலையில் பாலகுமார் உலர்ந்த துணிகளை மடித்து, அவைகளுக்கு உரிய இடத்தில் வைத்தான். மறுநாள் பள்ளிக்கு வேண்டிய புத்தகங் களை கால அட்டவணைப்படி ஒழுங்காக எடுத்து வைத்துக் கொண்டு, பேனாவிற்கு மை போட்டு யூனிபாரம் டிரஸ்ஸை அயர்ன் செய்து.... இந்த மாதிரி ஒருநாள் கூட தான் செய்ததில்லையே என்று எண் ணியபடி விடைபெற்றுக் கொண்டு ஊர் திரும்பும் வரை அவனையே கவனித்துக் கொண்டிருந்தான் அருண்.

அப்பா அருணைக் கேட்டார்.

"என்ன யோசிக்கறே அருண்? பால குமாரை உனக்குப் பிடிக்கலையா?"

முன்னாடி கைகளைக் கூப்பி, கண்களை மூடியபடி நின்று கொண்டிருந்தான். அவன் வாய் பிள்ளையார் ஸ்லோகத்தை முணுமுணுத் துக் கொண்டிருந்தது. இந்த மாதிரி ஒரு நாள் கூட அருண் கடவுளுக்கு முன் ஒரு நிமிடம் செலவழித்ததில்லை.

அடுத்து காலை எட்டு மணிக்கு!

சாப்பாட்டு மேஜையில் சிற்றுண்டி உண்ண அமர்ந்தபொழுது, நேற்று இரவு செய்தது போலவே பாலகுமார் தட்டுகளை சுத்தம் செய்து வைத்தான். தட்டில் இட்லி பரிமாறப்பட்டது.

"நோ... டாடி... அம்மாவைத் தொந்தி ரவு செய்யாம... தன் வேலைகளைத் தானே செய்து கொண்டு, அன்றைய பாடங்களை அன்றே ஒழுங்காகப் படித்து பெற்றோருக்கு உதவியாகவும், பெரியோர் களிடம் மரியாதையாகவும் நடந்து கொள் ளும் அவனை எனக்கு மிகவும் பிடிச் சிருக்கு. அதனால..."

"அதனால... என்ன...?"

"ம்... வந்து.. அவனைப் போல நானும் நல்ல பையனாக நடந்து கொள்றதா முடிவு செய்திருக்கேன் டாடி."

"நிஜமாவா?"

"பாருங்களேன்" என்றான் அருண் உறுதியான குரலில்.

மறுநாள் பார்க்க ஆரம்பித்தார் அப்பா.

அருண் காலை 5.30 மணிக்கு எழுந்து பால் வாங்கிக் கொடுத்து, பல் தேய்த்து, காப்பி குடித்து, குழாயில் தண்ணீர் வரும் பொழுதே குளித்து, தன் உடைகளைத் தானே துவைத்து, உலர்த்தி, அம்மா சொன்ன பொட்டுக் கடலையையும் தேங் காய்ச் சில்லையும் வாங்கிக் கொடுத்து, தன் தட்டைத் தானே கழுவி, சாப்பிட்ட தும் தானே சுத்தம் செய்து... கால அட்ட வணைப்படி புத்தகங்களைச் சரிபார்த்து... யூனிபாரம் போட்டுக் கொண்டு... அவதியும் அவசரமுமாகக் கிளம்பாமல் ஐந்து நிமிடம் முன்னாடியே அமைதி யாகக் கிளம்ப... - மகனை வியப்புடன் பார்த்தார். மாலை பள்ளிக்கூடம் விட்ட தும் ஒழுங்காகப் பாலைச் சாப்பிட்டு... சிறிது நேரம் விளையாடி விட்டு, விளக்கு வைத்த தும் வீட்டுப் பாடங்களை எழுதி அன்று நடத்திய பாடங்களைப் படித்து... அம்மா சொல்படி கேட்டு நடப்பதையும் பார்த்தார். தினமும் இதேபோல் நடப்ப தாக திட்டவட்டமாகக் கூறினான் அருண். அவர் மனம் குளிர்ந்தது. தன் நண்பர் சிவசங்கருக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினார்.

காஞ்சிபுரத்தில் பாலகுமார் வீட்டில் -

ரேஷன் கடையிலிருந்து சர்க்கரையும், கோதுமையும் வாங்கிக் கொண்டு வந்த பாலகுமாரைப் பார்த்த அவன் தந்தையின் விழிகள் வியப்பால் மலர்ந்தன. கண்கொட் டாமல் மகனையே பார்த்துக் கொண்டிருந் தார்.

"என்ன டாடி... இப்படிப் பார்க்கிறீங்க! நாலு நாளைக்கு முன்னாடி என்னை நீங்க கூப்பிட்டு, "பாலகுமார்! என் ஃபிரண்டு சுப்பிரமணியனும் அவர் மகன் அருணும் நம்ப வீட்டுக்கு வராங்க. சுத்த சோம்பேறி யான அருண் உன்னைப் பார்த்துத் திருந்தி நல்ல பையனாக மாறணும்ங்கறதுக்காக அவர் நம்ப வீட்டிற்கு பையனைக் கூட் டிக் கொண்டு வர்றாராம். என் ஃபிரண்டு கிட்டே உன் பையன் அருண் மாதிரித் தான் என் பையன் பாலகுமாரும்னு சொல்லிக்க தயக்கமாவும், வெட்கமாக வும் இருக்கு. அதனால, அவங்க வந்திருக் கும்போது தயவுசெஞ்சு உன் சோம்பேறித் தனத்தை விட்டுட்டு சுறுசுறுப்பா நல்ல பையனா நடந்துக்கோன்னு" கேட்டுக்கிட் டீங்க! அவங்க முன்னாடி எப்படி நடந்து கொள்ளணும்னு நீங்களும் அம்மாவும் விளக்கமா சொல்லிக் கொடுத்தீங்க. அதன் படியே நடந்தேன்.

"சுருக்கமாச் சொன்னா நீங்க சொல் லிக் கொடுத்தபடி நான் நடிச்சேன். என் நடிப்பைப் பார்த்தே அருண் திருந்தி விட்டதாக அவங்க அப்பா லெட்டர் போட்டிருக்கார். உண்மையிலேயே நான் நல்ல பையனாக என் கடமைகளை ஒழுங் காகச் செய்யறவனாவே இருந்தா, நீங்க ளும் அம்மாவும் எவ்வளவு சந்தோஷப்படு வீங்கன்னு நெனச்சேன். சும்மா வகுப்பறை யிலே "மாணவர் கடமை"ன்னோ "எனது



"என் பையன் கபில்தேவ் மாதிரி ஆயிட் டான்."

"கிரிக்கெட்ல பெரிய ஆளா ஆயிட் டானா...?"

"ஊஹூம்; பின்பக்கம் சிண்டுல 'ரப்பர் பேண்ட்' போட்டு, சின்னதா ஒரு குடுமி வச்சிக்க ஆரம்பிச்சிட்டான்!"

- சீர்காழி வி. ரேவதி

வணங்குமே!

ஆல விழுது தன்னிலே
அழகு ஊஞ்சல் ஆடிடும்
கோலப் பூக்கள் நீங்களே!
கொஞ்சம் இதனைக் கேளுங்கள்!

இனிமையான வார்த்தைகள்
என்றும் புகழைச் சேர்த்திடும்!
எளிமை யான வாழ்க்கையே
என்றும் அமைதி சேர்த்திடும்!

அன்பு பண்பு ஒழுக்கமே
அறிவை ஓங்கச் செய்திடும்!
நன்மை செய்யும் நெஞ்சிலே
உண்மை வந்து தங்கிடும்!

உன்னைப் போன்று பிறரையும்
உணர்ந்து மதித்துப் போற்றினால்
இன்ப வாழ்வு பூக்குமே
இயற்கை வாழ்த்தி வணங்குமே!

- கருமலைப்பழம்நீ




கட மை"ன்னோ கட்டுரை நோட்டிலே மார்க் வாங்க மட்டும் எழுதினால் போதாது. எழுதியபடி நடந்து கொள்ளணும்னு தீர்மானிச்சேன்.

"எங்க ஆசிரியர் முந்தா நாள் என்ன சொன்னார் தெரியுமா? ஒரு திருடன் அதிகாரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள துறவி வேஷம் போட்டுக் கொண்டு கோவிலுக்குள்ளே உட்கார்ந்திருந்தானாம். அப்ப ஒரு ஆள் அவனை உண்மையான துறவி என்று வணங்கி அவன் சொன்ன உபதேச மொழிகளை சிரத்தையோடு கேட்டு அதன்படி நடப்பதாகச் சொல்லி விட்டுச் சென்றானாம். போலி சாமியாராக இருக்கும் எனக்கே இத்தன்ன மதிப்பு என்றால், நற்குணங்களையுடைய உண்மையான சாமியாராகவே இருந்தால் இன்னும் எத்தனை மதிப்பிருக்கும் என்று எண்ணிய திருடன், உள்ளம் திருந்தி அசல் துறவியாக மாறிவிட்டானாம். அதேபோல இனியும் நான் நடிக்க விரும்பலை. உண்மையிலேயே நல்ல பையனா திருந்தி விட்டேன்" - ஒரு சொற்பொழிவே செய்து விட்டான் பாலகுமார்.

"பாலகுமார்! திருந்திய உன்னைப் பார்க்கும் போது எனக்கு ரொம்பவே மகிழ்ச்சியா இருக்கு. பசுமையான மரத்திலே அடிக்கற ஆணி எப்படி சீக்கிரமா சுலபமா பதியறதோ அதே போல இள வயசிலேதான் நல்ல பண்புகள் மனசிலே பதியும். அந்தப் பண்புகளை வீட்டிலேயும், பள்ளிக்கூடத்திலேயும் மாணவனாகிய நீ உன் கடமைகளை சரியாச் செய்யணும். அப்பத்தான் பிற்காலத்திலே நாட்டுக்கு நம்ப கடமையை ஒழுங்காகச் செய்ய முடியும். அப்பத்தான் நம்ப நாடு முன்னேற முடியும். நாளைய பாரதம் உன்னைப் போன்ற மாணவர்கள் கையில்தானே இருக்கிறது? கடமையைச் சரிவரச் செய்தால்தானே உரிமையை எதிர்பார்க்க முடியும்? நம்ப பாரத நாட்டுக்காக ஒவ்வொரு மாணவனும் சிறந்த குடிமகனாக மாறுவது அவனோட கடமையில்லையா?"

"எஸ் டாடி. இனிமே வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லவனாக நடப்பேன்" என்று கூறிய மகனைப் பெருமையோடு பார்த்தார் தந்தை. ஏனோ அவரையும் அறியாமல் அவர் உள்ளம் காஞ்சிபுரம் நண்பருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டது.

இசையை விடவும்...



ஒரு காட்டில் ஒரு முயல் குட்டியும் குயிலும் நட்புடன் வசித்து வந்தன. முயல் குட்டி. பால் போன்ற வெண்மை நிறத்தோடு மிகவும் அழகாக இருந்தது. காட்டில் முயலுக்குத் தேவையான உணவு எளிதாகக் கிடைத்தது. அதனால் முயல் புஷ்டியாக நன்கு வளர்ந்திருந்தது.

குயில், பெரிய ஆலமரத்தில் இருந்த ஒரு சிறு பொந்தில் வசித்து வந்தது. அந்த மரத்தின் கீழே இருந்த புதரில் முயல் வசித்தது. முயலும் குயிலும் நட்போடு ஒன்றுக்கொன்று உதவிக் கொண்டன.

ஒருநாள் அங்கே நரி வந்தது.

"வாருங்கள், குயிலின் இசையைக் கேட்டு மகிழ்வோம்!" என்றது முயல்.

"அந்த இனிய இசையை விடவும் பாராட்டக் கூடியது ஒன்று உண்டு" என்று தன் வேலையை ஆரம்பித்தது குள்ளநரி. "என்னது அது?" என்று முயலும், பாடுவதை நிறுத்தி விட்டுக் குயிலும் ஒரே நேரத்தில் கேட்டன.

நரி பெருமிதத்துடன், "சொல்கிறேன், அது தான் உங்கள் நட்பு!" என்றது.

நரியின் பாராட்டால் முயலும் குயிலும் மனம் குளிர்ந்தன.

"கன்னங்கரிய இருள் போன்ற குயிலுடன் பால் போன்ற வெண்மை நிறமும் பஞ்சு மென்மையும் கொண்ட முயல் நட்பாக இருப்பது உலக அதிசயமாயிற்றே! என்றது வஞ்சக நரி.

நரியின் புகழ்ச்சி முயலுக்கு மன மயக்கம் தந்தது. தனது நிறத்தைப் பற்றிய கர்வம் முயலுக்கு எழுந்தது.

தனது நிறத்தை நரி மட்டமாகப் பேசியதைக் கண்டு குயில் வருந்தியது. அது பதிலேதும் பேசாமல் தன் பொந்தில் மௌனமாய் ஒடுங்கியது.

நரி, காட்டை அடுத்திருந்த ஊரில் வசிக்கும் வேடனைச் சந்தித்து, முயலைத் தான் வஞ்சகமாகப் பேசி அழைத்து வருவதாகவும், வேடன் அதை அம்பு எய்து கொல்ல வேண்டும் என்றும் வேண்டியது.

வேடனும் ஒப்புக் கொண்டான். பதிலுக்கு நரிக்கு முயல் கறியில் பங்கு தரவும் சம்மதித்தான்.

முயலும் நரியும் ஒன்றாகப் போவதைக் கண்டு முயலுக்கு ஏதோ ஆபத்து என குயில் சந்தேகித்தது. அதுவும் மரங்களில் பதுங்கிப் பதுங்கிப் பறந்து வந்தது.

சிறிது தொலைவில் வேடனைக் கண்டதும் குயிலுக்கு நரியின் வஞ்சகம் விளங்கி விட்டது.

குறிப்பிட்ட இடம் வந்ததும் நரி முயலிடம் பேச்சுக் கொடுத்தவாறே வாலை வேகமாக ஆட்டி வேடனுக்குச் சைகை காட்டியது.

வேடன் அம்பைப் பொருத்தினான். முயலைக் குறிபார்த்தான். அம்பை விடுக்கும் சமயம், குயில் பறந்து சென்று வேடன் கையில் கொத்தியது. வலியால் வேடன் குறியைத் தவற விட்டான்.

வில் விழுந்த சத்தம் கேட்டு முயல் திரும்பிப் பார்த்தது. தனக்கு நேர இருந்த ஆபத்தைப் புரிந்து கொண்டது. ஓட்டம் பிடித்தது.

பின்னர் முயல், குயிலிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. நட்புக்கு நிறமோ, அழகோ தேவையில்லை; நல்ல மனமும் அன்பும் போதும் என்பதை முயல் புரிந்து கொண்டது.

— மகாதேவன்

குமாரும் குட்டி யானையும்!

"என்ன சித்தப்பா கவலையோடு இருக்கிறீர்கள்?" -ஆர்வத்தோடு கேட்டான் குமார்.

"பிரான்சு நாட்டுக் குழந்தைகள் நம் பிரதமரிடம் ஒரு யானைக் குட்டியை அனுப்புமாறு கேட்டிருக்கிறார்கள். நம் அன்புப் பரிசாக ஒரு யானைக் குட்டியைத் தர நம் அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்கு ஏற்றபடி ஒரு யானைக் குட்டியைப் பிடித்துத் தரச் சொல்லி காட்டிலாகா எனக்கு உத்தரவு இட்டுள்ளது" என்றார் சித்தப்பா.

"இவ்வளவு தானே விஷயம்? நீங்கள் இருக்கும் காட்டிலேயே நிறைய யானைக் குட்டிகள் இருக்குமே?"

"உண்மைதான் குமார். ஆனால், குட்டியை மட்டும் பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல."

"ஏன் தாயை விட்டுக் குட்டி பிரியாமல் இருக்கிறதா?"

"அதோடு மட்டுமல்ல, யானைகள் எப்போதும் கூட்டமாகவே திரியும் இயல்பு உள்ளவை. தங்கள் கூட்டத்தில் இருக்கும் குட்டிகளை, எல்லாப் பெண் யானைகளுமே பாதுகாக்கும். புலி, சிங்கம் ஆகியவை குட்டிகளைத் தாக்க வந்தால் குட்டிகளை நடுவே விட்டு, மற்ற பெண் யானைகள் அதைச் சுற்றி நின்று கொள்ளும். பெண் யானைகளைச் சுற்றி ஆண் யானைகள் நின்று கொண்டு கோபத்தோடு எதிரிகளை விரட்டும்."

"புலி, சிங்கத்திற்கே இந்தக் கதி என்றால் யானைக் குட்டிகளை நம்மால் நெருங்க முடியுமா?" என்றான் குமார்.

"அதனால்தான் என்னால் யானைக் குட்டிகளைப் பிடிக்க முடியவில்லை. என் கவலைக்குக் காரணம் இதுவே" என்றார் சித்தப்பா வருத்தத்தோடு.



"சித்தப்பா முயன்றால் முடியாதது இல்லை. சரியான நேரத்தில், சரியாக திட்டமிட்டுச் செய்தால் உலகத்தையே வெல்லலாமே? ஒரு யானைக் குட்டியைப் பிடிக்க உங்களாலா முடியாது? கண்டிப்பாக முடியும். கவலையை விடுங்கள்" என்றான் குமார்.

வேணு சீனுவாசன்

அவனுடைய உறுதியும், தன்மேல் அவனுக்கிருந்த நம்பிக்கையும் அவரை வியப்படைய வைத்தது.

அப்போது, சித்தப்பாவின் அலுவலக ஊழியன் ஒருவன் ஓடி வந்தான். "ஐயா, நீங்க சொன்ன மாதிரியே, பெரிய பள்ளம் வெட்டி, அதை இலை, தழை போட்டு மூடி, மேலே கரும்பு, சர்க்கரை, வெல்லம், பொரி, அவல் எல்லாம் வைச்சாச்சு. நிச்சயமாக இன்னிக்கி குட்டி மாட்டிக்கும்" என்றான்.

"பள்ளத்தைப் பார்த்து விட்டு வரலாம் வா" என்ற மாமாவுடன் குமாரும் புறப்பட்டுச் சென்றான்.

காடு அடர்ந்து இருந்தது. ஆற்று நீர் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. குயில்கள் ஆனந்தமாகப் பாடிக் கொண்டு இருந்தன. வித விதமான வண்ணங்களில் வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும் ரீங்காரம் இட்டுப் பறந்து கொண்டிருந்தன.

யானைக்காக வெட்டப்பட்ட பள்ளம் தெரிந்தது. அதை எளிதில் கண்டு பிடிக்க முடியாத வகையில் மூங்கில்களைப் பரப்பி, அதன் மீது மரக்கிளை, தழை, தென்னை ஓலை ஆகியவற்றைப் பரப்பி மண்தரை போல் செய்து இருந்தனர்.

சித்தப்பாவும், குமாரும் அதைப் பார்த்துக் கொண்டு இருந்த போது ஒரு ஆள் ஓடி வந்தான்.

"சார், யானைக் கூட்டம் ஒன்னு வந்துகிட்டு இருக்கு. சத்தம் போடாம மறைஞ்சிக்குங்க" என்றான்.



எல்லோரும் சத்தம் போடாமல் மரத்தின் பின்னாலும் புதர்களின் பின்னாலும் மறைந்து, பார்த்துக் கொண்டு இருந்தனர்.

மூன்று பெரிய யானைகளும், இரண்டு குட்டி யானைகளும் கொண்ட ஒரு கூட்டம் அங்கே வந்தது. கரும்பைப் பார்த்தவுடன் குட்டி யானைகள் வேகமாகப் பள்ளத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தன. உடனே, தாய் யானை தும்பிக்கையை உயர்த்திப் பிளிறியது. அதைக் கேட்டதும்

குட்டிகள் மேலே போகாமல் நின்று விட்டன.

"ஆபத்து, கரும்பைப் பார்த்து ஓடாதே! என்று அந்தத் தாய் யானை எச்சரித்து இருக்க வேண்டும். தாயின் பேச்சைக் கேட்டதால் குட்டி விழாமல் தப்பித்துக் கொண்டது" என்று மெதுவான குரலில் சொன்னார் சித்தப்பா.

என்ன நினைத்ததோ? எல்லா யானை

திடீரென்று நினைவுக்கு வந்தது. அவ்வளவு தான், நடு இரவு என்று கூடப் பார்க்காமல், "சித்தப்பா, சித்தப்பா" என்று காட்டுக் கத்தலாகக் கத்திக் கொண்டே மகிழ்ச்சி யுடன் அவர் அறைக் கதவைத் தட்டி னான்.

தூக்கக் கலக்கத்தோடு கதவைத் திறந்த சித்தப்பாவிடம், "சித்தப்பா, குட்டி யானை யைப் பிடிக்க ஒரு தந்திரம் இருக்கிறது.



களும் சிறிது நேரம் நின்றன. பிறகு பள் ளத்தை நோக்கி வராமல் வந்த வழியே திரும்பிச் சென்று விட்டன.

சித்தபாவும், குமாரும் வீட்டிற்குத் திரும்பி வந்தனர். இரவு முழுவதும் குமார் குட்டி யானையைப் பிடிப்பது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். தாய் யானையின் பார்வையில் இருந்து, குட்டி யைத் தனியே விலக்கி விட்டால் பிடிப்பது சுலபம். இதை எப்படிச் செய்வது என்று மண்டையை உடைத்துக் கொண்டான். யானைகளின் விசேஷ குணம் ஒன்று

எனக்கு இப்போதுதான் அது நினைவுக்கு வந்தது" என்றான் குமார்.

"என்ன தந்திரம்? எனக்கும்தான் சொல் லேன்?"

"அதை இப்போ சொல்ல மாட்டேன். நாளை சொல்கிறேன். நீங்கள் நாளைக்கு ஆற்றுக்கு மறுகரையில் பள்ளம் வெட்ட ஏற்பாடு செய்யுங்கள்."

"யானைகள் இந்தக் கரையில் தானே இருக்கின்றன! எதற்காக எதிர்க் கரையில் பள்ளம் வெட்டச் சொல்கிறாய்?"

"அதில்தான் என் தந்திரம் அடங்கி இருக்கிறது" என்றான் குமார் விஷமத்

தோடு.

மறுநாள் காலை குமாரின் யோசனைப் படியே ஆற்றின் மறுகரையில் பெரிய பள்ளம் வெட்டி, அதை மூங்கில், இலை, தழைகளால் மறைத்து இருந்தனர். கட்டுக் கட்டாகக் கரும்பும், சோளக் கதிர்களும் அதன் மீது வைக்கப்பட்டன.

பள்ளத்தைச் சுற்றி இருந்த மரங்களில் உட்கார்ந்தவாறே சித்தப்பாவும், இன்னும் பலரும் பொறுமையாகக் காத்து இருந்தனர்.

யானைக் கூட்டம் தண்ணீர் குடிக்க ஆற்றங்கரைக்கு வந்தது. எதிர்க்கரையில் தெரிந்த கரும்பு, சோளம் ஆகியவற்றைப் பார்த்தது. அந்தக் கரைக்குச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தன.

பெரிய யானைகள் முதலில் தண்ணீரில் இறங்காமல் குட்டி யானைகளை இறங்கச் செய்தன.

மரத்தில் உட்கார்ந்து இருந்த குமார், சித்தப்பாவிடம், "என் தந்திரம் பலித்து விட்டது! பாருங்கள் தாயை விட்டு குட்டிகள் முன்னே வருகின்றன" என்றான் மகிழ்ச்சியோடு.

இரண்டு குட்டி யானைகளும் ஆற்றைக் கடந்து கரையில் ஏறின. கரும்பு, சோளத்தை நோக்கி வேகமாக ஓடி வந்தன.

அப்போதுதான் பெரிய யானைகள் ஆற்றில் பாதி தூரத்தைக் கடந்து இருந்தன. முன்னால் ஓடி வந்த குட்டிகள், ஆசையோடு கரும்பைத் தின்ன வந்த போது, மறைக்கப்பட்டு இருந்த பள்ளத்தில் கால் வைத்தன. அவ்வளவுதான்! அதன் கனத்தைத் தாங்காமல் மூங்கில் முறிய மணல் சரிய, தொபுகடீர் என்று கரணம் போட்டவாறே பள்ளத்தில் விழுந்தன. பெரிய யானைகளை நோக்கி, பரிதாபமாகப் பிளிறின.

குட்டியானைகள் செய்வது அறியாமல் திகைத்துப் போய் பள்ளத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தன. இதற்குள் பெரிய யானைகள் கரையேறி விட்டன. குட்டிகளின் குரலைக் கேட்டதும் அவை ஆபத்தை உணர்ந்து, காப்பாற்ற வேகமாக ஓடி வந்தன. பயங்கரமாகப் பிளிறின.

அடுத்த நொடியே சித்தப்பா துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டார். மரத்தில் பதுங்கி இருந்தவர்கள் தாரை, தப்பட்டைகளை அடித்து திடீரென்று பயங்கர ஒலி எழுப்பினர். சிலர் தீப்பந்தங்களை யானைகள் வரும் வழியில் வீசினர். இதனால் மிரண்டு பயந்த யானைகள் தயங்கித் தயங்கி காட்டுக்குள் ஓடி விட்டன.

"ஆற்றைக் கடந்து போகும் போது மட்டும்தான் குட்டிகள் தாயை விட்டுப் பிரியும், முன்னே போகும் என்று எப்படி அறிந்து கொண்டாய்? என்பதை ஆச்சரியத் தோடு கேட்டார் சித்தப்பா.

"யானைக்கு புத்தி கூர்மை அதிகம். குட்டிகளிடம் பாசம் அதிகம். எனவே, ஆற்றைக் கடக்கும் போது தாங்கள் முதலில் சென்றால் தங்கள் கனத்தினால் ஆற்று மணலில் பள்ளம் ஏற்படும். இதனால் பின்னால் வரும் குட்டிகள் ஆற்றைக் கடக்க சிரமப்படும் என்று யோசித்து குட்டிகளைத்தான் முதலில் அனுப்பும் என்று புத்தகத்தில் படித்தது நினைவுக்கு வந்தது. அதைத்தான் சோதனை செய்து பார்த்தேன்" என்றான் குமார்.


"விலங்குகளின் இயல்பைப் பற்றிய உன் அறிவு வியக்க வைக்கிறது! பாராட்டுக்கள்" என்றார் சித்தப்பா.

சித்தப்பாவின் கவலை தீர்ந்தது. அனைவரும் குமாரின் திறமையைப் பாராட்டினர்.

"ஏன் பள்ளிக் கூடத்து முன்னால வயதான பாட்டி, தாத்தாக்கள் எல்லாரும் நிக்கிறாங்க?"

"அவங்க இறந்துபோய் விட்டதாக அடிக்கடி பையன்கள் லீவு எடுக்குறாங்க. அதனால இந்த ஊர்ல இருக்கிற தாத்தா பாட்டிகள் எல்லாம் தினசரி பள்ளியில ஆஜராகணும்னு தலைமை ஆசிரியர் கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கார்.

- தேனி முருகேசன்



தப்பிக்கவா பார்க்கறே?

பள்ளியின் முகப்பு வாசலில் மூங்கில் பிரம்புடன் நின்றார் தலைமையாசிரியர். அவரது தலையைக் கண்டதுமே ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்த மாணவ மாணவியரது நடையில் தயக்கமும் தளர்வும் தலை காட்டலாயின.

ஆசிரியர்களின் மேற்பார்வையிலான அமைதிப் படிப்பு அந்தப் பள்ளியைப் பொறுத்தவரை 'டாண்' என்று எட்டே முக்கால் மணிக்கே ஆரம்பம் ஆகிவிடும். குறித்த நேரத்திற்கு நிமிடம் தவறினாலும் கிள்ளு, குட்டு தண்டனைதான்!

முதுகை அழுத்தும் புத்தகச் சுமையோடு மூச்சிரைக்க ஓடி வந்து கொண்டிருந்த முத்துவேல், தூரத்தில் வரும்போதே தலைமையாசிரியரைப் பார்த்து விட்டான். ஆனால், அவன் பார்வையில் அச்சமோ நடையில் தயக்கமோ தென்படக் காணோம். மிரண்டு பின்வாங்கப் பார்க்கும் மாணவ மாணவியரைக் கடந்து தைரியமாக அவருக்கு முன்னால் வந்து நிற்கிறானே! தனது தாமதத்திற்கு பொருத்தமானதொரு காரணம் அவனிடம் இருக்குமோ? தனக்குத் தண்டனை கிடைக்க நியாயமில்லை என்ற உறுதி அவனது முகபாவனையில் வெளிப்பட்டது.

"நீ எந்தக் கிளாஸ்? ஏன்டா ஸ்டடிக்கு லேட்? எந்த ஊர்லேருந்து வாறே?" – கேள்விகளை அடுக்கியபடி கன்னத்தில் கிள்ளக் கையை நீட்டினார் எச்.எம்.

"எட்டாம் வகுப்பு, 'பி' செக்ஷன் சார். பண்ணையூர்லேருந்து நாலு கிலோ மீட்டர் நடந்து வாறேன். என்னிக்குமே லேட்டா வந்ததில்லே. ஆனா இன்னிக்கி தவிர்க்க முடியாத காரணம் சார். வழியிலே ஒரு...."

அதற்கு மேல் அவனைப் பேச விட்டால் தானே?

"போதும் போதும்; நொண்டிச் சாக்குச் சொல்லி தப்பிக்கவா பாக்கறே?"

பள்ளியின் தலை வாசலுக்கு நேர் அருகில் மரத்தடியில் அமர்ந்து அமைதிப் படிப்பில் ஆழ்ந்திருந்த எட்டாம் வகுப்பு 'பி' பிரிவு மாணவர்கள் முத்து வேலுக்குக் கிடைத்த தண்டனையை வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். அவன் அவர்கள் அருகில் சென்று உட்கார்ந்து, படிப்பதற்காகப் புத்தகத்தைத் திறந்தான். முத்துவேலுவின் ஊரைச் சேர்ந்த செந்தில் குமார் அவன் காதருகே தன் முகத்தை நீட்டி, "நான் தான் சொன்னேனில்லே; நீ கேட்டியா? நாம உண்டு, நம்ம வேலையுண்டுன்னு பேசாமே என்னோட வந்திருந்தா, இப்படிக் கிள்ளு வாங்கி அவஸ்தைப்படவாணாமில்லே? அந்தப் பார்வை இல்லாத மனுசனுக்கு உதவுறேன்னு ஓடுனியே, இப்போ என்னாச்சு? தாம



குரு. சீனிவாசன்

தத்துக்கு நீ சொன்ன உண்மைக் காரணம் எச்.எம். கிட்டே எடுபட்டுச்சா? நீ பண்ண உதவியும், சொன்ன உண்மையும் உனக்கு உதவலே பாரு!" என்று மெல்லக் கிசு கிசு குரலில் அங்கலாய்த்தான்.

என்றைக்கும் போல அன்றைக்கும் பண்ணையூரைச் சேர்ந்த அந்த மாணவப் பட்டாளம் எட்டு மணிக்கெல்லாம் இராம நல்லூரரை நோக்கி வேக நடை போட்டுக் கொண்டிருந்தது. பாதி வழியிலே இடை மறித்தார் அந்தப் பார்வையற்ற மனிதர். கறுப்புக் கண்ணாடி அணிந்து, கையில் வெள்ளை நிறக் கைத்தடியை ஏந்தி நின்ற அவர், "தம்பிங்களா, நீங்க ராமநல்லூர் போற ஸ்கூல் பிள்ளைங்களா? கொஞ்சம் எனக்கு வழிகாட்டி, அந்த ஊர் பஸ் ஸ்டாண்டிலே கொண்டு போய் விட மாட்டீங்களா?" என்று பரிதாபமாகக் கெஞ்சினார்.

'எட்டே முக்கால் மணிக்குள் பள்ளியின் எல்லையை மிதிக்கும் பரபரப்பில் ஓடிக் கொண்டிருந்த அவர்கள் செவி சாய்ப்பார்களா? ஆனால், முத்து வேலுவுக்கு மட் டும் அவரது வேண்டுகோளை உதறித் தள்ள மனமில்லை. ஆர்வத்தோடு அவரை நெருங்கும் போது நண்பன் செந்தில் குமார் குறுக்கிட்டான்.

"டேய் முத்து; இப்பவே நாம லேட். இவரோட மெதுவா நடந்து போனா ஸ்டடி கிளாசுக்குப் போக முடியாமே பூசை வாங்கியாகணும்."

நண்பனின் எச்சரிக்கையால் முத்துவேலுவின் உறுதியைத் தளர்த்த முடிய வில்லை. நண்பன் ஓடிவிட முத்துவேலு அவரைக் கைப்பிடித்து அழைத்து வந்தான்.

இராமநல்லூரின் எல்லையை அடைய இன்னும் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருந்தது. அந்த நிலையில் சாலையை மறித்துக் கொண்டு ஒரு ஜீப். டிரைவர் 'பேனட்'டைத் திறந்து வைத்துக் கொண்டு என்னவோ வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

"தம்பி இங்கே கொஞ்சம் வாறியா?"


முத்துவேலு ஜீப்பை நெருங்கினான். அங்கே நாகரிக உடையில் அமர்ந்திருந்தவர் மிகவும் கனிவான குரலில், "வண்டியின் ரேடியேட்டர் சூடேறிப் புகையுது. பக்கத்தில் தண்ணீ கெடைச்சா கொஞ்சம் கொண்டு வரணுமே?" என்று தமது தேவையைப் பக்குவமாகத் தெரிவித்தார்.

எதையோ யோசித்தபடி ஒரு நிமிடம் தயக்கத்தில் ஆழ்ந்தான் முத்து.


"என்ன தம்பி, உன்னாலே முடியாதா?" என்று வினவியவரின் குரலில் ஏக்கம் தொனித்தது.

"அதெல்லாம் இல்லே. கண் தெரியாத இந்தப் பெரியவரை பஸ் ஸ்டாண்டிலே கொண்டு போய்ச் சேர்க்கணும். நானும் எட்டே முக்காலுக்குள்ளே ஸ்டடி கிளாசுக்குப் போயாகணும். அதே சமயம் உங்களுக்கு உதவி பண்ணாமே போறதுக்கும் என் மனசு கேட்கலே..." தயங்கினான் அவன்.

வண்டிக்குள் இருந்தவர் புன்



னகை தவழும் முகத்துடன் கீழிறங்கி வந்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். "நீ தயங்காமே போயிட்டு வாப்பா. தண்ணி வந்ததும் உன்னையும் இவரையும் வண்



டியிலே கொண்டு போயி பஸ் ஸ்டாண்டிலே இறக்கிடுறோம்" என்று ஆறுதலாகப் பேசினார். அந்த உறுதிமொழி கிடைத்தது தான் தாமதம். வாளியை வாங்கிக் கொண்டு சிட்டாய்ப் பறந்தான் அவன்.

ஜீப்பில் திரும்பி வந்து கொண்டிருக்கும் போதே அந்த நாகரிக உடை மனிதர் முத்துவேலுவின் படிப்பு, பெயர், பெற்றோர் போன்ற விவரங்களை எல்லாம் விசாரித்து விட்டு, பார்வையில்லாத அந்த மனிதருக்கு அவன் செய்த உதவியை வெகுவாகப் பாராட்டினார்.

ஆனால் யார் பாராட்டி என்ன? நல்லது செய்யப் போய் பள்ளிக்கு லேட் ஆனதால், கிள்ளு வாங்கியதுதான் மிச்சம்!

மணி ஒன்பதே முக்கால். வழிபாட்டுக்கான மணியின் முழக்கம் கேட்டு சிந்தனையிலிருந்து விடுபட்டு எழுந்தான் முத்துவேலு.

தமிழ்த்தாய் வாழ்த்து முடிந்ததும் எச்.எம். புதிதாக வந்திருந்த ஒருவரைக் கூடியிருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் வேறு யாருமல்ல. ஜீப்பில் வந்தவரேதான்! அவர்தான் - புதிதாக வந்திருக்கும் முதன்மைக் கல்வி அலுவலராமே! ஆச்சரியத்தால் முத்துவேலுவின் திறந்த வாய் மூடவில்லை.

மாணவர்களுக்கு அறிவுரை கூறத் தொடங்கிய அலுவலர், முதலில் முத்துவேலுவின் வகுப்பையும் பெயரையும் சொல்லி மேடைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். நடுக்கத்துடன் மேடையேறிய அவனைப் பார்த்ததும் தலைமையாசிரியரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

கண்பார்வை இல்லாத மனிதருக்கு அன்று காலை அவன் செய்த பேருதவியை வானளாவப் புகழ்ந்தார் கல்வி அலுவலர். பள்ளிக்கு நேரத்தோடு போக வேண்டிய இக்கட்டான சூழ்நிலையிலும், நடு வழியில் சிக்கிக் கொண்டு தவித்த தங்களுக்கு ஆர்வத்துடன் உதவ முன் வந்த அவனது தொணர்வையும் வெகுவாகப் பாராட்டினார். மற்ற மாணவ மணவியரும் முத்துவேலுவைப் பின்பற்றிப் பிறருக்குப் பயன் பட வாழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அது மட்டுமா? இறுதியில் அவர் வெளியிட்ட அந்தச் செய்திதான் பள்ளியையே பரவசத்தில் ஆழ்த்தியது.

ஆண்டு தோறும் மாவட்ட அளவில் வழங்குவதென்று ஏற்பாடாகியுள்ள 'மாணவத் திலகம்' என்ற விருதும் ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் முதன் முதலாக முத்துவேலுக்கு வழங்கப்படும் என்பதை அலுவலர் அறிவித்த போது, அங்கே எழுந்த கரவொலி பள்ளியையே அதிர வைத்து விட்டது.

கால்குலேட்டர் விடுகதை

இணைப்புக்காரன்

துணுக்கு துணுக்கு பட்டன்காரன்
கணக்கு கணக்கு காரியக்காரன்
எண்ணுக்கும் எண்ணுக்கும் இணைப்புக்காரன்
-யார் அவன்?

-பி.ஜான்சிராணி



கணித உலகின் தோழன்

கணித உலகின் தோழன்
கடமை தவறா நண்பன்
பட்டனைத் தட்டினால் வந்திடுவான்
சட்டென விடையைத் தந்திடுவான்
-அவன் யார்?

-மணிதாசன்

லேட்டில்லை


'கால்' இருந்தும்
நடக்கமாட்டான்!
'லேட்' இருந்தும்
லேட்டில்லை!
-அவன் யார்?

-கவிதா வீராசாமி

மாணவரின் நண்பன்!

கணக்கினிலே மேதையவன்
கையடக்கக் கருவியவன்
மாணவரின் நண்பனவன்!
மானிடனின் தோழனவன்!
அவன் யார்?

-கே. தீபா



அன்பான ஆசிரியர்

அதட்டல் உருட்டல் இல்லாத
அன்பான ஆசிரியர்!
அமைதியாகப் பைக்குள்ளே
அடங்குகின்ற ஆசிரியர்!
எப்போ கணக்குக் கேட்டாலும்
இன்முகத்தோடு சொல்லுவார்!
-யாரவர்?


-வாண்டுதாசன். ஆரணி



கணித்திடுவேன்!

கஷ்டமான
கணக்கையும்
கால் நொடியில்
கணித்திடுவேன்
-நான் யார்?

-பா.ஜெயக்குமார்



இணையில்லாக் கருவி

பிழையில்லா கணக்குப் போட
இணையில்லாக் கருவி
அரை நொடியில் விடையைத் தரும்
அற்புதக் கருவி - அது என்ன?

-எஸ்.ரம்யா



நீயே எல்லை!

நீண்ட நாள் கனவை
நிறைவேற்றியது உன் வருகை
அடித்தலும் திருத்தலும் இல்லை
நொடித்தலும் சலித்தலும் இல்லை
மனிதகுல வளர்ச்சியின்
மகத்துவத்திற்கு நீயே எல்லை
- யார் நீ?

-எ.நாகேஸ்வரன்



காத்திருக்கிறான்

கணக்குக் கேட்க திறனிருந்தால்
காத்திருக்கான் விடை சொல்ல
-அவன் யார்?

-பி.பிரேமா

எவனோ!

எண்கள் என்னும் பாடத்தில்,
எண்ணுகின்ற கேள்விக்கு
எண்ணாமல், என் அளவு நேரத்தில்
ஏற்ற பதில் தருபவன்!
-யாரவன்?

-பி.பரமசிவம்

பெட்டிக்காரன்

கைக்குள் அடங்கும் பெட்டிக்காரன்
கணக்கைத் திறப்பதில் கெட்டிக்காரன்!
-அவன் யார்?

-எஸ்.கே.சரவணன்



உன் கையில்...

தக்கோலம் என்ற ஊருக்குத் துறவி ஒருவர் வந்தார். அவருடைய எளிய தோற்றமும், முகமலர்ச்சியும் எல்லோரையும் கவர்ந்தது. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி துறவியை வணங்கினார்கள். "தாங்கள் இங்கேயே சில காலம் எங்களுக்குப் போதனைகள் வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளுக்குத் துறவியும் ஒப்புக் கொண்டார்.

துறவிக்கு ஒரு சிறிய வீட்டை ஒதுக்கினார்கள். நாள்தோறும் துறவி மக்களை அழைத்து நல்ல நல்ல போதனைகளைப் போதித்து வந்தார். இவரது போதனைகளைக் கேட்டுப் பலர் திருந்தினார்கள். இதனால் துறவியின் புகழ் எங்கும் பரவியது. துறவியைக் காண பல ஊர்களிலிருந்து மாட்டு வண்டிகளைக் கட்டிக் கொண்டு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். அந்த ஊரில் இருந்த ஒருவன் துறவிக்குக் கிடைக்கும் மரியாதையையும், எல்லோரும் அவரைப் புகழ்ந்து பேசுவதையும் கண்டு பொறாமை கொண்டான் அவரை எப்படியாவது பலர் மத்தியில் அவமானப்படுத்த வேண்டும் என்று ஒரு திட்டம் போட்டான்.

அவன் சிட்டுக் குருவி ஒன்றைப் பிடித்தான். அதைத் தன் இரு கைகளாலும் மூடிக் கொண்டான். துறவி தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றான். தன் மூடிய கையை அவரிடம் காட்டி, "இதற்குள் இருக்கும் குருவி உயிரோடு உள்ளதா? அல்லது இறந்து விட்டதா?" என்று கேட்டான்.

தான் உயிரோடு இருக்கிறது என்று சொன்னால் கைகளை நெருக்கிக் குருவியைக் கொன்று விடுவான். இறந்துவிட்டது என்று சொன்னால் கைகளைத் திறந்து விடுவான். சிட்டுக் குருவி உயிருடன் இருக்கும். ஆகவே எதைச் சொன்னாலும் தன்னைப் பொய்யாக்கும் திட்டத்துடன் தான் அவன் வந்திருக்கிறான் என்பது துறவிக்குப் புரிந்து விட்டது.

"குருவி உயிரோடு இருப்பதும், இறந்து விடுவதும் உன் கைகளில் தான் இருக்கிறது அப்பனே" என்றார் துறவி.

அவனுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் துறவியின் காலில் விழுந்து என்னை மன்னித்துவிடுங்கள்" என்றான்.

- தக்கோலம் அ. முஸ்தபா

புயல் பராணம்!




• புயலின் ராடர் படம் புயற் கண், மத்தியில் கறுமையாக உள்ளது.

மாரிக்காலம் என்றதுமே 'ஐப்பசி அடை மழை'; 'கார்த்திகை கன மழை' என்ற பழ மொழிகளும் புயல் பற்றிய கலக்கமும் எழுகிறது இல்லையா? பூகம்பம், பஞ்சம் போலவே இயற்கையின் சீற்றம்தான் புயல். அறிவியல் கண்டு பிடிப்புகள் புயல் பற்றியஉண்மைகளை அறியப் பெரிதும் உதவுகின்றன. அறிவியல் கண்டுபிடிப்புகளின் பயனாக புயல் எச்சரிக்கைத் திட்டங்களை எல்லா நாடுகளும் செயல் படுத்துகின்றன.

புயல் என்பது என்ன?

காற்று மண்டலத்தில், குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் அவ்வப் பொழுது ஏற்படுவது இயல்பே. இது ஆற்று நீரிலோ, பெருவெள்ளப் போக்கிலோ ஆங்காங்கே காணப்படும் சுழல் மாதிரியான நிகழ்ச்சியாகும். இந்தக் காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தை நோக்கி விரையும் காற்று பூமியின் தற்சுழற்சி விசையால் திசை மாற்றம் பெற்று, சுழலாக வீசுகிறது. 'புயல்' எனப்படுவது இதுதான். புயலுக்கு வேண்டிய நிலை நிறுத்தும் சக்தி நீராவியின் உள்ளே குவியும் வெப்பத்திலிருந்து வருவதால் (Latent heat) புயல்கள் கடலிலேயே பிறக்கின்றன. இம்மாதிரி சக்தி பெற்று, புயல் உருவாகக் கடல்நீரின் வெப்பம் குறைந்தது 27°C இருக்க வேண்டும். இத்தகைய நிலை அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலும், அரிதாக மே மாதத்திலும் வங்காளக் குடாக்கடலில் நிலவுகிறது. எனவே, இந்தப் பருவத்தில்தான் தமிழ்நாட்டைத் தாக்கும்

டாக்டர் டி.ஆர். சிவராமகிருஷ்ணன்



• இன்சாட் பிடித்த ஓர் வங்காளக் குடாக் கடல் புயல் படம். ஸ்பிரிங் வடிவ மேகத்தினைக் காண்க.

புயல்கள் பெரும்பாலும் உண்டாகின்றன. புயலை டைஃபூன், ஹரிக்கேன், விலிவில்லி என்று வெவ்வேறு பெயரால் அழைக்கின்றனர்.

இந்தியப் பகுதிகளில் உருவாகும் புயல்கள் வாயு மண்டலத்தில் 200 முதல் 1000 கி.மீ. குறுக்களவும், 10 முதல் 17 கி.மீ. உயர் பரிமாணமும் இருக்கவல்லது. இந்தக் காற்றமைப்பின் மொத்த வடிவமும் ஓர் உரல் போல் காணப்படும்.

புயலின் மையத்திற்கு 'புயற்கண்' என்று பெயர். இது மிக அமைதியான பகுதி. இங்கு மழை, காற்று இருக்காது. ஆனால் வெயில் அவ்வப் பொழுது இருக்கும். இதைச் சுற்றி 'கண்சுவர்ப் பகுதி' இருக்கும். இது சுமார் 50 முதல் 100 கி.மீ. அகலம் கொண்டது. புயலின் ஆபத்தான பகுதி என்பது இதுதான். காரணம் இங்குதான் பேய்க் காற்று, ஊழி மழை, பேரிடிமின்னல் ஆகியவை உள்ளன. ராடார் கருவியின் திரையில் காணப்பட்ட ஓர் புயலின் படம் இங்கே உள்ளது. இதில் ஸ்பிரிங் வடிவத்தில் உள்ள மேக அமைப்பு புயலின் தனிப்பட்ட சிறப்பாகும்.

புயலோடு கூடவே வரும் அழிவு சக்திகள் மூன்று. 1. பெருமழை, இதனால் ஏற்படும் பெரு வெள்ளம், நிலச்சரிவு ஆகியவை. 2. ஊழிக் காற்றினால் ஏற்படும் கட்டட இடிபாடுகளும், பயன்தரும் மரங்களின் வீழ்ச்சியும். 3. கடலோரப் பகுதிகளில் புயல் கரைகடக்கையில் ஏற்படும் கடலலைகள். இதைக் 'கடல் பொங்குதல்' என்று கூட அழைப்பார்கள். கரையோரப் பகுதிகளைத் துடைத்து எடுப்பதுடன் விளைநிலங்களில் உப்பு நீரைப் பாய்ச்சி நாசம் ஏற்படுத்துவது இப்புயல் அலைகளேயாகும். தமிழகத்தில் நாகைக்கும் பாம்பனுக்கும் இடைப்பட்ட பகுதி பெரும்பாலும் கடலலைகளால் பாதிக்க வல்லது. கடலோர ஆழம் குறைவாக இருப்பதே இதற்குக் காரணம்.

இன்று, இன்சாட் வான்கோள் புயல் எச்சரிக்கைக்குப் பேருதவி புரிகிறது. ஆயிரம் மைல்களுக்கப்பால் அந்தமான் அருகே கடலில் புயல் உருவான உடனேயே கண்டுபிடித்து, தொடர்ந்து அது எத்திசையில் நகர்கிறது, எப்படி வளர்ச்சி அடைகிறது என்பதை உடனுக்குடன் இன்சாட் அறிந்து காட்ட வல்லது. தவிர புயல் ஆபத்து எச்சரிக்கை அறிவிப்புத் திட்டத்திலும் (Cyclone Disaster Warning System) இன்சாட் வான்கோளின் பங்கு மகத்தானது. புயல் எச்சரிக்கை நிலையத்திலிருந்து எச்சரிக்கை அறிக்கை சங்கேத மொழியில் 'இன்சாட்'டுக்கு அனுப்பப்படுகிறது. கடலோர கிராமங்களில் உள்ள புயல் அழிவு தடுப்பு நடவடிக்கை திட்ட அலுவலகங்களுக்கு இவ்வறிக்கை அந்தந்த மொழிகளில் மணிக்கு ஒரு தடவை நேராக ஒலி பரப்பப்படுகிறது. இது தக்க நேரத்தில் புயல் ஆயத்த நடவடிக்கைகளுக்குப் பேருதவி புரிகிறது.

புயலின் போக்கை அறிய உதவும் 400 கி.மீ. தொலைவுக்கு செயல் ஆற்றல் உள்ள புயல் அறி ராடார் நிலையங்கள் சென்னையிலும், காரைக்காலிலும் செயல் படுகின்றன. புயல்

தாக்குவதற்கு 48 மணி நேரம் முன்பே துறைமுகம் மற்றும் அரசுத் துறைகளுக்கு முன் காப்பு நடவடிக்கை எடுக்கவும் எச்சரிக்கவும் இவை உதவுகின்றன. புயல், இயற்கையின் தவிர்க்க முடியாத சீற்றம் ஆதலால், அதை வரவேற்கவும், தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து முடுக்கி விடவும் நமக்குத் தெரிய வேண்டும். புயல் காலங்களில் வதந்திகளை நம்பாமல், ரேடியோ, தொலைக்காட்சி போன்றவை மூலம் வரும் எச்சரிக்கைகளை மட்டுமே கேட்டுச் செயல்பட வேண்டும். டார்ச், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, எரிபொருள், அத்யாவசிய உணவுப் பொருட்கள், குடிநீர் போன்றவைகளை நான்கு நாட்களுக்குத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். சில முக்கிய மருந்துகளையும் கைவசம் வைத்திருத்தல் நலம். புயல் அடிக்கையில் வெளியே செல்லக்கூடாது. தெரு மின் கம்பங்கள், அறுந்த மின் கம்பிகளைத் தொடக் கூடாது. புயல் வெள்ளத்தால் தொற்று நோய் பரவக் கூடுமாதலால் பாதுகாக்கப்பட்ட குடிநீரையே குடிக்க வேண்டும். தேவையானால் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ளத் தயங்கக்க கூடாது.

புயல் - சுவையான சில தகவல்கள்:

1. அரபிக் கடலை விட வங்காளகுடாக்கடலில் பிறக்கும் புயல்களின் எண்ணிக்கை அதிகம். குடாக்கடல் புயல்கள், அதிக வலுவானவை.

2. மிக உயர்ந்த காற்று வேகமும், மிக அதிகபட்ச உயரக் கடலைகளும் புயலின் வலப்பக்கத்தில் காணப்படுவதால், பெரும்பாலும் நிலப்பரப்பில் புயல் தடத்தின் வலப்பக்க அழிவுகள், இடப்பக்க அழிவுகளை விட சற்று அதிகமானவை.


3. இந்தியக் கடலில் பிறக்கும் புயல்கள் அட்லாண்டிக், பசிபிக் கடல்களில் பிறக்கும் புயல்களை விட பல மடங்கு வீர்யம் குறைந்தவை.

4. புயலின் மொத்த சக்தி கிட்டத்தட்ட 1000க்கும் அதிகமான அணுகுண்டுகளுக்கு இணையானது. ஆனால் அதில் 5க்கும் குறைவான சதவீதமே இயங்கு சக்தியாக மாறுகிறது என்பது இயற்கையின் கருணை.

5. புயலிலிருந்து வெளிப்படும் சக்தியை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்த முடியுமா என்பது பற்றிய ஆய்வுகள் தொடர்கின்றன. இதுவரை திட்டவட்ட முடிவு எதுவும் எட்டவில்லை.

6. 1979 ல் பசிபிக் கடலில் காணப்பட்ட ஓர் புயல் 2200 கி.மீ. அகலம் கொண்டிருந்தது!

• இன்சாட் விளக்கப்படம் - மசூலிப்பட்டிணத்தில் மையம் கொண்ட (7.5.90) புயல் வடிவம்.



"சார்... கேசவ் கணக்குப் போடல்லே சார்" என்றான் ஒரு மாணவன்.

"கேசவ், இங்கே வா... ஏன் போடல்லே...?" என்ற ஆசிரியர் அவனுடைய வீட்டுக் கணக்கு நோட்டை வாங்கிப் பார்த்தார். உடனே அவரிடம் ஆத்திரம். ஏன் தெரியுமா?

அந்த நோட்டில் பக்கத்துக்குப் பக்கம் ஒரே கேலிச் சித்திரங்களாக வரைந்து தள்ளியிருந்தான் கேசவ்.

"ஏன்டா இப்படி நோட்டை வீணடித்தாய்?" என்று அதட்டினார் ஆசிரியர். கேசவனிடம் பதில் இல்லை. எனவே அவர், "இப்படியெல்லாம் கேட்டால் நீ சரிப்பட மாட்டாய்... உன் அப்பாவிடம் நான் பேசிக்கறேன்... போய் உட்கார்..." என்று அவனை அனுப்பிவிட்டார்.

அன்று மாலையே ஆசிரியர் கேசவ் வீட்டுக்குச் சென்று விட்டார். நோட்டைக் காட்டிப் புகார் செய்தார். கேசவ் கல்வியில் கவனமின்றி இப்படி இருக்கிறானே' என்று கவலைப் பட்டார் அப்பா. அவனைக் கூப்பிட்டுக் கடிந்து கொண்டார்.

சங்கரன் பிறந்தது கேரளாவில் உள்ள 'காயம் குளம்'. நாள் 1902 ஜூலை 31.

கல்லூரிப் படிப்புக்குப் பின் சங்கர் பம்பாய் சென்றார். அங்கு மொரார்ஜி தேசாயின் செயலர் ஆனார். எந்த தேசாய் தெரியுமா? சமீபத்தில் சதம் போட்டு வாழ்ந்து மறைந்த அதே முன்னாள் பிரதமர் மொரார்ஜியேதான்! அப்போது ஓய்வு கிடைத்த போதெல்லாம் சங்கர் கார்ட்டூன்களை வரைந்தார். அவை 'பாம்பே க்ரானிகல்' ஏட்டில் வெளியாயின. அவர் பிரபலம் அடைந்தார்.

இந்திய கார்ட்டூன்

மகனை அங்கிருந்து அனுப்பிய அப்பா, "ஐயா, இந்தப் படங்களை உண்மையில் என் மகன்தான் வரைந்தானா...? நன்றாகத் தெரியுமா உங்களுக்கு...?"என்று கேட்டார் ஆசிரியரிடம்.

"ஆமாம். எல்லாம் அவன் கிறுக்கியவைதான்," என்றார் ஆசிரியர்.

"இதெல்லாம் கிறுக்கல் இல்லை சார்... இவற்றில், ஒரு தலைசிறந்த கார்ட்டூனிஸ்டுக்குரிய 'ஸ்ட்ரோக்'குகள் விழுந்துள்ளன... இத்தனை திறமை இருக்கிறதா என் மகனிடம்...!" என்று அதிசயித்தார் கேசவின் அப்பா

ஆசிரியர் சென்ற பிறகு மகனை அழைத்தார். "கேசவ், நன்றாகப் படி; அத்துடன் கார்ட்டூன்களையும் நிறையப் போட்டுப் பழகு; நீ சிறந்த கார்ட்டூனிஸ்ட்டாக வரலாம்" என்று ஊக்கப்படுத்தினார்.

அந்தக் கேசவ் தான், 'இந்தியக் கார்ட்டூன் உலகின் தந்தை' எனப்படும் சங்கர். நமது நாட்டின் தலைசிறந்த கார்ட்டூனிஸ்டாக மட்டுமல்லாது சிறந்த குழந்தை எழுத்தாளராகவும் சங்கர் விளங்கினார். அவருடைய முழுப் பெயர் 'கேசவ் சங்கர் பிள்ளை.' பிரபலம் அடைந்தது 'சங்கர்' என்ற பெயரில்.

டில்லியில் ஒரு ஏடு. 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்று பெயர். அதன் ஆசிரியர் சங்கரைத் தனது பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ட்டாக நியமித்துக் கொண்டார். இந்தியச் செய்தித் தாளின் முதல் முழுநேர கார்ட்டூனிஸ்ட் என்ற பெருமை அப்போது அவரை நாடி வந்தது. விடுதலைப் போராட்டம் பற்றிய அவருடைய கேலிச்சித்திரங்கள் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தின.

1948ல் அவர் 'சங்கர்ஸ் வீக்லி' என்ற பத்திரிகையைத்

ஜானகி மணாளன்

துவக்கினார். அதை நேருஜி தான் துவக்கி வைத்தார். அப்போது அவர் 'சங்கர் என்னை மறந்து விடாதீர்கள்' என்று கேட்டுக் கொண்டார். அதன் பிறகு சங்கர் நேருஜியைப் பற்றி நிறையக் கேலிச் சித்திரங்களை வரையத் தொடங்கினார். நேருஜிக்குக் குழந்தைகளிடம் இருந்த அன்பை அவரது கார்ட்டூன்கள் பிரதிபலித்தன. சங்கர் 1975ல் தனது சங்கர்ஸ் வீக்லியை நிறுத்தி விட்டார்.

குழந்தைகளின் ஓவியத் திறமையை



உலகின் தந்தை!

ஊக்குவிப்பதற்காக, சங்கர் 1953ல் ஒரு சர்வ தேச ஓவியப் போட்டியை நடத்தினார். அந்தந்த நாட்டில் குறிப்பிட்ட இடத்தில் குழந்தைகள் கூடி ஒன்றாக அமர்ந்து படங்களை வரைந்தனர். அதன் வெற்றியைக் கண்ட சங்கர் ஆண்டுதோறும் அந்தப் போட்டியை நடத்தினார். இப்போதும் அது நடைபெற்று வருகிறது.

குழந்தைகளுக்காக சங்கர் ஆற்றிய மூன்று பணிகளை யாருமே மறந்து விட முடியாது. 1965ல் 'சங்கர்ஸ் டால் மியூசியம் - அதாவது, பொம்மைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைந்தார். அதில் எண்பது நாடுகளைச் சேர்ந்த 5000க்கும் அதிகமான பொம்மைகள் உள்ளன.

அடுத்ததாகக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும் பொழுது போக்கிற்கும் பயன்படக் கூடிய புத்தகதங்களை அச்சிட்டு வெளியிடுவதற்காக 'சில்ட்ரான்ஸ் புக் ட்ரஸ்ட்' என்ற நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தினார்.

மூன்றாவதாக, 1967ல் நாட்டிலேயே மிகப் பெரிய குழந்தைகள் நூலகம் ஒன்றை நிறுவினார். அதில் 22 வெளிநாட்டு மற்றும் 11 இந்தியமொழிகளின் 16 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான ஏறத்தாழ 20 ஆயிரம் புத்தகங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

சங்கர் தனது இறுதிக்காலம் வரையில் இந்த மூன்று அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு தலை சிறந்த குழந்தை எழுத்தாளர் ஆவார். ஏராளமான சிறுவர் நூல்களை எழுதியுள்ளார்.

அவருடைய அரும்பணியைப் பாராட்டி நமது பாரத அரசு அவருக்குப் பத்மஸ்ரீ, பத்மபூஷன் மற்றும் பத்மவிபூஷன் ஆகிய உயர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

1989 டிசம்பர் 26ஆம் நாள் சங்கர் மறைந்தார்.

எழுத்துக் கூட்டி உரக்கப் படிக்க ஓர் ஈசாப் கதை

பொறு நண்பா!



ஒரு சலவைத் தொழிலாளி தன் வீட்டில் ஒரு நாயையும் கழுதையையும் வளர்த்து வந்தான். தினமும், அழுக்குத் துணிகளை மூட்டையாகக் கட்டி கழுதையின் மேல் வைத்துக் கட்டுவான். ஆற்றுக்கு ஓட்டிக் கொண்டு போவான். கூடவே நாயும் போகும். சலவைத் தொழிலாளி ஆற்றில் துணிகளைத் தோய்த்துக் காய வைப்பான். ஆற்றங்கரை ஓரமாக வளர்ந்திருக்கும் புல்லை அறுத்து வந்து கழுதைக்குப் போடுவான். கையில் கொண்டு வந்திருக்கும் சாதத்தை, நாய்க்கும் போட்டுத் தானும் உண்பான். துணிகள் காய்ந்ததும், அழகாக மடித்து வைத்து, மூட்டை கட்டுவான். கழுதை மேல் வைப்பான். வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு வருவான்.

ஒருநாள், துணிகளைத் தோய்த்து உலர்த்திய பிறகு, புல்லை அறுத்தான். கழுதைக்குப் போட்டான். தானும் சாப்பிட்டான். நாயைத் தேடினான். அதைக் காணவில்லை. அது எங்கேயோ ஊர் சுற்றப் போயிருந்தது. அதனால், நாய்க்கு உரிய பங்கை, பாத்திரத்தில் வைத்து மூடினான். அருகில் இருந்த கழுதையின் மேல் பாத்திரத்தை வைத்துக் கட்டினான். களைப்பு மிகுதியால் படுத்துத் தூங்கி விட்டான்.

ஊர் சுற்றிக் களைத்த நாய் திரும்பி வந்தது. எஜமான் தூங்கு

வதையும், கழுதை புல்லைத் தின்று கொண்டிருப்பதையும் தனக்கு உரிய சாப்பாடு பாத்திரத்தில் கழுதை மேல் இருப்பதையும் பார்த்தது. அதற்குப் பசி தாங்கவில்லை.

"நண்பா, கொஞ்சம் கீழே படுத்துக் கொள்ளேன். சாப்பாட்டை எடுத்துக் கொள்ளுகிறேன். பசி தாங்கவில்லை" என்று நாய் கழுதையைக் கேட்டது.

"உனக்கு நானா எஜமான்? கொஞ் சம் பொறு நண்பா. எஜமான் எழுந்து உனக்கு எடுத்துக் கொடுப்பார்" என் றது கழுதை. நாய் பலமுறை கெஞ்சிப் பார்த்தது. கழுதை மனமிரங்கவில்லை. நாய் பசியோடு கிடந்து தவித்தது.


அன்று இரவு, சலவைத் தொழி லாளி தூங்கியதும், ஓநாய் ஒன்று குடி சைக்கு வந்தது. வெளியே இருந்த கழுதை அதைப் பார்த்துக் கலங்கியது.

"நண்பா, நண்பா. ஓநாய் என்னைத் தின்ன வருகிறது. குரைத்துக் குரல் கொடு. எஜமான் தூக்கம் கலைந்து வந்து என்னைக் காப்பாற்றுவார்" என்று நாயிடம் வேண்டியது கழுதை.

"நண்பா, உனக்கு நானா எஜமான்? கொஞ்சம் பொறு. எஜமான் தூங்கி முடித்து எழுவார். ஓநாயை விரட்டியடிப் பார்" என்றது நாய்.

கழுதையின் கதையை ஓநாய் முடித்தது.

அவசியம் வரும் போது நாம் உதவி னால்தான், மற்றவர் நமக்கு உதவுவார் கள்.



தண்ணீர்

மூன்றாம் வகுப்பு முடிந்திருந்த மீனாட்சி கேட்டாள்.

"அப்பா, இந்தக் காக்கா ஏன் கறுப்பா இருக்கு? யாராவது அதுக்குப் பெயின்ட் அடிச்சிட்டாங்களா? ஒவ்வொரு பறவையும் ஏன் ஒவ்வொரு கலரா இருக்கு?"

"ஆரம்பிச்சிட்டியா கேள்வி கேட்கிறதை? நீ கேட்கிற கேள்வி சிலதுக்கு எனக்கே பதில் தெரியாது. ஒரே புழுக்கமா இருக்கு. இதுல நீ வேற" - அப்பா சலிப்பாய்க் கூறினார்.

"அதனால என்னப்பா? நான் இப்ப ஒரே ஓட்டமா ஓடிப்போய் மரத்தை ஆட்டிட்டு வர்றேன். காற்று பிச்சுட்டு சும்மா ஜோராய் வரும்" - மீனாட்சி சொன்னாள்.

"என்ன நீங்க சின்னப் பொண்ணுகிட்ட போய் மல்லுக்கு நிக்கறீங்க? இவள் பிறந்த நாளைக்கு எடுத்த பாவாடை சட்டையைத் தைக்கக் கொடுத்தோமே. வாங்கிட்டு வந்துடலாம் - மீனாட்சியை உள்ளே வச்சிட்டு வீட்டுக் கதவைப் பூட்டிட்டுப் போயிடலாம். சாவியை மீனாட்சியிடமே கொடுத்துடலாம். பாட்டி வந்தால் வீட்டைத் திறந்து உள்ளே வர வசதியாக இருக்கும்" - அம்மா கூறினாள்.

அப்படியே செய்தார்கள். மீனாட்சி மிகவும் தைரியமாக அவர்களை அனுப்பினாள். வீட்டினுள்ளே வந்து சாவியை ஓர் இடத்தில் மறைவாக வைத்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு வாசலில் 'கேட்' திறக்கும் சத்தம் கேட்டது. மீனாட்சி சற்றும் பயப்படாமல் எட்டிப் பார்த்தாள். யாரோ ஒரு முரட்டு ஆசாமி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

வழக்கமாகக் கேள்வி கேட்கும் மீனாட்சியின் அறிவு விழித்துக் கொண்டது.

"யாருப்பா அது? உனக்கு என்ன வேணும்? எங்க வீட்டு வாசல்லே உனக்கு என்ன வேலை?"

"பாப்பா, வீட்டிலே யாருமில்லையா? எனக்கு ரொம்ப தாகமா இருக்கு. கொஞ்சம் கதவைத் திறந்தால் உள்ளே வந்து தண்ணீர் குடிப்பேன். நல்ல பாப்பாதானே நீ? ஓடிப் போய் சாவியைக் கொண்டு வா!" - வந்திருந்தவன் தேனொழுகப் பேசினான்.

"தண்ணீர் குடிக்கத்தானே வந்தே? வீட்டுல யாராவது இருந்தால் என்ன? இல்லாட்டா என்ன? சாவி இருந்தால் நானே கதவைத் திறந்திருக்க மாட்டேனா?" - மீனாட்சி சொல்லிக் கொண்டே சமையலறையில் நுழைந்தாள்.

ஒரு தேங்காய் சிரட்டையை எடுத்து தண்ணீர் நிரப்பினாள். மறக்காமல் தன் கைவளையல்களைக் கழற்றி வைத்து விட்டுப் பிறகே கதவருகே சென்றாள்.

"இந்தா உனக்கு வேண்டிய தண்ணீர். குடிச்சுக்கோ" - அவள் சொன்னாள்.

"ஐயையோ, இதுலயா குடிக்கிறது? எனக்குப் பழக்கம் இல்லையே? நல்ல கிளாசிலே கொடுத்தால் என்னவாம்? ஆமாம், உன் கைவளையல் எங்கே?" - வந்தவன் கேட்டான்.

"உனக்கு வேண்டியது தண்ணீர்தானே? எதில் கொடுத்தால் என்னவாம்? வளையலை நீ கழட்



டிடுவேன்னு தெரிஞ்சுதான் நான் உள்ளேயே வெச்சுட்டேன். 'கிஃப்ட்'தான் என்றாலும், அதுவும் காசு கொடுத்து வாங்கினது தானே?"

"பாப்பா, நீ என்னை ரொம்பத்தான் கேள்வி கேட்கிறே? மரியாதையா என் பக்கத்துல வா!" - ஜன்னலின் உள்ளே கைவிட்டபடி சவால் விட்டான் வந்திருந்தவன்.

மீனாட்சிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவன் அருகில் வந்தாள். அவன் கையைப் பிடித்துப் பலம் கொண்ட மட்டும் 'நறுக்'கென்று கடித்துவிட்டாள்.

"ஐயோ, அம்மா, அப்பா, இந்தக் குட்டிச் சனியன் என் கையைக் கடிச்சிடுச்சே. ஆ.... உஸ்... வலிக்குதே...!" - வந்த திருடனுக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

அதேநேரம் வாசலில் சென்று கொண்டிருந்தவர்கள் ஓடிவந்து அந்தத் திருடனைப் பிடித்து நன்றாக அடித்து நொறுக்கினார்கள்.

அ. சு. கிருஷ்ணன்

தங்கள் வீட்டு வாசலில் கும்பல் சேர்ந்திருப்பதைக் கண்டு மீனாட்சியின் பெற்றோர் பயந்தார்கள்.

"மீனாட்சி, என்னம்மா ஆச்சு? ஏன் கேட்டைத் திறந்து வெளியே வந்தே? இந்த ஆளை ஏன் எல்லோரும் அடிக்கிறாங்க?" மீனாட்சியின் அம்மா கேட்டாள்.

"என்னம்மா, நீங்க என்னை மாதிரியே வரிசையாக் கேள்வி கேட்கிறீங்க?" என்று கேட்ட மீனாட்சி நடந்த எல்லாவற்றையும் கூறிக் கேள்விகளால் திருடனை மடக்கிய விதத்தைக் கூறினாள்.

திருடனைப் போலீசில் சேர்த்தார்கள். பல குழந்தைகளை ஏமாற்றி நகை திருடிய திருடனை மீனாட்சி பிடித்துத் தந்ததற்காக காவல்துறை பாராட்டியது. அரசுக்கு எழுதி வீரப்பதக்கம் பெற்றுத் தருவதாகவும் கூறினார்கள்.





வாத்தக்கா!

குட்டைக் கால் வாத்தக்கா
நெட்டைக் கழுத்து வாத்தக்கா
தட்டை அலகு வாத்தக்கா
பட்டு மேனி வாத்தக்கா
முட்டை இடும் வாத்தக்கா
தொட்டால் கத்தும் வாத்தக்கா
ஆடி நடக்கும் வாத்தக்கா
அசைந்து வரும் வாத்தக்கா!

- எம். சேக் உசேன், வடகரை.

காற்றின் தொண்டு

அலைகளெல்லாம் ஓய்ந்தன
சேவலெல்லாம் தூங்கின
விடியற்காலை விடிந்தது
காற்று வந்து பார்த்தது
தூங்கும் அலையைக் கண்டது
தட்டி எழுப்பிப் பார்த்தது
அலைகள் மெல்ல எழுந்தன
ஆர வாரம் செய்தன
சேவல் தூங்கி வழிந்தது
சென்று காற்று பார்த்தது
கோபம் கொண்டு அடித்தது
கூவி எழுப்பச் சொன்னது!

- என். விஜயசாரதி, திண்டுக்கல்.





ஜாங்கிரி

சுருண்ட வடிவ ஜாங்கிரி
சுவை மிகுந்த ஜாங்கிரி


இனிப்பு மிக்க ஜாங்கிரி
ஈயே மொய்க்கா ஜாங்கிரி

தின்னத் திகட்டா ஜாங்கிரி
தனித்த சுவையாம் ஜாங்கிரி

சிவப்பு வண்ண ஜாங்கிரி
ஜீரா சொட்டும் ஜாங்கிரி

விருந்துக் கழகு ஜாங்கிரி
வேண்டித் தின்போம் ஜாங்கிரி!

- ச. அருண், விழுப்புரம்.



கிளிகளே!

வண்ண வண்ணக் கிளிகளே
வானில் பறக்கும் கிளிகளே!

பச்சை வண்ணக் கிளிகளே
பறந்து செல்லும் கிளிகளே!

நன்கு பேசும் கிளிகளே!
நாங்கள் விரும்பும் கிளிகளே!

பழத்தைக் கொத்தும் கிளிகளே
பாசம் மிக்க கிளிகளே!

ஆருடம் பார்க்கும் கிளிகளே
அழகு பச்சைக் கிளிகளே!

அழைத்தேன் வாராய் கிளிகளே!
அருகில் அமர்வீர் கிளிகளே!


- எம். முகம்மது சிக்கந்தர்,
காரைக்கால்.

கடிகாரம்

நேரம் காட்டும் கடிகாரம்
நாங்கள் பார்க்கும் கடிகாரம்
கரங்கள் மூன்று கடிகாரம்
கணக்காய் எழுப்பும் கடிகாரம்

சுவருக்கு அழகு கடிகாரம்
சோர்வே இல்லா கடிகாரம்
எவரும் வெறுக்கா கடிகாரம்
எங்கும் நிறைந்த கடிகாரம்

- வெ. இராஜா, காரைக்கால்.



ஊர்வலம்



உள்ளம் என்பது தூய்மையடா
உறையும் இறைவன் இல்லமடா
அன்பு உள்ளம் சொர்க்கமடா
ஆன்றோர் இசைத்த கீதமடா
உதவும் உள்ளம் கொண்டிடடா
உலகை உயர்த்த உதவுமடா

- நரேந்திரன் அனுஜன், ஸ்ரீலங்கா.
(தொடர்பு முகவரி இல்லை)

குரங்கு



குட்டிக் குட்டிக் குரங்கு
குறும்பு மிக்க குரங்கு

கையில் உள்ள பொருளை
கண்டு பிடுங்கும் குரங்கு!

அங்கும் இங்கும் ஓடும்
அந்த ரத்தில் ஆடும்

பழத்தை சுவைத்துத் தின்று
பாங்காய் தோலை வீசும்

மாத்தின் மீது ஏறும்
மாங்காய் பறித்து உண்ணும்!

- கே. பழனிச்சாமி,
கெட்டிச் செவியூர்

வண்ணத்துப்பூச்சி

வண்ணத்துப் பூச்சி பறக்குது
வானில் சிறகை விரிக்குது
வண்ண மலர்களில் அமருது
விரும்பித் தேனைக் குடிக்குது

சிறகில் எத்தனை வண்ணங்கள்
சித்திரக் கோலப் புள்ளிகள்!
பறந்து அதுபோல் பறக்கவே
பயிற்சி ஏதும் இருக்குதா?

- த. திவாகரன், நெய்வேலி.





குதிரை

குதிரை நல்ல குதிரை
கொள்ளு தின்னும் குதிரை
அதிக வேகம் ஓடும்
அழகு மிக்க, குதிரை!

வண்டி கட்டி விட்டால்
விரைந்து செல்லும் குதிரை
சண்டித் தனம் செய்யா
சொகுசுப் பயணக் குதிரை!

எத்தனை பேர் வரினும்
இழுத்துச் செல்லும் குதிரை
இத்தரை மேல் இதுபோல்
எங்கும் காணா குதிரை!

- பொன் குமார், சேலம்.



கொக்கு மாமி

கொக்கு மாமி கொக்குமாமி
கால் வலிக்குதா?

அணிலண்ணா அணிலண்ணா
அசதி தீர்ந்ததா?

யானை மாமா யானைமாமா
ஏற்றம் இறைக்கவா?

பாம்பண்ணா பாம்பண்ணா
பாடி ஆடவா?

குயிலம்மா குயிலம்மா
கூவப் போவோமா?

கிளியக்கா கிளியக்கா
கிட்ட வரட்டுமா?

- எம். ஓய். மஹ்ரீன் அபுபக்கர்,
காரைக்கால்.

ஒற்றுமை

ஒற்றுமை என்பது ஒழுக்க நெறி
அதுவே உலகில் அன்புநெறி

கல்வி என்பது பண்பாகும்
கற்றவர் போற்றும் கலையாகும்

தாழ்வு என்பது நோயாகும்
தகர்த்தால் எதுவும் கைகூடும்

இந்து முஸ்லிம் கிருத்துவர்கள்
இவர்கள் நமது சோதரராம்



இந்த எண்ணம் மாறாமல்
இணைந்து வாழ்ந்து உயர்வோமே!

- கே. செந்தில்குமார்,
நாகை மாவட்டம்.

கார்டு

பதினைந்து காசு டிக்கெட்டில்
பலபல ஊரு பறப்பவனாம்!
எதையும் மறுக்கா பண்பாளன்
எவர்க்கும் உதவும் குணசீலன்

விலையே கூட்டாப் பொருளாளன்
வறியோர் விரும்பும் நல்லாளன்

விலை மதிப்பில்லா அன்பாளன்
வாழ்த்து வசவு ஏற்பாளன்

குத்தும் கூட வாங்கிடுவான்
குற்றம் குறைகள் இல்லாதவன்
கார்டு என்பது அவன் பெயராம்
கடமை ஆற்றல் அவன் சிறப்பாம்!

- எம். கே. வேங்கவேல், சேலம்.



வகுப்புத் தலைவன் என்ற முறையில் எவ்வளவோ கவனமாகவும், விழிப்புணர் வுடனும் இருந்தும் வகுப்பில் தொடர்ந்து நடக்கும் சின்னச் சின்னத் திருட்டுகளைக் கண்டுபிடிக்க இயலவில்லையே என்று மிகவும் வெறுப்பாக இருந்தது பாலாவிற்கு.

புத்தகம், பேனா என்று ஆரம்பித்த திருட்டு இன்று இரண்டு பேருடைய ஜியா மெட்ரி பெட்டிகளைக் காணவில்லை என்ற நிலைக்குப் போய் விட்டது! அதுவும் புத்தம் புதியவை! கணித ஆசிரியர் இன்றிலிருந்து ஜியாமெட்ரி நடத்தப் போவதாகக் கூறி யிருந்தார். அதனால் எல்லோரும் ஜாமெண்ட்ரி பாக்ஸ்ஸுடன் வந்திருந் தனர். ராஜனும், ஜார்ஜும் புதிதாகவே வாங்கி வந்திருந்தார்கள். அதைத்தான் காண வில்லை!

ஜியாமெட்ரிபாக்ஸைப் பறிகொடுத்த ராஜனும் ஜார்ஜும் ஆசிரியரிடம் புகார் செய்தனர். பொறுப்பற்றவன் என்ற பொரு ளில் வகுப்புத் தலைவனான பாலாவைக் கடு மையாகவே கடிந்து கொண்டார் ஆசிரியர்.

வகுப்பில் முதல் ரேங்க் எடுப்பவருக்குத் தான் வகுப்புத் தலைவன் பதவி என்பது அந்தப் பள்ளியில் கடைபிடிக்கப்படும் விதி. அந்த அடிப்படையில்தான் பாலா வகுப்புத் தலைவனானான். வகுப்புத் தலைவன் என்பதே ஒரு கௌரவம். அதை ஒருபோதும் இழந்து விடக் கூடாது என்ற முனைப்பில் மேலும் மேலும் உற்சாகமாய் முயன்று படித்து அந்த பதவியைத் தக்க வைத்துக் கொண்டான். ஆனால், இன்று கணித ஆசி ரியர் அவனைப் பொறுப்பற்றவன் என்று திட்டிய போது அந்தப் பதவி மீதே அவ னுக்கு வெறுப்புத் தட்டியது.

வகுப்புத் தலைவன் என்ற முறையில் பாலாவுக்கு எல்லா மாணவர்களைப் பற்றி யும் தெரியும். இப்போது கூட அந்த வினோத், ராமு மீதுதான் அவனுக்கு சந் தேகம். ஒவ்வொரு வகுப்பிலும் இரண் டாண்டு மூன்றாண்டு என்று மெதுவாய் வந்ததால் இப்போது அந்த வகுப்பில் அவர் கள்தான் 'பெரிய' மாணவர்கள். ஒரு சினிமா விடாது பார்ப்பவர்கள். அடிக்கடி பிரச்னை கொடுப்பவர்கள். என்றாலும் எந்தவிதமான அடிப்படை ஆதாரங்களும் இல்லாமல் வெறும் யூகத்திலேயே எப்படி அவர்களைப்

மு. நடராசன்




பற்றி ஆசிரியரிடம் புகார் செய்வது!

"என்னடா கணக்கு ஆசிரியர் திட்டியது ரொம்ப ரோஷமா இருக்கா? விடுடா, பல நாள் திருடன் ஒருநாள் கண்டிப்பாக அகப் படுவான்"" என்று நண்பன் வெங்கட் தேற் றியது பாலாவுக்கு ஆறுதலாயிருந்தது.

இதை

"நம்ம என்.எஸ்.எஸ். (நாட்டு நலப் பணித் திட்ட) ஆசிரியர் இந்த வாரம் நம்ம இரண்டு பேருக்கும்தான் 'முறை' போட்டிருக்கார். நினைவிருக்கில்ல? நாளைக்குக் காலையில ஒன்பது மணிக்கெல்லாம் வந்துடு" – நினைவு படுத்தி விட்டுச் சென்றான் வெங்கட்.

வார விடுமுறை நாட்களில், என். எஸ்.எஸ். மாணவர்களில் இரண்டு பேருக்கு 'முறை' போட்டு வரச் செய்து, பள்ளியில் செடி கொடிகளை வெட்டி அழகுபடுத் துவது, மைதானத்தில் கிடக்கும் குப்பை களை அப்புறப்படுத்தி சுற்றுப்புறத்தைத் தூய் மைப்படுத்துவது போன்ற பொதுவான



காரியங்களை பொறுப்பாய்ச் செய்வார்கள்.

அன்று புதிய கன்றுகளை நடவேண்டியிருந்ததால் மைதானத்தில் குழிகளைத் தோண்டும்படி பாலாவிற்கும் வெங்கட்டிற்கும் உத்தரவிட்டிருந்தார் ஆசிரியர். அதன்படி குழியைத் தோண்டிய போது



'டன்' என்று ஏதோ உலோக சத்தம் கேட்கவே மண்வெட்டியைக் கீழே போட்டு விட்டு கைகளால் பதமாய்த் தோண்டிய போது, கிடைத்த அந்தப் பொருளை ஆச்சரியத்தோடு பார்த்தான் பாலா.

"வெங்கட் இங்கே வாயேன்" என்று அவனையும் அழைத்துக் காட்டினான்.

ஆம்! ஒன்றன் கீழ் ஒன்றாக இரண்டு ஜாமெட்ரி பெட்டிகள்! புத்தம் புதியவை! காகிதத்தில் சுற்றப்பட்டு அங்கே புதைத்து வைக்கப்பட்டிருந்தன! கண்டிப்பாக அவை ராஜா, ஜார்ஜ் பறிகொடுத்தவையாகத்தான் இருக்க வேண்டும்.

இருவரும் ஆசிரியரிடம் சென்று விஷயத்தைக் கூறினர்.

"பெட்டிகளை எடுத்துக் கொண்டு, குழியை பழையபடி மூடி விடுங்கள். மறைந்திருந்து கவனிக்கலாம். திருடிப் புதைத்த திருடன் கண்டிப்பாக இவை களை எடுத்துக் கொண்டு போக வருவான்" என்றார் ஆசிரியர்.

அடுத்த நாள் காலை, பள்ளி தொடங்குவதற்கு இரண்டு நேரத்திற்கு முன் வினோத்தும் ராமுவும் அங்கே வந்தனர். சரியாக அதே இடத்தில் குழிதோண்டினர்.


இருவர் முகத்திலும் கலவரமும், ஏமாற்றமும் நிறைந்தது.

"இதே இடம்தான்டா. நமக்கு மேலபலே திருடன் எவனோ இருக்கான் போல இருக்கே!" என்றான் வினோத்.

ஆசிரியர் கையும் களவுமாகப் பிடித்தார்.

"சினிமா ஆசை இப்படிச் செய்யத் தூண்டியது சார். புது சினிமா வெளியாகிறது. அதுக்கு ரிசர்வ் பண்ணத்தான் பணமில்லாம ஜியாமெட்ரி பாக்ஸைத் திருடினோம். இனிமே இப்படித் திருட மாட்டோம் சார்" என்று இருவரும் அழுதனர்.

பாலா தலைநிமிர்ந்து நடந்தான்.



பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.